சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

தமிழ் நாட்டின் தேசிய கவி.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்)

கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாசம், தேசாவேசம், இயற்கை ரசனை இவைகளை யறிய இதைவிட வேறு சந்தர்ப்பம் வாய்க்கப் போகிறதா?

கிரௌன் $\frac{1}{8}$ சைஸ் கிளேஸ் பதிப்பு.

240 பக்கங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ 1.

தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

“பாரதி”

ஓர் மாதப் பத்திரிகை.

வருட சந்தா:

உள்நாடு ரூ 2-0-0 or 3 ஷிலிங். வெளிநாடு ரூ. 3-0-0 or 5 ஷிலிங்.

ஜீவிய சந்தா ரூ. 50.

போஷக சந்தா ரூ 100 முதல்.

“பாரதி” பைண்ட் வால்யம்.

நேர்த்தியான காலிகோ-கில்ட் பிரிண்ட்.

2-ம்	வருட வால்யம் 1-க்கு	விலை	ரூ. 2...8...0
3-ம்	,,	,,	ரூ. 2...8...0
4-ம்	,,	,,	ரூ. 2...8...0
5-ம்	,,	,,	ரூ. 2...8...0

“பாரதி” சந்தாதாரர்களுக்குத் தபாற் செலவு இனாம்.

மானேஜர், “பாரதி” ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா [illegible]. இந்தியா.

“பாரதி”யின் விளம்பர விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு ரூ	10—0—0
,,	,,	$\frac{1}{2}$-க்கு	,,	5—8—0
,,	,,	$\frac{1}{4}$-க்கு	,,	3—0—0
கவர்	,,	2 & 3	,,	15—0—0
,,	,,	4	,,	20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும். நீண்டகால விளம்பரத்திற்கு, மானேஜருக்கு எழுதவும்.

இங்கே கிடைக்கும் நூற்கள்.

நமது சொந்தப் பிரசுரங்கள்:—

1.	சோவியத் ருஷியா	....	1—4—0
2.	துர்க்கா தாஸ் (உயர்ந்த நாடகம்)	...	1—4—0
3.	சுப்ரமண்ய பாரதியார்	...	1—0—0
4.	ஜான்ஸி மஹாராணி	...	0—2—0
5.	போலந்து நாட்டின் சுதந்திரம்	...	0—1—0

பிற பிரசுரங்கள்:—

6.	நெப்போலியன்	...	0—4—0
7.	பனத சங்கரி (நாவல்)	...	1—0—0
8.	முத்தண்ணு ,,	...	1-12—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

மானேஜர், "பாரதி" ஆபீஸ்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா. S. I.

அபிமன்யு

திரு. V. சாமிநாத சர்மா எழுதிய
ஓர் சிறந்த சரித்திர நாடகம்.

சமீபத்திலேயே வெளிவந்ததாகும்.
பழைமையிலே புதுமையைப் புகுத்தி, வாலிபர்களின்
உற்சாகத்தை வளர்க்கத் தக்க—கடமையை
யுணர்த்தத் தக்க அருமையான நாடக நூல்.

விலை 0—8—0. தபாற் செலவு வேறு.

மானேஜர், "பாரதி" ஆபீஸ்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா, S. I.



சிறந்த செந்தமிழ் மாலிகை.

பொருளடக்கம்.

மாலை 6. பவஹு கார்த்திகை—மார்கழிமீ மணி 8 & 9.

தொடர் எண்.		பக்கம்.
1.	ஏழைக் குடியானவன் ஐயே!— பண்டித ஜனப். K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்	481
2.	ஸ்ரீஜத் நாரிமன் வரவேற்புப் பிரசங்கம்— ...	483
3.	ஜப்பானில் நவ யுகம்—"சர்தார்"	490
4.	ஸ்ரீஜத் இராஜேந்திரரின் பேருரை—	496
5.	சென்னைக் கடிதம்—(மு. வேலி)	513
6.	ஹென்றி போர்டு— திரு. கே. வீ. எஸ். வாஸ் அவர்கள், B. A., (Hons)	516
7.	மனமும் அதன் தொழிலும்— பண்டிதை ஸ்ரீமதி பத்மாசனி அம்மாள் அவர்கள்	530
8.	வரப்பிரசாதம்—"சர்தார்"	533
9.	மனிதர் கடமை—(மாஜினி)	536
10.	அன்பின் வளர்ச்சி—திரு. என். வேங்கடரமணன் அவர்கள்	541
11.	விதவையின் கண்ணீர்—திரு K. வெங்கட ராவ் அவர்கள்	544
12.	ஹரிஜனங்களின் பொருளாதார நிலைமை— திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A., ...	549
13.	கிராம ஆராய்ச்சி—திரு. O. P. தேசிகன் அவர்கள் ...	553
14.	லீலாவதி (சிறு கதை)—திரு. S. K. சாமி அவர்கள் ...	559
15.	ஆராய்ச்சி மேடை—	566
16.	ஆசிரியக் குறிப்புகள்—	671

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

2400

OFFICE OF THE REGISTRAR OF ... 1-FEB 1935 MADRAS

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

மாலை 6	பவ-கார்த்திகை 1934 நவம்பர்-டிசம்பர்மீ	மணி 8

ஏழைக் குடியானவன் ஐயே!

பண்டித ஜனாப் K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

பண்ணை தனில் நாள்முழுதும் பாடுபட்டே—ஒரு
பலனுமில்லாது நாங்கள் வாடுறோமையா.
மண்ணை நம்பித் தானுழுது நட்டபயிர்—கால
மாரியின்றிச் சாவியாகி விட்டதேஐயா. 1.

குத்தகை கொடுக்கும்வழி காணவில்லை—எங்கள்
குடும்பம் நடத்தும்வழி காணவில்லை
கத்தும் சிறுவர்களைத் தானமர்த்தி—ஊட்டும்
கஞ்சிக்கு வழியொன்று காட்டுவீரையா. 2.

வட்டிசெம்பு தட்டுமுட்டு உண்ணுங்கலங்—தன்னை
வைத்தே பலரிடத்தும் பொருள்வாங்கி
முட்டுவழி தானடத்தி விளைந்த நெற்கள்—எரு
முட்டைதட்டுஞ் சாவியாகி விட்டதேஐயா. 3.

மாட்டுக்கிருந்த தீனிதன்னை விற்ருேம்—கொண்ட
மனைவி நகைகள் துணிமணிகள் விற்ருேம்
காட்டில் விளைந்த பலன்தன்னையும் விற்ருேம்—குத்த
கைக்கடன் கட்டும்வழி காணேமையா. 4.

வீட்டுக்குச் சோற்றுக்கில்லை விதையுமில்லை—கூரை
வேய்வதற்கே கூளம் மிஞ்சவோவில்லை
நாட்டுக்கு ளெப்படி நானுழுதொழிலால்—வாழ்
நாளைக் கடத்தும்வழி சொல்வீரையா. 5.

பருவமறிந்த பெண்கள் வீட்டிலுண்டும்—அதைப்
பார்த்துப் பார்த்துமனம் வேகுதையா
தருணத்தில் கல்யாணம் செய்வதற்கே—செல்லாத்
தம்பிடிகூட மிச்சமில்லையே ஐயா. 6.

'உழுதுண்டு வாழ்வதற்கே ஒப்பில்லை'யென்றே—நூல்கள்
உரைத்த மொழிதவறி விட்டதெங்கள்பால்
பழுதுண்டு வேருேர் பணிக்கேயென்ருல்—அதைப்
பண்ணும் வகையின்றிப் பரிதவித்தோமையா. 7.

பாக்கிக் குத்தகைக்காகச் சென்றபோகத்தில்—நோட்டுப்
பாண்டெழுதித் தந்ததொகை செல்லவில்லை
சாக்ஷிகள்சொல அசல்வட்டி தீர்ப்பாய்க்—கோர்ட்டின்
ஜப்திவாரண்டு கண்டே தவிக்கிருேமையா. 8.

கருணையில்லாத எங்கள் பண்ணைஎஜமான்—நஷ்டங்
கண்டுங் காணுதவர்போல் வீட்டிலிருக்குந்
தருணத்தில் எங்கள் கஷடந்தன்னைச் சொல்லிக்—காலில்
சாஸ்டாங்கஞ் செய்தும் பலனில்லையே ஐயா. 9.

கண்ணெனவே நினைத்துக் கழனிதன்னைத்—தினங்
காத்தேயலையு மெங்கள் கஷ்டங்கண்டே
பண்ணை முதலாளிகள் மனதிரங்கும்—வகை
பண்ணிஞலாகாதோ "பாரதி"யே. 10.

ஸ்ரீஜத் நாரிமன் வரவேற்புப் பிரசங்கம்.

பம்பாயில் கூடிய 48-வது காங்கிரசின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ நாரிமன் செய்த பிரசங்கத்தின் சாரமாவது:—

சகோதர சகோதரிகளே! நண்பர்களே!

வரவேற்புக் கமிட்டி சார்பாகவும், பம்பாய் வாசிகள் சார்பாகவும் காங்கிரஸ் பிரதிநிதிகளை நான் வரவேற்கிறேன். பம்பாயில் காங்கிரசின் விசேஷக் கூட்டம் நடந்து 16 வருஷகாலமாகிறது. இந்த 16 வருஷங்களில் தேசத்தில் ராஜீய முன்னேற்றம் வெகுவாக ஏற்பட்டிருக்கிறது. 1918ல் நடந்த விசேஷக் காங்கிரசிலும் அக்கால பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு ஆலோசித்திருந்த அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. அதற்கு முன் வருஷத்தில்தான் இந்தியா மந்திரியாக விருந்த மிஸ்டர் மாண்டேகு இந்தியாவுக்கு சுயாட்சி அளிப்பதாக வாக்களித்து, இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தார். அவருடைய யாதாஸ்தின் பேரில் சீர்திருத்தத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. அச் சீர்திருத்தங்கள் அதிருப்திகரமானவை யென்று தேசிய சபை தீர்மானித்தது. தேசிய எதிர்ப்பைக் கவனியாமல் அரசியல் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதன் மூலம் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளால் எதிர்பார்க்கப்பட்ட அமைதி ஏற்படவில்லை. இச் சட்டத்தில் 10 வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் சீர்திருத்தங்கள் செய்யப்படுமென்று வாக்களிக்கப்பட்டிருந்தது. அவ் வாக்குறுதியை யொட்டி, எண்ணிறந்த கமிஷன்களும் கமிட்டிகளும் இந்தியாவுக்கு வந்து தங்களுடைய யாதாஸ்துகளை சமர்ப்பித்து விட்டன. மூன்று ஆடம்பரமான ஸர்வகக்ஷி மகாநாட்டுக் கூட்டங்களும் நடந்தன. இவைகளுடைய வேலைகளின் பயனாக, புதியதோர் சீர்திருத்தத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஏகாதிபத்ய ரதத்தின் சக்கரத்தில் இந்தியாவைக் கெட்டியாகப் பிணைக்கும் இத் திட்டத்தைத் தேசம் மீண்டும் ஒருமிக்க எதிர்க்க வேண்டியது அவசியமாகும்.

*　　*　　*

தற்கால நிலைமை

1918ல் நடந்த பம்பாய் காங்கிரசில் மிதவாதிகளின் ஆதிக்கம் அதிகமா யிருந்தது. ‘பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் சுய ஆட்சி’ என்பதே அவர்களுடைய கோரிக்கையாகும். விண்ணப்பங்களிலிருந்து கண்டனங்கள் வரையிலுமே அவர்களுடைய ஆயுதங்களாக விருந்தன.

அந் நிலைமையிலிருந்து இப்பொழுது நாம் வெகு தூரம் முன்னேறி விட்டோம். நமது நோக்கம் 'பூரண சுயராஜ்யமாகும்.' விண்ணப்பங்களைக் கைவிட்டு விட்டோம் நியாயமானதும் அமைதியுள்ளதுமான நேரடியான முறைகளை ஏற்றுவிட்டோம். இம் முறைகளைக் கையாள்வதில் பம்பாய் முன்னணியில் நின்றிருக்கிறது. மாண்டேகு சீர்திருத்தங்களுக்குப் பிறகு காந்திஜி தமது நிகரற்ற சத்யாக்கிரஹ ஆயுதத்துடன் ராஜீய உலகத்தில் பிரவேசித்தார். 1920ல் நாகபுரியில் அவருடைய முறை அனுசரிக்கப்படுமுன் சத்யாக்கிரஹம் நிறுத்தப்பட்டு 8 வருஷ காலமாகத் தேசமானது சத்யாக்கிரஹப் போராட்டத்துக்குத் தயாராகியது. 1929 முடிவில் சுயராஜ்யம் பெற தேசம் முன்வர வேண்டுமென்று காங்கிரஸ் அழைத்தது. பம்பாயில் சிறந்த சத்யாக்கிரஹ வெற்றிகளேற்பட்டன. 1920ல் வேல்ஸ் இளவரசர் பஹிஷ்காரம், திலகர் ஸ்வராஜ்ய நிதி சேகரிப்பு, மகத்தான சட்ட விரோதமான ஊர்வலங்கள், பொதுஜன சாத்விகப் போராட்டம் முதலியவைகள் பொதுஜன அபிப்பிராயங்களை ஒன்று திரட்டின. போலீசாரின் பலாத்காரப் பிரயோகத்தைக் காங்கிரஸ் தொண்டர்கள் பொறுமையுடன் சகிக்கவும், படிப்படியாகச் சத்தியாக்கிரஹப் போராட்ட முறைகள் விஸ்தார மடைந்து வந்தன. மறியலும் பஹிஷ்காரமும் மற்றொரு பக்கம் கவர்ன்மெண்டு சக்திகளை மடக்கிக்கொண்டு வந்தன. இவைகளைக் கவர்ன்மெண்டார் பலாத்காரத்தால் அடக்கினர். ஆனால் அவ்விதம் அவர்கள் செய்தபோதெல்லாம் காங்கிரசுக்குப் பலம் அதிகரித்தது. நூற்றுக் கணக்கானவர்கள் அடிபட்டபோதிலும் ஆயிரக் கணக்கானவர்கள் முன் வந்தனர். பற்பல வகுப்புகளும் பற்பல மதங்களும் அடங்கிய பம்பாய் ஒரே மனிதன் போல் நடந்துகொண்டது. அப் போராட்டங்களில் உயிரிழந்தவர்கள்தான் ஹரி ஜிவன் லால்ஜியும், பாபு கானுவும். இவ்வித வெற்றிகள் பெருமிதமான ஆற்றலாலும், தெளிவான நோக்கத்தாலும், திறமான அதிகாரத்தாலும் ஏற்பட்டவை. பம்பாய் ஸ்திரீகளும் இப் போராட்டத்தில் முழு ஊக்கத்துடன் இலங்கியது வெற்றிக்கு மற்றொரு காரணமாகும். சிறுவர்களடங்கிய வானர சேனையும் பெரியவர்களுக்கு வழிகாட்டியாக விருந்தது. காங்கிரஸ் புல்லடீனும் வெற்றிகரமாகக் கடைசிவரையில் பிரசுரிக்கப்பட்டு வந்தது. காங்கிரஸ் செய்திகள் ரேடியோ மூலமும் தெரிவிக்கப்பட்டது. மற்றொரு பெரிய வெற்றியாகும். 1930ல் நடந்த போராட்டம் காந்தி–இர்வின் உடன்படிக்கையுடன் முடிந்தது. அதனால் நிரந்தர சமாதான மேற்படுவதற்குப் பதிலாக 1932ல் மீண்டும் கிளர்ச்சி யாரம்பித்தது. கவர்ன்மெண்டார் இதற்காக முன் ஜாக்கிரதையாகவே இருந்துவிட்டார்கள். சர்வகட்சி மகாநாடு முடிந்தவுடன், கவர்ன்மெண்டால் தயாரிக்கப்பட்ட போராட்ட வலையில் மீண்டும் தேசம்

அகப்பட்டுக் கொண்டது. ஜனுப் அப்துல் காபர்கான், பண்டித ஜவஹர்லால் ஆகியோர் சிறையிலிடப்பட்டனர். அவசரச் சட்டங்கள் எரிமலையிலிருந்து வரும் பிரவாகம் போல் வெளிவந்து காங்கிரஸ் ஸ்தாபனங்களை மூழ்கடித்தன. இரண்டு வருஷ காலம் காங்கிரஸ்காரர்கள் தங்களாலியன்ற வரையில் போராடினுர்கள். ஆறு மாதங்களுக்குப் போராட்டம் சரியாக விருந்தது. பிறகு காங்கிரசில் சேராதவர்களின் துரோகம் வெற்றியைத் தவிர்த்தது. படிப்படியாகக் காங்கிரஸ்காரர்கள் விட்டுக் கொடுத்தனர்.

அடக்குமுறைக்குத் தூண்டிலாகத் தொங்கலாடிச் சீர்திருத்தங்கள் சிறுகச் சிறுக மறைந்தன. சத்தியாக்கிரஹ சூரியன் அஸ்தமிக்கவே, சீர்திருத்தங்களிலிருந்த பிரகாசம் மங்கி இருள் சூழ்ந்தது.

12 மாதங்களுக்குப் பிறகு பொதுஜனச் சட்டமறுப்பு தனிநபர் சட்டமறுப்பாக மாறி 6 மாத காலம் நடந்தது. இது பூனுவில் 1933 ஜுலையில் காந்திஜீ விடுதலை யடைந்தபோது நடந்த தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகும்.

1934 ஏப்ரலில் சட்டசபை வியவகாரப் பஞ்சாயத்து ஸ்தாபிக்கப்பட்டு காந்திஜீயும் தாராள மனதுடன் அதை ஆதரிப்பதாகக் கூறினுர். உடனே காந்திஜி சட்டமறுப்பை நிறுத்தினுர். காங்கிரசின் பேரில் கவர்ன்மெண்டார் போட்டிருந்த தடையானது நீக்கப்பட்டது. காங்கிரஸ் வெற்றி யடைந்ததால் ஜீவிக்கவில்லை. எதிரியின் தயவால் ஜீவிக்கத் தொடங்கியது. இந் நிலைமையில் பாட்னுவில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி, காங்கிரஸ் மகாசபையைக் கூட்ட ஆலோசிக்கவே அக்கூட்டம் பம்பாய்க்கு அழைக்கப்பட்டது.

கவர்ன்மெண்டு, தாங்கள் தாராள நோக்கத்துடன் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதாகக் கூறிய விஷயங்களில்கூட அவர்களின் அற்பத்தனம் போகிறதில்லை. எல்லாக் காங்கிரஸ் ஸ்தாபனங்கள் பேரிலும் போடப்பட்ட தடைகள் முழுதும் நீக்கப்படவில்லை. நமது சகாக்களில் சிலரும் தடை யுத்தரவுகளால் இக் கூட்டத்திற்கு வர முடியவில்லை காங்கிரஸ்காரர்களுக்கு இத் தடைகள் போடப்பட்டிருப்பதிலிருந்து, இத் தடைகள் புரட்சிகர நடவடிக்கைகளைத் தடுக்கவே போடப்பட்டன வென்னும் வாதம் தப்பென்பது நன்கு தெரியவரும். சுயேச்சை இயக்கத்தை எல்லா விதங்களிலும் அடக்க வேண்டு மென்பதே கவர்ன்மெண்டின் நோக்கமாகும். ஹிந்துஸ்தானி சேவாதளத்தையும், எல்லைப்புற செஞ்சட்டைப் படையையும் அவர்கள் அடக்கி வைத்திருப்பதிலிருந்து பலாத்கார ஸ்தாபனங்களை மாத்திரம்தான் அடக்கி வைத்திருப்பதாக அவர்கள் கூறுவது உண்மை யல்ல வென்று நன்கு தெரியவரும். இவைகளால் கவர்ன்

மெண்டின் மனோபாவம் வெளியாவதுடன் இந்த இரண்டு ஸ்தாபனங்களும் செய்திருக்கும் சேவையை அவர்களும் உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. பண்டித ஜவகரை விடுவிக்காததுடன் தேக அசௌக்கிய மடைந்திருக்கும் அவருடைய மனைவியைக் காணப் பற்பல நிபந்தனைகளை விதித்திருப்பது அவருடைய கஷ்டங்களை மிகுத்த போதிலும் அவருடைய அதிசய குணங்களை அதிகமாகப் பிரகாசிக்கச் செய்கின்றன. அவருடைய மனைவி சீக்கிரம் குணமடைந்து அவரும் சுயேச்சை யடைவாராக!

அடக்குமுறை நிவாரண வேலை

அடக்குமுறையால் ஏற்பட்ட கஷ்டங்களை நிவாரணம் செய்ய வேண்டியது அவசியமாகும். கர்நாடகம், கூர்ஜரம், ஐக்கிய மாகாணம் இவைகளில் குடியானவர்கள் ஏராளமாக கஷ்டமடைந்து விட்டனர். அவர்களுக்குக் காங்கிரஸ் உதவி செய்ய வேண்டியது அவசியமாகும். குதாய் கிட்மட்கார்கள் மிகவும் கஷ்டத்தை யடைந்திருக்கின்றனர். அவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும். சிம்லாத் தேவதைகள் காங்கிரஸ் சக்திகளைச் சிதறடிக்க முயற்சிக்கையில் பம்பாய் குட்டித் தேவதைகள் காங்கிரஸ் கூட்டத்திற்குத் தங்களாலியன்ற தடைகளை ஏற்படுத்தினர்.

பம்பாய்க் கவர்ன்மெண்டின் தடை

பம்பாய் நகரில் இருக்கும் காலி நிலத்தில் காங்கிரஸ் மகாசபையைக் கூட்டக் கவர்ன்மெண்டு அனுமதிக்கவில்லை. இந்தியர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் வரிப் பணத்திலிருந்து தூக்கப்பட்ட நிலத்தைத் தேசத்தின் பிரதான ராஜீய ஸ்தாபனக் கூட்டத்திற்கு அனுமதிக்காமலிருந்து விட்டதிலிருந்தே நமது நிலைமையின் கேவலத் தன்மை நமக்குத் தெரிகிறது. ஆனால் பம்பாய் முனிசிபாலிடி, மின்சார சப்ளை கம்பெனி முதலிய ஸ்தாபனங்கள் தயக்கமில்லாமல் உதவி செய்ய முன் வந்திருப்பதை நான் சந்தோஷத்துடன் போற்றுகிறேன்.

கூட்டத்தை ஒத்தி வைக்காததேன்?

இந்தியா சட்டசபைத் தேர்தலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வர இயலா தாகையால் இம் மாதம் காங்கிரஸ் சபையைக் கூட்டத் தகுந்த காலமல்ல வென்று கூட்டத்தை ஒத்தி வைக்கச் சிலர் ஆலோசனை கூறினர். அவர்கள் கூறி யிருந்த காரணங்கள் நியாயமானவைகளே. ஆயினும், சட்டசபை வியவகாரப் பஞ்சாயத்து போர்டு ஸ்தாபனத்துக்கு சில ஆக்ஷேபங்கள் கூறப்பட்டதால் காரியக் கமிட்டி மகாசபையை உடனே கூட்டத் தீர்மானித்தது.

வகுப்புத் தீர்ப்பு விஷயமாக காரியக் கமிட்டித் தீர்மானத்தை எதிர்க்கும் பண்டித மாளவியாஜியும் ஸ்ரீமான் ஆனேயும் காங்கிரஸ் கூட்டம் வரையில் தங்களுடைய அபிப்பிராயத்துக்கு ஆதரவு தேடப் போவதாகக் கூறியதால், மகாசபையைச் சீக்கிரத்தில் கூட்டுவதும் அவசியமாகிவிட்டது. மாளவியாஜீயின் பொருட்டு காங்கிரஸ் கூட்டம் துரிதமாகக் கூட்டப்பட்டபடியால் காங்கிரஸ் தீர்மானத்தை ஏற்று அவர் நடப்பார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தால் சட்டசபைத் தேர்தல் பிரசாரத்துக்கு விசேஷமாக பலமேற்படும். சட்டசபைப் பிரவேசத்தை இக் காங்கிரஸ் ஆதரிக்குமென்ற தைரியத்தினால்தான் நான் மேற்கண்ட அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். சட்டசபைத் தேர்தல் நடக்கப்போகும் தருவாயில் இப் பிரச்னையைக் கிளப்புவது சரியல்லவென்று சிலர் கருதலாம்.

சட்டசபைப் பிரவேசத்தைக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டு விட்டபடியால், அந்தத் திட்டத்தை சரியாக நடத்தி வைக்கும் பொருட்டு அதைப்பற்றி ஆலோசிக்க வேண்டியது சரியே.

காங்கிரஸ் அபேதவாதக் கக்ஷி

இக் காங்கிரஸில் ஒரு பிரத்தியேக விசேஷமிருக்கிறது. காங்கிரசுக்குள் ஒரு திட்டமான கக்ஷி யேற்பட்டு வேலை செய்வது இதுதான் முதல் தடவையாகும். காங்கிரஸ் அபேதவாதக் கக்ஷி சில மாதங்களுக்கு முன்புதான் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், பெருத்த கோரிக்கைகளுடன் வேலை செய்ய முன்வந்திருக்கிறது. அவைகளைப் பற்றி நான் அபிப்பிராயங் கூறுவது சரியல்ல. அதனுடைய எதிர்காலத்தைப் பற்றி ஒருவரும் ஜோஸியம் கூற முடியாது.

இந்திய சமஸ்தானப் பிரச்னை

இந்திய சமஸ்தான வாசிகளைப் பிரிட்டிஷ் இந்திய வாசிகளுடன் சேர்ப்பதா அல்லது இதுவரையில் இருந்தது போல் காங்கிரஸ் விலகி நிற்பதாவென்பதைப் பற்றியும் இக் காங்கிரஸ் கூட்டம் ஆலோசிக்கும்.

தற்கால ராஜீய நிலைமை

'சட்ட விரோத'மான காங்கிரஸ் சட்டமறுப்பை நிறுத்தியது முதல் கவர்ன்மெண்டு மேன்மேலும் தற்புகழ்ச்சி செய்து கொள்ளத் தொடங்கிவிட்டது. முதலில் காங்கிரஸ் நேரடியான கிளர்ச்சி நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்று கவர்ன்மெண்டு நிபந்தனை விதித்தது. அதற்குப் பிறகு ராஜீயச் சீர்திருத்தங்கள் செய்யப்படு

மென்று கவர்ன்மெண்டு கூறியது. இதைக் கேட்டுக்கொண்டு மிதவாதிகளும் மற்றவர்களும் காங்கிரஸ் பேரில் குறை கூறினர். ஆனால் இப்பொழுது என்ன செய்யப்படுகிறது? எல்லோரும் காங்கிரஸ், செல்வாக்கு மிகுந்த ராஜீய ஸ்தாபனமெனக் கருதிய போதிலும், காங்கிரஸின் ஒத்துழைப்புடன் என்ன ராஜீய சீர்திருத்த வேலைகள் செய்யப்படுகின்றன? தற்கால அரசியல் திருத்தங்கள் அதனுடன் கலந்தாலோசிக்காமலே பரிசீலனை செய்யப்படவில்லையா? பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பல காரணங்களுக்காக வீண் வாக்குறுதிகளைக் கொடுக்கின்றனர். இந்திய மிதவாதிகளும் அவ்வித வேறு காரணங்களுக்காக அவைகளை ஆதரிக்கின்றனரா?

சட்டசபைத் தேர்தல்

அடக்குமுறையும் போலிச் சீர்திருத்தங்களும் கொண்ட கவர்ன்மெண்டு கொள்கையே வரப்போகும் தேர்தலின் பிரதான பிரச்னையாகும். கவர்ன்மெண்டு தங்களுடைய அடக்குமுறைக்குச் சுயநலக்காரர்களின் ஆதரவைப் பெற்று இந்திய சுயேச்சை இயக்கத்தை அடக்கப்போகிறார்களா? பகவத் சங்கற்பத்தினால் அவர்களுக்கு ஆதரவு கிடைக்காதென்றே நான் நம்புகிறேன். சீர்திருத்தங்களின் போலித்தனத்தை வெளிப்படுத்திச் சுயநலக்காரர்களின் வேலையைத் தடுக்கவே காங்கிரஸ் முயற்சிக்கிறது. வரப்போகும் தேர்தலில் இதுவே முக்கியப் பிரச்னையாகும். காங்கிரசுக்கு விரோதமாகக் கொடுக்கப்படும் ஒவ்வொரு ஓட்டும் இந்தியாவின் பந்தனத்துக்கே கொடுத்ததாகும்.

வகுப்புத் தீர்ப்பைப் பற்றி ஏற்பட்ட அநாவசியமான வாக்குவாதத்தால் காங்கிரஸ் ஒற்றுமை குலைந்திருக்கிறது. ஒரு சமரச முடிவைச் செய்ய வேண்டுமென்று காரியக் கமிட்டி கருதுவதால் இவ் விஷயத்தில் காரியக் கமிட்டி தன் தீர்ப்பை மாற்ற அது சம்மதிக்கவில்லை.

தேசீய வாதத்தில் வகுப்புப் பிரச்னை யென்பது கிடையாது. தேசீயப் போராட்டத்தில் வகுப்பு பேத மனப்பான்மையுடன் ஒருவரும் வேலை செய்யவில்லை. ஒவ்வொரு தேசீய வேலையிலும் பல வகுப்பினர்களும் ஒத்துழைத்திருக்கின்றனர். நமது வரவேற்புக் கமிட்டியே அதற்கொரு உதாரணமாகும்.

காங்கிரசில் வகுப்பு பேத மனப்பான்மை இருப்பதாகக் குறை கூறுபவர்களின் வாதம் சரியல்ல வென்பதற்கு எனது உதாரணமொன்றே போதுமானது. நான் இந்திய வகுப்புகளில் மிகவும் சிறிதான வகுப்பை சேர்ந்தவனாக விருந்தபோதிலும், எனக்குப் பல வித தேர்தல்களில் பெருவாரியான ஆதரவு கிடைத்திருக்கிறது.

நான் வரவேற்புக் கமிட்டியில் தலைவனாகவும், ஒரு முஸ்லிம் பொதுக் காரியதரிசியாகவும், ஜி. ஒ. ஸியாக மற்றொரு முஸ்லிமும், மற்ற உத்தியோகஸ்தர்கள் இதர வகுப்பைச் சேர்ந்தவர்களாக விருப்பது குறிப்பிடத் தக்க உதாரணமாகும். இவ்விதமே வெளியோர்களின் தலையீடு தவிர்த்து நாம் எல்லாப் பிரச்னைகளிலும் ஒத்துழைக்க லாம்.

வகுப்புத் தீர்ப்பைப் பற்றிய அபிப்பிராய பேதத்தால் ஒரு புதிய கக்ஷியே ஸ்தாபிதமாகிவிட்டது. ஆனால் நமது எதிரிகள் மிகவும் களிப்படைந்திருக்கின்றனர். ஆனால் அவர்களுடைய சந்தோஷத்திற்கு இடமேயில்லை. மாளவியாஜி இப் பிரச்னையை மகா சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்து, மகாசபைத் தீர்மானப்படி நடந்துகொள்வார் என்று நான் நம்புகிறேன். ஒற்றுமையின் அவசியத்தை நன்றாக உணர்ந்தவர் மாளவியாஜியை விட வேறொருவரு மில்லை. அபிப்பிராய பேதங்கள் எவ்வளவு தீவிரமாக விருந்தபோதிலும் மகாசபையின் தீர்மானத்தின் பிறகு அவை அடங்கிவிட வேண்டும். அதற்கு மாறாக நடந்தால் அது புரட்சியே யாகும்.

காந்திஜியின் தீர்மானம்

காந்திஜி காங்கிரஸிலிருந்து விலக உத்தேசித்திருப்பதாக வெளியிட்டிருந்த அறிக்கையானது தேசத்தைத் திடுக்கிடச் செய்திருக்கிறது. தற்கால ராஜீயப் பிரச்னையை விட அது மிகவும் முக்கியமான பிரச்னையாக உங்களால் நினைக்கப்படும். அவருடைய தீர்மானமும் அவர் செய்ய உத்தேசித்திருக்கும் வேலையும் அவருடைய சிறந்த குணங்களையும், ஜன நாயகக் கொள்கையில் அவருக்கிருக்கும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றன. காங்கிரஸ்காரர்கள் ஸ்வதந்திரத்துடன் ஆலோசிக்கவே அவர் விலகுகிறார். காங்கிரஸ்காரர்களில் சில புத்திமான்கள் அவருடைய முறையை ஆதரிக்கமாட்டாமலும், வேறு வழிகளைக் கூற மாட்டாமலும் தவிப்பதை யறிந்தே அவர் விலகுகிறார். ஆனால் காங்கிரஸுக்கும் தேசத்திற்கும் சென்ற 15 வருஷ காலமாக விருந்த ஆதரவு மறைந்துவிடலாம். ஆனால் தற்காலிகமாகவே விலகுகிறார் என்ற நம்பிக்கையால் சிறிது ஆறுதல் ஏற்படும். காங்கிரஸிலிருந்தாலும் சரி, வெளியிலிருந்தாலும் சரி, அவருடைய உன்னத நோக்கங்கள் அவரைச் சும்மாவிருக்க விடா.

அடுத்த திட்டம்

அடுத்தபடியாக நாம் யோசிக்க வேண்டியது அடுத்த திட்டத்தைப் பற்றித்தான். அடுத்த போராட்டத்திற்குத் தேசத்தைத்

ஜப்பானில் நவ யுகம்.

(சர்தார்.)

வீழ்ந்து கிடக்கும் கீழ் நாடுகளில் இன்று தலை நிமிர்ந்து நடப்பது இந்தியாவின் விஸ்தீரணத்தில் பத்திலொரு பங்குள்ள ஜப்பான் தான். இங்கிலாந்து முதலிய வல்லரசுகளுடன் வியாபாரத்தில், படைவலிமையில்—ஏன் பிரஜா உற்பத்தி விகிதத்திலுங் கூட—பலமான போட்டியிட்டு அத்தேசங்களை நடுங்க வைப்பதும் ஜப்பான்தான். 'கிழக்கு பிரிட்டிஷ் தீவுகள்' என்று வல்லரசுகள் அஞ்சுகின்ற அந்நாட்டிடம் இயற்கைத் தேவி சற்று கடுமையாகத்தா னிருக்கிறாள். குன்றுகள், எரி மலைகள், பூகம்பம் முதலியன அவள் அளித்துள்ள அரும் பெரும் கொடைகளாகும்.

இத்தனை குறைகளிடையே பிறர் கண்டு அஞ்சும்படியான முன்னேற்றத்தை அடைந்துள்ள ஜப்பானின் ஓர் நூற்றாண்டுக்கு முற்பட்ட நிலை என்ன? 'பசும் பாலைப் பிள்ளைகள் குடித்தால் அவர்களுக்கும் மாட்டைப் போலக் கொம்பு முளைக்கும் என்று ஜப்பானியரில் பலர் நினைத்த நாள் வெகு காலத்துக்கு முன்னல்ல' என்று

தயார்ப்படுத்த வேண்டியது அவசியமாகும். பூர்ண சுயராஜ்யமடைவதே நமது நிரந்தரமான நோக்கம். அதற்குப் புதிய முறைகளும் மார்க்கங்களும் கண்டுபிடிக்கப்படு மென்பதில் ஆக்ஷேபமில்லை. அதற்கு எல்லா காங்கிரஸ்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்ய வேண்டும்.

முடிவுரை

* * *

கடவுள் நமது நடவடிக்கைகளைக் கடாக்ஷித்துக் காப்பாராக! சரியான மார்க்கத்தைக் கண்டுபிடித்து உறுதியுடன் அதைப் பின்பற்ற அவர் நமக்கு அருள்புரிவாராக. வெற்றியிலும் தோல்வியிலும் அவருடைய சங்கற்பம் நிறைவேறிவிடும்.

வந்தே மாதரம்.

அவர்களை நன்கு அறிந்த ஒருவர் எழுதுகிறார். இது உங்களுக்கு நகைப்பாயிருக்கும். ஆனால் உண்மை. இன்றைய உலக வியாபாரத்தில் பலமாகப் போட்டியிட்டு பிற நாட்டவரை குப்புற வீழ்த்தும் ஜப்பானிலே, அன்று வியாபாரஞ் செய்வது இழிவென்றும், வியாபாரிகள் கீழ் ஜாதியினரென்றும் கருதப்பட்டது. புண்ணிய பூமியாகிய ஜப்பானை விட்டு மிலேச்சர் வாழும் பிற தேசங்களுக்குப் போகத் துணிந்தால் அவர்களுக்கு சிரசாக்கினைதான் தண்டனை. ஜப்பானிய சமூகம் (1) இராச வமிசத்தார், (2) 'டைமியோவர்' என்னும் மகாப் பிரபுக்கள், (3) ஸாமுறையர், (4) சாதாரண மக்கள், (5) வியாபாரிகள், (6) ஹீத்தர் என்னும் தீண்டா ஜாதியெனப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதிகம் சொல்வானேன். ஒரு நூற்றாண்டிற்கு முன் ஜப்பானியர் ஒன்றுந் தெரியாத காட்டுமிராண்டிகளுமல்ல; இக் காலத்தைப் போல் நாகரீகமடைந்தவர்களுமல்ல; பாதி நாகரீகமடைந்த கிணற்றுத் தவளைகள்.

இவையெல்லாம் பழங் கதை. இன்றைய நிலை வேறு. சென்ற அறுபது வருஷத்திலே நாம் நம்ப முடியாத மாறுதலை—முன்னேற்றத்தை—அடைந்து விட்டது அந் நாடு. கேட்பாரற்றுக் கிடந்த அந் நாட்டைக் கண்டு பிற நாட்டவர் அஞ்சுகிறார்கள்; மதிக்கிறார்கள்; பொறுமைப்படுகிறார்கள். சில நூற்றாண்டுகளாய் உலக வியாபாரத்தைக் கைப்பற்றி வைத்திருந்த மேனாடுகளுடன் எல்லா வியாபாரத்திலும் போட்டியிடுகின்றனர் ஜப்பானியர். சென்னையிலே பல் வைத்தியம், அமெரிக்காவில் பிள்ளை விளையாடும் பொம்மை வியாபாரம், ஜெர்மனியிலே துணிமணி வியாபாரம், நேற்று லங்காஷயருக்கு நெசவு ஆலை ஏற்றுமதி என ஒவ்வொரு தொழிலாக அவர்களின் கைக்குள் அடங்கி விடுகிறது. இன்னும் என்ன என்ன அதிசயங்கள் வரப் போகிறது என்று வாய்திறந்துக் காத்துக் கொண்டிருக்கிறோம் நாம்.

இம் மாறுதல்களுக்கு வித்து சென்ற நூற்றாண்டின் மத்தியில் தான் இடப்பட்டது. அதற்கு முன் பிற நாட்டவர் ஜப்பானிலே நாகசகி துறைமுகத்தைத் தவிர வேறெங்கும் தங்கக் கூடாது. அப்போதுதான் முதன் முதலாக அமெரிக்கர்கள் பிற பட்டணங்களிலும் வியாபாரஞ் செய்யவும் வசிக்கவும் அனுமதி பெற்றனர். அமெரிக்க உறவின் பயனாய் மேற்கத்திய நாகரீகத்தை அறிந்து விழிப்படைந்தனர். அநேக நூற்றாண்டுகளாய் நடைமுறையிலிருந்து வந்த தங்கள் ஆட்சி முறையை அடியோடு மாற்றி அமைத்துக் கொண்டார்கள். தேசத்தின் சிறு சிறு பிரிவுகளுக்கு அதிபதிகளாயிருந்து வந்த 'டைமியோவர்' (மகாப் பிரபுக்கள்) தேச நலத்தை நாடித் தங்கள் அதிகாரத்தை அர்ப்பணஞ் செய்து விட்டார்கள்.

மிக்காதோ (சக்கரவர்த்தி) பொதுஜன அபிப்பிராயத்தின்படி தேசத்தை—பேருக்கு மாத்திரமல்லாமல் உண்மையாகவே—ஆள இசைந்தார். சட்டசபை ஸ்தாபிதமாயிற்று. மந்திரிகள் நியமிக்கப்பட்டனர். நவ யுகம் உண்டாயிற்று.

இவையெல்லாம் கதையிலே கேட்பது போலத் தோன்றலாம். ஆனால் இத்தனையும் உண்மை. 'பஞ்சமோ, பஞ்ச'மென்று குடிகள் அவதிப்படும்போதும் தங்கள் கோடை வாசஸ்தலத்தையோ, உல்லாசச் செலவுகளேயோ மாற்றிக்கொள்ள முடியாத அதிபர்களும், ஒப்பற்ற தலைவர்களும், தியாகிகளும் எத்தனையோ வருஷங்களாகக் கண்ணீர் விட்டுக் கதறுவதைக் கேட்டும் கண்டும், தேசத்தின் அடிமைத்தளை வலுப்பெற்று மக்கள் வறுமைக்கும் நோய்க்கும் இழிவிற்கும் ஆளாவதைக் கண்டுங் கூடத் தங்களுடைய பொய் உயர்வையும். ஜாதித் திமிரையும் எள்ளளவும் விட்டுக்கொடுக்க மனம் வராத உயர் ஜாதிக்காரர்களும் நிறைந்த இந் நாட்டிலுள்ள சகோதரி சகோதரர்களுக்கு இத்தனையும் நம்பக்கூடாததாயிருக்கலாம். ஆனால் உண்மையாகவே இவ்வளவு மாறுதல்களும்—இவற்றைவிட பெரிய புரட்சியுங்கூட—ஜப்பானிலே 1868-ம் வருஷத்திலே ஆரம்பமாயிற்று.

அன்று ஆரம்பமான நவ யுகத்திலே காலாகாலமாக இருந்து வந்த ஜாதி வேற்றுமை அழிந்து போயிற்று. அப்போது இருந்த மிக்காதோ "ஜாதி வேற்றுமை நாட்டு முன்னேற்றத்திற்குத் தடை" யென்றார். அவ்வளவுதான்! எல்லோரும் ஒருமுகப்பட்டு அப் பெருந் தடையைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டார்கள். 'என் தேசத்திலே வாசிக்கத் தெரியாத ஒரு கிராமமும், கிராமத்திலே வாசிக்கத் தெரியாத ஒரு குடும்பமும், குடும்பத்திலே வாசிக்கத் தெரியாத ஒரு பிள்ளையும் இருக்கக் கூடாது" என்ற கட்டளையிட்டார் சக்கிரவர்த்தி. மறு நாளே ஆங்காங்கே பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து கட்டாயக் கல்வி ஏற்படுத்தி வீடுதோறும் கலையை விளங்க வைத்தார்கள். இன்று கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் எல்லாக் கலை ஞானங்களும் தொழிற் கல்வியும் ஆங்கு பெருகிக் கிடக்கின்றன. ஜப்பானியரின் நாட்டுப் பற்றும், ராஜபக்தியும் கீழ்ப்படிதலும் அத்துணை வலிமை யுடையது. இன்று மகாத்மாஜியைப் பின்பற்றுவோர் என்று சொல்லிக்கொள்வோரில் பாதிப் பேர்களாகிலும் இத்தகைய பக்தியும் உண்மையான கீழ்ப்படிதலும் கைக்கொண்டிருந்தால் நாமும் நவயுகத்தைக் கண்டிருப்போமே! நாட்டு வளர்ச்சி என்று பிறர் உருகப் பேசிவிட்டு விதேசி சாமான் விற்பனையிலும் சமூக ஒற்றுமை சீர்திருத்தம் என்று மேடைப் பிரசங்கங்கள் செய்து விட்டு அதற்கு நேர்மாறான காரியங்களை மனமொழி மெய்க

ளால் செய்துகொண்டு மிருக்கும் தலைவர்களும் தொண்டர்களும் நிறைந்த இந் நாட்டிலே, என்று அந் நவ யுகத்தைக் காணப் போகி றோம்?

நினைத்த மாத்திரத்தில் இவ்வளவு பெரிய மாறுதல்களைச் செய்ய ஜப்பானியருக்கு எப்படி இயன்றது? மேனாட்டு நாகரீகத் தின் உறவால் உண்டான விழிப்பு, பூத்துக் காய்த்துப் பலன் தருவ தற்கு உதவி செய்தவை எவை என்று சிந்திப்போம்.

முதலாவதாக ஜப்பானியர் வெறும் தத்துவ விசாரணைக்காரர் கள் அல்ல. 'காயமே இது பொய்யடா' என்று சோம்பிக் கிடப்ப வர்கள் அவர்கள் அல்ல. இருக்குமளவும் இவ் வுலகப் பொருள் களைப் பயன்படுத்தி இன்ப வாழ்வு வாழ அறிந்தவர்கள். உலகத் திலே யுள்ள விஷயங்களை நியாயமானபடி அனுபவித்துக் களிகூர் வது, சிறு இன்பமே ஆயினும் பேரின்பத்திற்கு விரோதமன்று; அக்கிரமமல்ல என்னும் உணர்வு உடையவர்கள். முன்னேற்றத் திலே குறி யுள்ளவர்கள். அதற்காகத் திரிகர்ண சுத்தியாய் ஏகாக் கிரக சித்தராய் முழு ஆர்வத்தோடும் உழைப்பவர்கள்.

அன்று மலர்ந்த விழிப்பு காய்ப்பதற்கு உதவியாக நின்றது, உயிரை துச்சமென மதிக்கும் ஜப்பானிய வீரமே. தன் நாடு, மதம், குடும்பம், மானம், மனச்சாக்ஷி இவற்றின் பொருட்டு தங்கள் உயிரைத் தியாகஞ் செய்தலைவிட 'அரும் புகழ்ச் சாவினை அடை தல்' இல்லை யென்ற கொள்கையை பாரம்பரியமாக அவர்களுடைய மதம் போதித்து வந்துள்ளது. குழந்தைக்குப் பாலூட்டும்போதே இவ் வீரத் தியாக உணர்ச்சியையும் குழைத்து ஊட்டிவிடுகிறாள் ஜப்பானியத் தாய். எனவே பால் மணம் மாறாச் சிறுவன் முதல் தொண்டு கிழம்வரை ஆண் பெண் அடங்கலும் பொதுநலத்தின் பொருட்டுத் தங்களைத் தியாகஞ் செய்ய 'நான் நான்' என்று முந் திக் கொள்கின்றனர். அத் தியாகத்திலேயே தங்கள் வாழ்க்கைப் பூரணமானதாகக் கருதுகின்றனர். ஜப்பானிய சரித்திரத்திலே இத்தகைய வீர வாழ்க்கைகள் குவிந்து கிடக்கின்றன. சுயநலத்தைப் பொது நலத்திற்காக அர்ப்பணஞ் செய்யப் பழகி வந்துள்ளதால் தான் புரட்சியின்றி இவ்வளவு மாறுதல்கள் ஏற்படுத்த இயன்றது.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற நன்மொழியைக் கடைப் பிடித்துள்ள சமூகம் ஜப்பானியர்தான் என்று கூற வேண்டும். அவர்களுடைய சகிப்புத்தன்மை மிக அபாரமானது. நம் சத்தி யாக்கிரகிகளின் சகிப்புத்தன்மையைத்தான் சிறிது ஒப்பிடலாம். இப்போது ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது. சில வருஷங்க ளுக்கு முன் உயர்ந்த ஜப்பானிய உத்தியோகஸ்தர் ஒருவரை செயற் கரியதோர் காரியத்தை அவர் செய்யவில்லை யென்று நிந்தித்தார்கள்.

மானமற்ற வாழ்க்கை ஜப்பானியருக்கு எட்டிக்காய். அந் நாட்டிலுள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் குறிப்பிட்ட நாளில் அவரது குடும்பக் கோயிலண்டை வந்து சேரும்படி அழைப்புப் போயிருந்தது. அவர்கள் முன்னிலையில் ஓர் நீண்ட வாளை எடுத்து தன் வயிற்றில் ஓங்கிக் குத்தினர் அவ் வுத்தியோகஸ்தர். மெதுவாக அதனை உருவி உயர்த்திப் பிடித்தார். அவ்வளவுதான். மறு நிமிடம் பொத்தென்று சாய்ந்துவிட்டார். அவருடைய முகத்திலே சிறு சுளிப்பு, துக்கம், நோய்க் குறி காண வேண்டுமே; அது தான் இல்லை. தன் காதலியின் கையைப் பிடித்து மணந்த அன்று அடைந்த அவ்வளவு ஆனந்தமும் அந் நிமிஷத்தில் அம் முகத்திலே தங்கியிருந்தது. ஆ! எத்தனை வீரம்! என்னே அவரது சகிப்புத் தன்மை!!

நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும் இச் சம்பவம் அவர்களுக்குச் சாதாரணமாம். துன்பத்தின் மேல் துன்பம் தொடர்ந்து வரினும் தளராத நெஞ்சம், கவலையைக் காட்டாத முகம்—இவைதான் ஜப்பானியரின் அழியாச் செல்வம். பாதையிலே சிறு முள் தைத்தல், பிரசவ வேதனை, தீராத நோய், மழையின்மை, புயற் கொடுமை, பூகம்பம் இவ்வளவும் அவர்களுக்கு ஒன்றே. பிரசவ வேதனை யென்பதே அவர்களுக்கு அர்த்தமற்ற வார்த்தை. பிரசவிக்கும் பெண்ணின் முகத்திலே சுளிப்பு, பூகம்பத்தாற் தாக்குண்டவர்களின் விழிகளிலே துக்கம், பயம் கலந்த பார்வை, இவற்றை யெல்லாம் அறியார் அவ் வீர மக்கள். எத்தனைக் கஷ்டங்கள் வந்தாலும் சகித்துக்கொள்வார்கள். வெளியிற் காட்டமாட்டார்கள். தவங்கிடந்து பெற்ற பாலனை இழந்த தாயின் முகத்திலும் மற்றவர்களிடம் காணும் அதே புன்முறுவல்தான். மறந்துபோன துக்கத்தை மீண்டும் மீண்டும் கிளரித் தேம்பித் தேம்பி ஒப்பாரி வைத்துத் தொந்தரவு செய்யும் வழக்கம் அத் தேசப் பெண்களுக்குப் புறம்பானவை. துக்கத்தை வெளியிற் காட்டி பிறருடைய பச்சாதாபத்தை வரவழைத்தல் வெறுக்கத் தக்கது என்பது ஜப்பானியரிடம் நெடுங்காலமாக இருந்து வரும் கொள்கை. 'நிஷ்காம்ய கர்மம்; எத்தகைய துன்பத்திற்கும் தளராத நெஞ்சம்' இவற்றைத் தான் அவர்களுடைய மதமும் சமூகமும் வற்புறுத்தி வருகின்றன. கவலைகளை யெல்லாம் அடக்கி ஆண்டு புன்முறுவலோடும் உற்சாகத்தோடும் மேலும் மேலும் உழைக்கும் சுபாவமாகிய அழியாச் செல்வத்தைப் பெற்றிருப்பதாலன்றோ கொஞ்ச காலத்திற்கு முன்னரே விழிப்படைந்த ஜப்பானியர் எவ்வளவோ இடையூறுகளைக் கடந்து இன்றைய உன்னத நிலையை அடைந்துள்ளார்கள். 'உன்னை ஆள்; உன் நண்பனை ஆள்; முடிவில் உன் மாற்றானை ஆள்' இதுதான் ஜப்பானியருக்கு வேத வாக்கு.

ஜப்பானியரின் எளிய வாழ்வு அவர்களுக்கு மற்றொரு பலம். எளிய வாழ்வினர் என்றதால் அரைப் பட்டினி என்று கருத வேண்டாம். ஆடம்பரத்தை நீக்கியவர்கள், அவ்வளவுதான். அளவுக்கு மேல் பல அனுவசியமான தேவைகள் அவர்களை அழுத்திக்கொண்டிருக்கவில்லை. சொற்ப தட்டுமுட்டுகளை உடைய மிகச் சுத்தமான சிறு வீடுகளில் ஜப்பானியர் வசிக்கின்றனர். சாதாரணமாக நெல்லரிசிச் சோறும், சில மரக்கறிகளும் மீனும் சாப்பிடுவார்கள். கோதுமை முதலிய விலை யுயர்ந்த உணவுகளைச் சொற்பமாகவே சாப்பிடுவார்கள். மொத்தத்தில் அவர்களுடைய தேவை சொற்பமே. எளிய வாழ்வினரான ஜப்பானியர் சிறு வயது முதலே உழைக்கப் பயிற்சி பெற்றவர்கள் ஆண், பெண் குழந்தை இடங்கலும் வயல்களில் தத்தமக்குரிய வேலைகளைச் செய்வர். பாடுபடப் பதுங்குவதை அவர்கள் அறியார். உழைப்பு அவர்களுக்கு ஓர் கலை; ஓர் மதம். 'எளிய வாழ்க்கை; உயரிய செய்கை' இந் நான்கு வார்த்தைகளால்தான் அவர்களைக் குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொரு காரியத்தையும் அதற்குரிய காலத்தில் செம்மையாகச் செய்பவர் ஜப்பானியர். உழைக்க வேண்டிய நேரத்தில் ஏகாக்கிரக சித்தராய், முழு மனதினராய் ஆர்வத்துடன் உழைப்பார்கள். விளையாடுகிற நேரத்தில் அவ் விளையாட்டிலேயே முழுதும் லயித்து விடுவார்கள். வேறொன்றில் அவர்கள் மனஞ் செல்லாது. திருவிழாக் காலங்களில் வயது சென்ற பெரிய மனிதர்களும், சிறு பிள்ளைகளும் ஒரேவித ஆர்வத்துடன எல்லாவற்றையும் மறந்துவிட்டு காற்றாடி பறக்கவிட்டு விளையாடும் 'தமாஷ்' ஜப்பானிலே காணலாம். செய்கின்ற ஒவ்வொன்றையும் செய்ய வேண்டிய நேரத்தில் அத்தனை ஆர்வத்துடன் செய்வார்கள். நம் மாணவர்களைப் போல் கடற் காற்றை அனுபவித்து ஓய்வுகொள்ள வேண்டிய கடற்கரையில் வாதப் போரும், வகுப்பிலே விகடப் பயிற்சியும், ஓவியப் பழக்கமும், வீட்டில் படிக்க வேண்டிய நேரத்தில் சீட்டாட்டமும், தூங்க வேண்டிய நேரத்தில் விழிகள் சோர படிப்பும் அப்பியாசிக்கும் சுபாவம் படைத்தவர்கள் அல்ல ஜப்பானியர்.

வாழ்வில் முன்னேக்கு, தியாகம், வீரம், சகிப்புத்தன்மை, அஞ்சா நெஞ்சம், சலியா உழைப்பு, லக்ஷியத்தில் ஆர்வம், எடுத்த காரியத்தை அதற்குரிய காலத்தில் திறம்படச் செய்யுங் குணம், எளிய வாழ்க்கை இவற்றைப் பெற்றதினல் ஜப்பானியர் மடமடவென்று முன்னேறுகின்றனர். நாமும் அவ்விதம் செய்யப் போகிறோமா?

ஸ்ரீஜத் இராஜேந்திரரின் பேருரை.

பம்பாயில் கூடிய 48-வது காங்கிரஸ் மகாநாட்டில் தலைமை வகித்த பாபு ராஜேந்திர பிரசாத் நிகழ்த்திய தலைமையுரையாவது.—

சகோதரர்களே! சகோதரிகளே!!

நாம் ஈண்டு மூன்றரை வருடக் கஷ்டமான வேலைக்குப் பிறகும் பல வருத்தங்கட்குப் பிறகும் கூடியிருக்கிறோம். ஆயிரக் கணக்கான வர்களுக்கு உற்சாகத்தை ஊட்டி வந்த சிறந்த அறிஞரும், ஆழ்ந்த அறிவுள்ளவருமாகிய டாக்டர் பெசன்டை இழக்கும் துர்ப்பாக்கியம் இத் தேசத்திற்குச் சம்பவித்தது. சிறந்த தேசபக்தராகிய சர். சங்கரன் நாயரையும், 16 வருஷங்களுக்கு முன்னர் இம் மாநகரிலேயே கூடிய காங்கிரஸ் விசேஷக் கூட்டத்தில் தலைமை வகித்து அதைச் சிறப்புற நடாத்தி வைத்த சிறந்த தேசிய வீரராகிய ஸ்ரீ சையத் ஹாசன் இமாமையும் இழக்கும் துர்ப்பாக்கியம் நம் நாடு அடைந்தது.

இந்திய சட்டசபைத் தலைவர் பதவியிலும், வெளியிலும் ஒப்பற்ற தேசிய வீரராய் விளங்கிய ஸ்ரீ விட்டல்பாய் படேலையும் நாம் இழந்தோம். இப் பெரியார் மறைந்ததால் ஏற்பட்ட நஷ்டம் ஈடு செய்யவே முடியாததாகும். தேசப்பிரிய ஜதீந்திர மோகன சென்குப்தா காலஞ்சென்றது நம்மில் அநேகருக்குச் சொந்தத்தில் ஏற்பட்டதோர் பெரும் நஷ்டமே. சிறந்த பத்திராதிபரும், அரசியல் சட்ட ஞானியுமாகிய திரு. ஏ. ரங்கசாமி ஐயங்காரையும் நாம் இழந்திருக்கிறோம்.

ஜவஹரும் சுபாஷும்

இன்னும் சிறையில் அடைபட்டிருக்கும் ஒரு சிரேஷ்டரைப் பற்றியும் உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். இந்திய இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்து நிற்பதில் அவரிலும் மிக்கார் இந் நாட்டில் யாருமில்லை என்றுதான் கூறவேண்டும். பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு நமது மனமார்ந்த வந்தனத்தையும் அனுதாபத்தையும் செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம். திடமான அரசியல் போர்வீரராகிய திரு. சுபாஷ்சந்திர போஸையும் நாம் மறந்துவிட முடியாது. இவர் இப்பொழுது வெளி நாடுகளிலிருந்து வருகிறார்.

நாட்டிற்காகத் தியாகம் செய்து பல கஷ்டங்களை அனுபவித்த, இன்னும் அனுபவித்துக்கொண்டு வருகிற மற்றவர்களுக்கும் நாம் நமது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நமக்குத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களுமாகிய தேச ஊழியர்கள் பலர் மாண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் நமது மரியாதை உரியதாகுக.

ஒத்துழைக்க!

என்னை நீங்கள் கஷ்டமானதோர் சமயத்தில் காங்கிரஸிற்குத் தலைமை வகிக்கும்படி அழைத்திருக்கிறீர்கள். அடுத்த காங்கிரஸ் மகாநாடு வரையில் தேசிய வேலையை நான் மேற்கொண்டு நடத்த வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது இயற்கையேயாகும். இப் பதவியால் ஏற்படும் பெரும் பொறுப்பைக் கண்டு நான் அதிகத் திகிலடைகிறேன் என்பதை அறிவித்துக்கொள்கிறேன். எனது தேசத்தின் ஒரு மூலையில் எனக்குச் சரியெனத் தோன்றிய வழியில் நான் சேவை செய்துகொண்டிருக்க நீங்கள் அனுமதித்திருப்பீர்களாகில் நான் அதிக ஆனந்தத்துட னிருந்திருப்பேன். ஆனல் தேசத்தின் அழைப்பிற்கு நான் இணங்காதிருக்க முடியவில்லை. இணங்கி இதோ உங்கள் முன், நீங்கள் இட்ட பணியைச் செய்ய முன்வந்திருக்கிறேன். என்னிடமுள்ள குறைபாடுகளை நான் அறிந்துதானிருக்கிறேன். ஆயினும் நீங்கள் எனக்கு அளித்திருக்கும் இப் பதவி நீங்கள் என்மீது கொண்ட அன்பிற்கு அறிகுறி என்றே கருதுகிறேன். சமீபத்தில் நடந்த போராட்டத்தில் எனது சிறிய மாகாணம் செய்த சிறிய சேவையை அங்கீகரிப்பதற்கும், சமீபத்தில் எனது மாகாணத்திற்கு ஏற்பட்ட சகிக்க முடியாத துயரத்திற்கு அனுதாபம் காட்டுவதற்கும் அறிகுறியாக நீங்கள் இப் பதவியை எனக்கு அளித்திருக்கிறீர்கள். எனினும் நீங்கள் என்னிடம் ஒப்படைத்திருக்கும் பெரும் பொறுப்பை நான் சரிவர நடத்திவைக்க உங்களுடைய மாறுத ஒத்துழைப்பும் ஆதரவும் எனக்கிருக்குமென்றே நம்புகிறேன்.

பீஹார் கஷ்டம்

எனது மாகாணம் கடந்த 10 மாதமாக இயற்கையின் கோபத்திற்கு ஓர் தகுந்த இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் என் மாகாணத்திற்காக நீங்கள் செய்த பெரும் பேருதவிக்கு எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பீஹார் பூகம்பம் இதற்கு முன் கண்டிராத அவ்வளவு கோரமானது என்றாலும், அவ் வதிர்ச்சி நிவாரணத்திற்குக் காண்பிக்கப்பட்ட பொதுமக்கள் அனுதாபமும் இதற்கு முன் காணப்படாததாம். தேசம் முழுதும் பரவிவரும் தேசிய உணர்ச்சியின் பயனாக, இந்தியாவின் ஒரு பகுதியில் வசிக்கும் மக்கள் சிந்திய கண்ணீர், பரந்த பாரத தேசம் முழுதிலுமுள்ள எல்லா மக்களுடையவும் கண்களில் நீரைச் சிந்தியதோடு, பணத்தாலும் உடலாலும் உதவியையும் பெற்றுக்கொண்டது. பீஹார் நிவாரணக் கமிட்டி யொரு சமயம் கூறியதுபோல் "பூகம்பத்தால் பெரும் அழிவு ஏற்பட்டாலும், தேசம் முற்றும் ஐக்

கியப்பட்டு, ஒருவர் துன்பத்தை இன்னொருவர் பங்கு கொள்ளுமோர் சந்தர்ப்பத்தைக் காண்பித்துவிட்டது.''

காங்கிரஸின் சமீப சரித்திரம்

காங்கிரஸ் மகாசபை கடந்த 50 வருடங்களாகப் பலவித மாறுதல்களைக் கடந்திருக்கிறது. இச் சபையின் லட்சியம், அடைய விரும்பும் லட்சியம், தவறுகள், தோல்விகள், வெற்றிகள், அடைந்த நன்மைகள் ஆகியவைகளைப்பற்றிய பழைய விஷயங்களைச் சிறிது கவனிக்க யாவரும் விரும்புவது சகஜம். ஆயினும் எதிர்கால நமது திட்டத்தை வகுப்பதற்குச் சமீப சரித்திரத்தை அறிவது அவசியமாகையால், அதைக் குறிப்பிடுவதோடு மாத்திரம் நிற்கிறேன். கடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் 1931 மார்ச்சு மாதம் கராச்சியில் நிகழ்ந்தது. அதில் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் ஓர் சாஸ்வதமான சமாதானம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந் நம்பிக்கை இயலாது போயிற்று. அதன்பின் மகாத்மா காந்தி இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றபின்னர் சட்டமறுப்பியக்கம் எவ்வாறு தொடங்கப்பட்டதென்ற வரலாறுகளை விரித்துக் கூறுவது, சட்டமறுப்பு நிறுத்தப்பட் டிருக்கின்ற இதுபோது அவசியமில்லை. காந்தி—இர்வின் ஒப்பந்த கர்த்தர்களின் நோக்கம் எதுவோ அந்த நோக்கத்தைப் புறக்கணித்து நடக்கும் முறையிலேயே அதிகாரிகளும், ஒப்பந்த ஷரத்துக்களை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பைப் பெற்றவர்களும் நடந்துகொண்டார்க ளென்பதில் சந்தேகமில்லை. லார்டு இர்வின் வைசிராய்ப் பதவியிலிருந்து விலகியபின் லார்டு வில்லிங்டன் அப் பதவியை ஏற்றார். காந்தி—இர்வின் ஒப்பந்தம், லார்டு இர்வின் செய்த சாணக்கி என்ற உணர்ச்சி அதிகார வர்க்கத்திற்கு அதிகமிருக்கிற தென்பதை அதிகாரிகள் விளக்கிவிட்டார்கள்.

லார்டு இர்வின் சென்றதும் சர்க்கார் முறை முற்றிலும் மாறுபட்டது. லண்டன் மகாநாடு முடிந்ததும் காங்கிரஸ் திகைத்து நிற்கும்படிச் செய்வதற்கான காரியங்களை யெல்லாம் அதிகாரிகள் செய்ய ஆரம்பித்தனர். காங்கிரஸ் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவும் அதிகார வர்க்கம் மறுத்துவிட்டது. அதிகார வர்க்கத்தின் இந்த முயற்சிக்கு இங்கிலாந்தில் ஏற்பட்ட நிலைமையும் சாதகமா யிருந்தது. தொழிற்கட்சி சர்க்கார் ராஜிநாமாச் செய்துவிட்டதும் பெரும்பான்மையான கன்சர்வேடிவ்களைக் கொண்ட சர்க்கார் ஆட்சிக்கு வந்தது. லார்டு இர்வினும் ஸ்ரீ வெட்ஜ்வுட் பென்னும் கொண்ட கொள்கையை முழுவதையும் அடியுடன் மாற்றிவிட்டார்கள்.

அடுத்த சட்டமறுப்பு

மகாத்மா காந்தி லண்டனிலிருந்து திரும்பி வந்ததும் ஜாக்கிரதையாகவும் சாமர்த்தியமாகவும் ஒரு புதிய நிலைமை சிருஷ்டிக்கப்பட்டிருப்பதைக் கண்டார். தப்பாக ஐக்கிய மாகாணத்தில் நிலத் தீர்வை மறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததென்று புரளிசெய்யப்பட்டிருந்தது.

நடந்த சமரசப் பேச்சுகள் முடியட்டுமென்பதற்காக வரி செலுத்துவதை நிறுத்தியதைத் தவிர, அது உண்மையில் வரி மறுப்பல்ல. ஐக்கிய மண்டலத்தில் மிகவும் மோசமான பொருளாதார நிலைமை ஏற்பட்டு விவசாயிகள் கஷ்டப்பட்டார்கள். எனவே நிலக் குத்தகை, வாரம் முதலியவைகளில் ஒரு நிரந்தரமான ஏற்பாட்டைச் செய்வதற்காகச் சர்க்காருக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் சமரசப் பேச்சு நடந்துவந்தது. இது ராஜீய விஷயம் சம்பந்தமில்லாத சுத்தப் பொருளாதார விஷயம். பண்டித ஜவஹர்லால் நேரு, ஸ்ரீ ஷெர்வானி, ஸ்ரீ தாண்டன் ஆகியவர்கள், மகாத்மா காந்தி இந்தியாவிற்கு வந்து சேர்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு கைதியானார்கள். கான் அப்துல் கபூர்கானும் அவருடைய சகாக்களும் எல்லைப்புறத்தில் கைதியானார்கள். அத்துடன் பல அவசரச் சட்டங்களும் பிரயோகிக்கப்பட்டன. இத்துடன் ஐக்கிய மண்டலம் எல்லைப்புறத்திலும் பல அவசரச் சட்டங்கள் பிரயோகமாயின. மகாத்மா காந்தி தமது யாத்திரையில் வெளியிட்ட அறிக்கைகளிலெல்லாம் ஒத்துழைக்கத் தயாராயிருப்பதாகக் கூறிவந்தார். ஆனால் இந்தியாவில் அடி வைத்ததும் தமது சகாக்கள் கைதி செய்யப்பட்டுச் சிறைக்கனுப்பப்பட்டிருப்பதையும், ஐக்கிய மண்டலத்திலும், எல்லைப்புறத்திலும் அவசரச் சட்ட அமுல் நடப்பதையும் கண்டார். எனினும் காங்கிரஸ் காரியக் கமிட்டியின் சார்பில் சமரசத்தை நிலைநாட்டி, இச் சட்டங்களிலிருந்து விடுபட முயன்றார். வைசிராயைக் கண்டு பேச விரும்பினார். கண்டு பேசுவதாயிருந்தால் ஐக்கிய மண்டலம், வங்காளம், எல்லைப்புறம் ஆகியவைகளைப்பற்றிப் பேசக்கூடாதென்று கூறி, வைசிராயைக் கண்டு பேச மகாத்மாவிற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

கண்டுபேசவும் வைசிராய் மறுத்துவிட்டபிறகு சட்டமறுப்பிற்குத் தயாராயிருக்கும்படி காரியக் கமிட்டிக்கு யோசனை கூறுவதைத் தவிர மகாத்மாவிற்கு வேறு வழியில்லாது போய்விட்டது. இருந்தும் கடைசியாகவும் சமரசத்திற்கு மகாத்மா முயன்றார். நிபந்தனையின்றிக் கண்டுபேசத் தம்மை அனுமதிக்கும்படியும் இதற்கும் மறுத்துவிட்டால் காரியக் கமிட்டியார் சட்டமறுப்பை ஆரம்பிக்கத்தான் நேருமென்றும் மீண்டும் நீண்டதோர் தந்தியை மகாத்மா வைசிராய்க்கு அனுப்பினார். இதற்குக் கிடைத்த பதில் என்ன? இவரையும் காங்

கிரஸ் தலைவரையும் மற்றும் பல பிரபல காங்கிரஸ் தலைவர்களையும் கைதுசெய்ய நாடெங்கும் வாரண்டுகள் பிறந்தன.

அடக்குமுறைச் சட்டம்

ஆகவே நாட்டை நடாத்தத் தகுந்த தலைவர்கள் இல்லாதுபோய் விட்டனர்; எனினும் காரியக் கமிட்டியின் கட்டளைக்குப் பணிந்து தேசம் இயங்கிற்று. சர்க்கார் 15 நாளையில் காங்கிரஸ் இயக்கத்தை ஒடுக்கிவிடலாமென்று கருதினர். தடியடிகள், போலீஸ் துப்பாக்கித் துணிச்சல்கள், கொடிய அபராதங்கள், சொத்துப் பறிமுதல்கள் முதலிய கொடுமைகள் நடைபெற்றன. ஆனால் சட்டமறுப் பியக்கம் நிற்க வில்லை; பல மாதங்கள் தொடர்ந்து நடந்தன. விசேஷக் காங்கிரஸ் கூட்டங்கள் டில்லியிலும் கல்கத்தாவிலும் நடந்தன. போலீசார் தம் கொடுமைகளால் அவற்றைத் தடைசெய்துவிடப் பலவாறு முயன்றனர். எனினும் தடியடி கைது ஆகியவற்றி னிடையில் மகாநாடுகள் நடந்துவிட்டன. இந்த அவசரச் சட்டங்களின் வேகத்தையெடுத்துக்கூற அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவை இன்று சாஸ்வதச் சட்டங்களாகிவிட்டன. அவற்றின் சில பகுதிகளைக் கவனித்தாலே அதிகாரம் எவ்வளவு விசாலமா யிருக்கின்றனவென்பது புலனாகும். அவற்றின் கீழ் கோர்ட்டு அதிகாரம் மறுக்கப்பட்டது; பத்திரிகை உரிமை பறிக்கப்பட்டது; நிர்வாகிகட்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டது; புதிய குற்றங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. சில விஷயங்களில் ஒரு குற்றத்திற்குப் பலருக்குச் சேர்த்துத் தண்டனை விதிக்கப்பட்டது. புரட்சி யியக்கத்தை யடக்குவதென்று சொல்லி வங்காளத்தில் இயற்றப்பட்ட சட்டங்களையும் இஃதுடன் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். இச் சட்டங்களால் ராஜீய நடவடிக்கைகள் அடக்கப்பட்டதோடு சர்வ வல்லமையுள்ள இரகசியப் போலீசார் செய்யும் கஷ்டங்கள் பெருத்தன.

பலாத்காரக் கண்டனம்

பலாத்காரப் புரட்சி இயக்க சம்பந்தமாகக் காங்கிரஸ் கொண்டிருக்கும் நோக்கத்தை என்றும் மறைத்து வைத்ததில்லை. அதற்கு விரோதமான நிலைமை எவ்வளவு ஏற்படுத்த முடியுமோ அவ்வளவையும் மகாத்மா காந்தியின் சிறந்த செல்வாக்கில் காங்கிரஸ் செய்தே யிருக்கிறது. இவ் விஷயத்தில் சர்க்காருடன் ஒத்துழைக்க முற்படுகிறவர்களிடம்கூடச் சர்க்கார் சந்தேகங் கொள்ள ஆரம்பித்திருக்கிறது. வெடிகுண்டார்கள் வேலை தேசத்தின் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாயிருக்கிறது. மேலும் இது தவறான முறையா யிருப்பதாலும், இந்திய உணர்ச்சிக்கு நேர் விரோதமானதாகவு மிருப்பதாலும் காங்கிரஸ் பயங்கப் புரட்சியைப் பலமாக எதிர்க்கிறது. கடுமையான

அடக்குமுறையின் வேகத்தினாலும் இந்த இளைஞரைத் திருப்புவது அதிகக் கஷ்டமானதே.

தேசத்தில் பொருளாதார விஷயத்திலும் அதிகக் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், சர்க்கார் இந்திய விஷயங்களை நிர்வகிப்பது இந்தியரின் நன்மைக்கானதா யில்லாமல் பிரிட்டனின நன்மைககானதா யிருப்பதேயாகும். சென்ற சில வருஷங்களாக விவசாயிகள் அதிகமான நிலத் தீர்வைகளையும், நில வாரங்களையும் செலுத்த முடியாமல் திண்டாடுகிறார்கள். தேச அபிவிருத்திகளான இலாக்காக்களுக்குச் செலவழிக்கப்படும் பணத்தில் சர்க்கார் சிக்கனம் செய்துவிட்டனர். கைத்தொழிலிலும் பஞ்ச மேற்பட்டது. கையில் காசில்லாத கஷ்டத்தால் 200 கோடி ரூபாய்க்கு இந் நாட்டிலிருந்து தங்கம் கப்பலேறி யிருக்கிறது. வர்த்தகமெல்லாம் சீர்கேடடைந்தது. வேலையற்றோர் திண்டாட்டமோ ஏராளம். சாதாரண வருஷங்களில்கூட வேலையற்றோர் தொகை இன்னதென்பதைக் கணக்கெடுத்துக் கூற பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தைரியமில்லாதுபோனது ஒன்றே வேலையற்றோர் தொகை மிக அதிகமென்பதற்குப் போதிய உதாரணம். டம்பாச்சாரித்தனமான சக்காரின் நிர்வாகத்தை நடத்திச் செல்லவும் சுதந்திர இயக்கத்தை அடக்குவதற்குமே பஞ்சத்தால் வாடும் இந்திய மக்களுக்கு அதிகத் தீர்வைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஒட்டாவா ஒப்பந்தம் இந்தியாவின் நன்மைக்கு விரோதமானதென்ற விஷயங்களை நன்கறிந்தவர்க ளெல்லோரும் ஏகோபித்துக் கண்டித்திருக்கிறார்கள். இது இந்தியாவைப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யச் சலுகைக் கொள்கையுடன் பிடித்து இணைத்துவிட்டது.

கடல் கடந்த இந்தியர்

கடல் கடந்த இந்தியர் நிலைமையைக் கண்டு திருப்தியடைந்துவிடுவதற்கில்லை. அதனை நோக்குங்கால் நாம் பூரண சுயேச்சையடைய வேண்டுமென்பது வலியுறுத்தவேபடுகின்றது. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் அபிவிருத்திக்கு இந்தியர் உழைத்தது கொஞ்சமல்ல. எனினும் அவர்கள் பெறவேண்டிய நியாயமான உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு வருகின்றன. அவ் விந்தியர்களில் பலர் அங்கேயே பிறந்தவர்கள். இவர்களுடைய உழைப்பு இனி அவசியமில்லை எனத் தெரிந்ததும் இவர்களை விரட்டிவிடத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. பண உதவி செய்து திருப்பியனுப்புவதென்ற முறையைக் கைவிட்டுவிட்டது சிறிது சந்தோஷிக்கத் தக்கதே யெனினும், இந்தியாவில் மற்றவர்கள் வந்து குடியேறித் தங்கியிருப்பதற்கு எத்தகைய உரிமையும் சுதந்திரமு மிருக்கிறதோ அதே சுதந்திரத்தின்மீது இந்தியர்

போய்க் குடியேறிச் சுதந்திரத்துட னிருப்பதற்குப் பிரிட்டிஷ் சாம் ராஜ்யத்தில் ஒரு நாடுகூட இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்தியரை வெளியேற்றிவிடும் வேலை சமீபத்தில் ஜான்சிபாரில் ஆரம்பமாகி இருக்கிறது அங்கு இந்தியர் சுல்தானோடு அந்நியோந் யராய் நீண்ட நாள் பழகி வந்தும், வெளிநாட்டாராகிய அரேபியருக் கில்லாத முறையில் இந்தியர் சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ளக் கூடாதென்று கூறப்பட்டிருக்கிறது. இதுவொன்றே இந்தியர்பால் நாட்டப்படும் வஞ்சகத்துக்குச் சான்றாகும். இந் நிலைமையில், தாய் நாட்டிலிருக்கும் நமக்கு உரிமை கிடைக்கக் கிடைக்க வெளிநாட்டி லிருப்பவர்கட்குச் சுகமேற்படு மென்பதைத் தவிர வேறொன்றும் அவர்கட்கு நம்மால் கூற முடியாது. இந்த விடத்தில் தம்மால் கூடு மானபோதெல்லாம் தென்னாப்பிரிக்கா சென்று இந்தியருக் கொத் தாசை செய்துவரும் தீனபந்து ஆண்ட்ரூசை வணங்காம லிருக்க முடியாது.

இரட்டைக் கொள்கை

1929-ம் வருடத்தில் லார்டு இர்வின் சர்க்கார் கொள்கையை வட்டமேஜை மகாநாடு கூட்டப்படுமென்று வற்புறுத்திப் பேசிய பதி லுக்கு இரண்டு வித நோக்கங்க ளுண்டென்று கூறினர். இதனை வெல்லிங்டன் சர்க்கார் பலதடவை வற்புறுத்தி அக் கொள்கைகளில் ஒன்று அரசியல் அபிவிருத்தி யென்றும், மற்றது சர்க்கார் புரட்சி இயக்கமென்று கருதுகின்ற இயக்கத்தை நசுக்குவதென்றும் கூறி யிருக்கிறார்கள். முதல் அம்சத்தைப்பற்றிக் கூறுகையில், லண்டன் மகாநாட்டைக் கூட்டியதாகவும், இந்தியருடன் கலந்தாலோசித்ததின் பலனைச் சர்க்கார் யோசனை சமர்ப்பித்ததாகவும், அந்த யோசனைகள் தற்சமயம் பார்லிமெண்டுக் கமிட்டியின் ஆலோசனையி லிருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்த அரசியல் யோசனைக்குத்தான் வெள்ளை அறிக்கை என்று பெயர். சர்க்கார் கொள்கையின் இரண்டாவது அம்சத்தைப் பொறுத்தவரையில் சட்ட மறுப்பைப் பலமாக நசுக்க வேண்டியது அவசியமென்று சர்க்கார் கருதுகிறார்கள். இந்த இரண் டாவது அம்சத்தைத்தான் இந்தியர் நன்கறிந்திருக்கிறார்கள். கணக் கற்றவர்களுக்கு இருந்த சிறிது உரிமைகளையும் இச் சட்டங்கள் பறித்து, பெருந் தண்டனைகளையும் விதித்தது மாத்திரமின்றி, அர சியல் கிளர்ச்சியைக்கூட நசுக்கியிருக்கிறது. அரசியல் சீர்திருத்தக் கொள்கையின் பலன் என்ன? வரப்போகிறவைகளை ஒரு சிலர் நம்பிக் கொண்டு காலந் தள்ளும்படிச் செய்திருக்கிறது. மூன்று லண்டன் மகாநாடுகள் நடந்தன! கமிட்டி, சப் கமிட்டிக் கூட்டங்களும் அநே கம். கூட்டுப் பார்லிமெண்டுக் கமிட்டி முன்பும் நீண்ட நாள் விவாதம் நடந்தது. எப்படியோ 5 அல்லது 6 வருஷங்கள் கடந்து போய்

விட்டன. ஆனல் இந்தப் பிரமாதமான வேலையின் பயனை அதிமித வாதிகளையாவது திருப்தி செய்விக்கக்கூடிய அரசியல் அமைப்பு வெளிவருமா என்பது இனி இருந்து பார்க்கவேண்டிய விஷயமாகும்.

வெள்ளை அறிக்கை விபரீதம்

வெள்ளை அறிக்கையை இந்தியாவில் பொதுஜனங்கள் ஏகமனதாகக் கண்டிக்கின்றனர். அது ஏமாற்றத்தை அளிக்கக் கூடியதாகவும் அதிருப்திகரமாகவும் இருக்கிறதென்பது பொது ஜனங்களின் அபிப்பிராயம். ராணுவம், நிதி, அந்நிய நாட்டுச் சம்பந்தம், தேசத்தின் உள்நாட்டு நிர்வாகம் முதலியவைகள் உள்படச் சகல முக்கிய விஷயங்களும் இந்தியர்களின் பூரண நிர்வாகத்தின் கீழிருக்கவேண்டும். சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து ஷை நிர்வாகம் எதையாவது ஏற்றுக்கொள்வதற்குக்கூட அது ஓர் தடையாக இருக்கிறது. அப்படியிருந்தும் அந்த வெள்ளை அறிக்கையிலுள்ள யோசனைகளைக் கூட உருக் குலைப்பதற்கான முயற்சிகள் இங்கிலாந்தில் தீவிரமாக நடைபெறுகிறது. அவ் வறிக்கை நமது தேச மிதவாதிகளின் நோக்கமான குடியேற்ற நாட்டு அந்தஸ்திற்கு அருகில்கூட நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கவில்லை! இத்தகைய நிலைமையில், காங்கிரசின் லக்ஷியமான பூரண சுயேச்சைக்கு அது நம்மை எங்கு கொண்டு போகப்போகிறது?

1. ஐக்கிய சட்டசபை

அதன்படி தற்போது சட்டசபையிலுள்ள அதிகாரிகள், சர்க்காரால் நியமனம் பெற்ற உத்தியோகஸ்த ரல்லாதார், இவர்கள் ஸ்தானத்தில் இந்திய சமஸ்தானங்களால் நியமனம் பெற்றவர்கள் வந்து சேருவார்கள். பிரிட்டிஷ் இந்தியாவில் நியமனம் பெறும் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்த ரல்லாதார்களும் பொதுஜன அபிப்பிராயத்திற்கிணங்கி நடப்பார்களெனக் கூறமுடியாது. இப்போது சமஸ்தானங்களைப் பிரித்து வைத்திருக்கிருர்கள் அப்படியிருக்க பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெறும் சம்பவங்களைப்பற்றிச் சமஸ்தான நியமன அங்கத்தினர்களுக்கு ஏதாவது தெரியுமா? ஆதலால் பிரிட்டிஷாருக்குள்ள பிடிப்பு அதிகமாக இருக்குமேயொழியத் தளராது. இத்தகைய கோலங்களைத் தவிர, அவர்களுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கும். மாண்டேகு சீர்திருத்தத்தின்படி இந்தியா சட்ட சபையிலுள்ள 145 அங்கத்தினர்களில், 40 பேர்கள் நியமன அங்கத்தினர்கள். ஆனல் வெள்ளை அறிக்கைத் திட்டத்தின் கீழே 375 அங்கத்தினர்க ளடங்கிய சட்டசபையில் 125 பேர்கள் (33.3%) சமஸ்தானங்களிலிருந்து நியமனம் பெறறவர்கள். இப்போதிருப்பதைவிட 6% அதிகமாகும். புதிய ஐக்கிய சபையின் தனித்தொகுதி முறை நிலைபெற்றிருப்பதுடன் பிரிட்டிஷாரையும் கவர்னர் ஜெனரலை

யும் ஆதரிப்பவர்களின் தொகை மிகவும் அதிகயாகி யிருக்கிறது. தற்போதுள்ள 104 பேர்களில் 41 பேர்கள் தனித்தொகுதி மூலம் தேர்தலுச்கு நிற்பார்கள். எனவே வெள்ளை அறிக்கைச் சட்டசபை யானது, பிற்போக்கானதாக இருக்குமென்பதில் சந்தேகமேயில்லை. ஜனப் பிரதிநிதி சபையே இவ்வளவு லக்ஷணத்தி லிருக்கும்போது, இரண்டாவது சபையைப்பற்றிக் கேட்கவேண்டியதே யில்லை. புதிய அரசியலின்படி இரு சபைகளிலுமாக இருக்கும் 636 பேர்களில் 235 பேர்கள் (அதாவது 37%) நியமன அங்கத்தினர்களாக இருப்பார்கள். எனவே, பிரிட்டிஷ் இந்தியா சம்பந்தமாக ஓர் பிரிட்டிஷ் இந்திய மந்திரிமீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவரும் பட்சத்தில், சமஸ்தான மெம்பர்கள் அந்த மந்திரியை ஆதரிக்கும் பட்சத்தில் ஷெ தீர்மானமானது ஓர்போதும் 3-ல் 2 மடங்கு ஓட்டுக்கூடப் பெற்று விடாது.

மாகாணங்களிலும் 2-வது சபையா?

மாகாணங்களில் நியமன முறையை ஒழித்திருக்கிறார்கள். எனினும் அதன் ஸ்தானத்தில் வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா, ஐக்கிய மண்டலம் முதலியவைகளின் தலையில் 2-வது சபையைச் சுமத்தி யிருக்கிறார்கள். இத்தகைய இரண்டாவது சபைகளை அமைப்பதால் மிகவும் செலவு ஏற்படும். அத்தகைய செலவு மிகவும் அநீதியான தாகும். தவிர, மாண்ட்—போர்டு சீர்திருத்தங்களின் அனுஷ்டானத் தின் பயனாகப் பெற்றுள்ள அனுபவமும் இரண்டாவது சபைகள் நியமிக்கும் முறைக்கு ஆதரவளிக்கவில்லை.

இதுதானா சுயாட்சி!

கவர்னர்-ஜெனரலிடம் அதிகாரங்களை அளித்து, சட்டசபைக்குப் பொறுப்பாளியாக இருக்கும் மந்திரிகளிடம் ராணுவம், அந்நிய நாட்டு விஷயம், மத சம்பந்தமான இலாகாக்கள் முதலியவைகளின் நிர்வா கத்தை அளிக்க மறுக்கும் எந்த அரசியலும் சுயாட்சியோ, பொறுப் பாட்சியோ, குடியேற்ற நாட்டு அந்தஸ்தோ அல்லது பூரண சுயேச் சையோ அளிப்பதாகக் கூறமுடியாது. சட்டசபை அதிகாரத்தில் மாற்றுவதாகக் கூறும் இலாக்கா சம்பந்தமாகக்கூட மந்திரிகளின் ஆலோசனைப்படி கவர்னர்-ஜெனரல் நடந்துகொள்ள மாட்டாராம். இதைத் தவிர, அவருக்கு எதேச்சாதிகாரங்கள் வேறு இருக்கின்றன. அவர் எம் முறைகளை வேண்டுமாயினும் தடுத்துவிடமுடியும்.

'கவர்னருக்கு மாகாண சுயாட்சி'

மாகாண சுயாட்சியெனத் தடபுடல் செய்யும் அறிக்கையானது கவர்னருக்கே மாகாண சுயாட்சி யளிப்பதாக இருக்கிறது, சட்டம்,

சமாதான நிர்வாகத்தை மந்திரிகளிடம் மாற்றியிருப்பதாகக் கூறுகிறார்களெனினும், அந்த நிர்வாக அதிகாரத்தை உண்மையில் கவர்னர்-ஜெனரல், கவர்னர் இவர்களுடைய விசேஷப் பொறுப்புள்ள என்ற இரட்டைப் பூட்டுகளால் பூட்டி வைத்திருக்கின்றனர். 'விசேஷப் பொறுப்பு' என்பது ரப்பர்போல் நீளக்கூடியது என்பதை இத்தேசத்தில் யாரறியார்கள்?

சர்க்கார் கரன்ஸி கொள்கை

இரண்டாவதாக நிதி சம்பந்தமாக மந்திரி கைக்கொள்ளும் கொள்கையானது உலக மார்க்கெட்டில் இந்தியாவின் நாணயத்திற்குப் பங்கமேற்படும்போல் தோன்றினால் உடனே அதில் தலையிட கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரமுண்டு. இந்தியாவின் நாணயத்தையும் நிதி நிலைமையையும் உறுதிப்படுத்துவதென்பது இந்தியாவிற்கு விரோதமாகப் பிரிட்டன் லாபம் பெறுவதென்பதேயாகும். இதற்குச் சாதகமாகவிருக்கிறது வெள்ளை அறிக்கை.

பிரித்தாளும் முறை

சிறுபான்மையோரான நமது முஸ்லீம் சகோதரர்களும், மற்றவர்களும் தங்களுடைய க்ஷேமத்தைப் பாதுகாக்கத்தான், பிரிட்டிஷ் இருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து இங்கு வந்து பொருள் திரட்டி, அந்திய காலத்தில் ஆனந்தமாகக் கழிக்கத் தங்கள் நாட்டிற்குச் சென்றுவிடும் பேர்வழிகளுக்காகவே, ஷை பாதுகாப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிதல் வேண்டும்.

உரிமைகள் ரகசியம்

சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதென்ற விஷயம் சுயாட்சிக்கே முற்றிலும் விரோதமாகும். பிரிட்டிஷாரிடத்தில் பாரபட்சம் காட்டக் கூடாதென்ற காரணத்தைக் கூறிக்கொண்டு, முன்னரைப்போல் எதிர்காலத்திலும் இந்தியர்கள் விஷயத்தில் பாரபட்சம் காட்டுவார்கள்.

பழைய உரிமைக்கும் ஆபத்து

வெள்ளை அறிக்கையானது தற்போதுள்ள இந்தியா சட்டசபையின் சில அதிகாரங்களையும் பறித்துவிட்டது. ரயில்வே வரவு-செலவுத் திட்டம் யோசனைக்கு வரும்போது ரயில்வே நிர்வாக சம்பந்தமான குறைகளை இப்போது முறையிடக்கூடும். அவ் விஷயமாக விவாதித்து ஓட்டுக் கொடுக்கத் தற்போது இந்திய சட்டசபைக்கு

அதிகாரமுண்டு. ஆனால் சட்டபூர்வமான ரயில்வே போர்டு அமைப்பின் பயனாக, எதிர்கால சர்க்காரோ அல்லது சட்டசபையோ அவ் விஷயமாகப் பலமாகக் கண்டித்து எதுவும் கூறமுடியாது. இது ஓர் அற்ப விஷயமல்ல. ரயில்வேயில் 800 கோடி ரூபாய் போடப்பட்டிருக்கிறது. அவைகள் பெரும்பாலும் தேசீய ஸ்தாபனங்கள். அவ் விதமிராதவைகளும் நாளாவட்டத்தில் சர்க்காரிடம் மாறி வருகின்றன.

சீர்திருத்தப் பகட்டு

நிதி விஷயத்தைக் கவனித்தால் சீர்திருத்தமென்று சொல்லப் படுவதின் பகட்டுப் பட்டவர்த்தனமாக விளங்கும். இந்தியத் தலைமை சர்க்கார் வருமானத்தில் 100-க்கு 80 வீதம் இராணுவச் செலவு, கடன் செலவு, உத்தரவாத சம்பளங்கள், பென்ஷன், படிச் செலவுகள் முதலியவைகளுக்கு ஒதுக்கி வைத்துவிடுவார்களாம். அதாவது இதைப்பற்றி இந்தியச் சட்டசபை எவ்வித அபிப்பிராயமும் கூற முடியாது. வருமானத்தில் பாக்கியுள்ள 20 விகித சம்பந்தமாகவே சட்டசபைக்குப் பொறுப்பு வாய்ந்தவரென்று கூறப்படும் மந்திரி கையாளலாம்

அதுவும் ராஜாங்க சபை (2-வது சபை)யில் முதலில் அங்கீகாரம் பெறவேண்டும். பின்பு இரு சபைகளும் சேர்ந்த கூட்டத்தில் இதைப்பற்றிய திட்டத்தைக் கொண்டுவருவார்களாம். மேலும் ஏதாவது ஓர் இனம் சம்பந்தமாக மந்திரி ஒதுக்கி வைக்கும் பணமாவது, தனது விசேஷப் பொறுப்பை நிறைவேற்றி வைக்கப் போதியதல்லவென்று கவர்னர்-ஜெனரல் நினைத்துவிட்டால் போதும். அவர் போதுமென நினைக்கும் பணத்தை அச் செலவினத்திலே சேர்க்கலாம். அதைப்பற்றி ஓட் செய்யச் சட்டசபைக்கு அதிகாரம் கிடையாது. எனவே இந்தியா தலைமைச் சர்க்கார் நிதி விஷயமாக மந்திரிக்கு எவ்வித அதிகாரமும் கிடைக்கவில்லை.

எவரும் சம்மதிக்கமாட்டார்கள்

மாகாண சுயாட்சியால் தேசத்திற்கு வருஷா வருஷம் ரூ. $6\frac{1}{2}$ முதல் 8 கோடி வரையில் அதிகச் செலவாகுமெனப் பெரிய அதிகாரிகளே சொல்லுகிறார்கள். நிலைமை சர்க்காரில் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதால் மற்றும் 2 கோடி ரூபாய் செலவாகுமாம். இந்தியா உலகிலேயே மிகவும் ஏழ்மையான தேசம்!

இவ் வரசியல் உலக சரித்திரத்திலேயே என்றும் கேட்டிராத ஐக்ய சர்க்காராம். இதன்படி இந்தியாவின் மூன்றில் ஒரு பாகத்தை ஆண்டுவரும் மன்னர்களின் நியமனப் பேர்வழிகள், தேர்ந்தெடுக்கப் பட்ட பாக்கி மூன்றில் 2 பங்கினருக்குப் போட்டியாகவும் முட்டுக்

கட்டை போட்டும் வருவர். இரு அம்சத்தினருக்குப் பரஸ்பர ஒற்றுமையான விஷயங்க ளெதுவுமே கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் மன்னர்களின் நியமனப் பேர்வழிகள் சம உரிமையும் அந்தஸ்தும் பெறுவர். சமஸ்தான நிர்வாகத்திலே பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் எவ்விதத்திலும் தலையிட முடியாதிருக்கும் சமஸ்தானங்களில், மக்களுக்கு மூலாதார சாதாரணப் பிரஜா உரிமைகூட அளிக்காமல், எதேச்சாதிகார ஆட்சிமுறை நடந்துகொண்டே இருந்தாலும் சரி; அவ் விஷயமாகப் பேச பிரிட்டிஷ் இந்தியருக்கு உரிமை இருக்காதாம். ஆனால் பிரிட்டிஷ் இந்திய நிர்வாக விஷயமாக மன்னர்களின் நியமன ஆசாமிகள் சம உரிமையுடன் தலையிடலாம். ஆனால் மன்னர்களின் நிலைமை என்ன? இப்பொழுதுள்ளதைவிட அவர்கள் நிலை நிர்க்கதியாகிவிடும் பிரிட்டிஷ் இந்திய மக்களின் காற்று அவர்கள்மீது படாதபடி தடுத்து வைசிராய்க்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய நோக்கத்துடன் ஏற்படுத்தியுள்ள இந்த முறையின் பலனை அவர்கள் சீக்கிரம் உணர்ந்துவிடுவர்.

காங்கிரஸ் கொள்கை

நமது சொந்தக் கொள்கைகள், யோசனைகள் இவற்றைப் பற்றிக் கவனிப்போம். 1932ஆம் ராஜி முறிந்தது. அதுமுதல் சர்க்கார் அனுஷ்டிக்கும் முறையானது குறுக்கிடாதபடி நமது வழியை நாம் செப்பனிட்டுக் கொண்டு செல்ல வேண்டியதாகப் பல சம்பவங்களும் எப்படியோ நிகழ்ந்து வருகின்றன. சர்க்கார் கொள்கை காரணமாகச் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கவில்லை. நமது போராட்டத்தின் விசேஷ ஒழுக்க, ஆன்மார்த்தத் தன்மை காரணமாகவே அவ்விதம் செய்தோம்.

1934ஆம் மே மாதத்திலே சரித்திரத்தில் பதியத்தக்க முக்கிய தீர்மானம் பாடலீபுரத்திலே நிறைவேறியது; ஜெயிலிலிருந்து கொண்டே பிரதம மந்திரியின் வகுப்புத் தீர்ப்பை காந்திஜி எப்படி வெற்றிகரமாக மாற்றி ஹிந்து சமுதாயத்தை இரு கூறாகப் பிரிப்பதைத் தடுத்தாரென்பதையும் தீண்டாமை விலக்கு இயக்கத்தை எவ்விதம் அவர் தீவிரப்படுத்தினாரென்பதையும், சரித்திர விசேஷமான அவரது உபவாச விரதத்தையும் அவரது விடுதலை, புனா மகாநாடு, ஹரிஜன யாத்திரை, இவைகளைப் பற்றியும் அவர் தேசமெங்கும் சுற்றிப் பார்த்து நிலைமையை அறிந்து, சட்டமறுப்பு இயக்கத்தைத் தன் மட்டில் வைத்துக்கொண்டு, நிறுத்தி வைக்க வேண்டுமென்று அ. இ. கா. கமிட்டிக்கு சிபார்சு செய்தாரென்பது பற்றியும் நான் இங்கு விளக்க விரும்பவில்லை.

இரு காரணங்கள்

நமது இயக்கத்திற்குத் தடையாக இருந்தவைகள் முக்கியமாக இரு குறைபாடுகளென்றே நான் எண்ணுகிறேன். முதலாவதாக, காங்கிரஸ் ஊழியர்கள், தாங்களே அறியாமல் சிறுகச் சிறுக ரகசிய முறைகளை அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். நேர்முகமாக எதிர்த்து நடக்கும் தர்ம யுத்தமானது, தந்திரத்தால் நடக்கும் போராக இதனால் தாழ்ந்துவிட்டது. எதிரியின் மனச்சாட்சிக்குப் படும்படி செய்து, எதிரியை வெல்வதே சத்யாக்கிரகம்.

இரண்டாவதாகச் சர்க்கார் அடக்குமுறையிலொன்றாக நம் சொத்துக்களையே பறிமுதல் செய்யத் தொடங்கிவிட்டார்கள். சொத்தென்பது உயிருக்குச் சமம். எனவே நம் இயக்கம் தளர்வடைவதாயிற்று. ஆதல் பற்றி நம் இயக்கத்தை நிறுத்தி வைக்க வேண்டுவதாயிற்று. எனினும் மனச்சோர் வடைவதற்கில்லை. நம் தேசம் பெரிய கண்டம் போன்றது. பலதிறப்பட்ட மக்களையும் உடையதாகும்.

சட்டசபைப் பிரவேசம்

சென்ற ஏப்ரல் 7உ மகாத்மா காந்தி முதல் அறிக்கையை பாடலீபுரத்திலிருந்து வெளியிட்டனர். மகாத்மாவுக்கும் டாக்டர் அன்சாரிக்கும நடைபெற்ற கடிதப் போக்கு வரவுகளும் வெளியாயின. காந்திஜீ, தான் நீங்கலாக எவரும் சட்டமறுப்பை நிறுத்தி விடலாமென்றும் சட்டசபைப் பிரவேசத்தில் நம்பிக்கையுடையவர் அவ்வாறு செய்யலாமென்றும் அறிக்கை வெளியிட்டார். அதன் மேல் தேர்தல் விஷயமாகக் கவனிக்கும் பொருட்டு ஒரு பார்லிமெண்டரி போர்டு ஏற்படலாயிற்று. சட்டசபைப் பிரவேசத்தில் எல்லோரும் ஏகமனப்பட் டிருக்கிறோம். ஆனால் வகுப்புத் தீர்ப்பில் மட்டிலும் அபிப்பிராய வித்தியாச மிருக்கிறது.

சமூகத் தீர்ப்பு

இரண்டாவது லண்டன் மகாநாடு முடிவுற்றதும் இந்தியப் பிரதிநிதிகள் சட்டசபையில் பல வகுப்பினரும் எவ்விதம் பிரதிநிதித்வம வகிப்பதென்பதைப் பற்றியொரு முடிவான அபிப்பிராயம் தெரிவிக்க இயலாது போனதால், பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு முடிவைத் தெரிவித்தார்கள். அத் தீர்ப்பு நம் சமரசத்திற்கு பாதகமானதும் ஜனநாயகக் கொள்கைக்குப் புறம்பானதுமாகும். இதனைச் சிறுபான்மையோர் சிலர் வெறுக்கின்றார்கள்; சிலர் ஆதரிக்கின்றார்கள். ஹிந்துக்களும் சீக்கியரும் அடியோடு இத் தீர்ப்பை நிராகரிக்க வேண்டுமென்கின்றனர். இந்தத் தர்ம சங்கடத்தைப் பார்த்து காங்கிரஸ் மேற்படித் தீர்மானம் தேசீயத்திற்கு விரோத

மான தென்றும் அதிர்ப்திகாமான தென்றும் எடுத்துக் காட்டிக் கொஞ்சக் காலத்தில் சமரசத் தீர்மானம் ஏற்படுத்திக் கொண்டு அத் தீர்மானத்தை மாற்றிவிடலா மென்று நம்புவதாகக் கூறிப் பிரிட்டிஷார் தீர்ப்பை நிராகரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று.

காந்திஜி அறிக்கை

இந்த நிலைமையில் தேசத்தைத் திகைப்பிக்கின்ற முறையில் காந்திஜி இரு அறிக்கைகளை விட்டிருக்கிறார். அவ் வறிக்கைகளை எல்லோரும் மெச்சுகின்றார்கள். வழக்கமாகக் காந்தியைக் கண்டிப் பவர்களுங்கூட நாங்கள் அப்படித்தான் கருதினோ மென்கின்றனர். முதலாவது அறிக்கையில் தமது உயிரைவிட மேலானதாகக் கருதும் சத்தியம், சாத்வீகம், கதர் முதலிய உண்மைகளைப் பற்றி விளக்குகிறார் சிலர் எத்தகைய சீர்திருத்தத்தையும் ஏற்றுக் கொள்வதில்லை. சிலர் ஏற்றுக்கொண்டும் அதன்படி முழுதும் நடப்பதில்லை. இந்த நிலைமையில் மகாத்மா விலக நினைப்பது ஆச் சரியமன்று. இரண்டாவது அறிக்கையில் காந்திஜி விலகுவதே உசிதமென்றும், அதனால் காங்கிரஸ் வளம்பெறு மெனவும் கருது கின்றார். காந்திஜி விலகுவதை சர்தார் படேல், கான் சகோதரர் கள், டாக்டர் அன்சாரி முதலியோர் மனமார ஆதரிக்கின்றனர். நானும் இதர தலைவர்கள் ஆதரிப்பதுபோல் ஆதரியாமலிருந்தேனே யானால் அவரிடம் (துறவைப் பற்றி) வாதாடி யிருப்பேன். காந்திஜி விலகுவதை நினைத்தால் என் இருதயமும் மனமும் துடிக் கின்றன. எனினும் அவர் விலகும் சத்தியமான உண்மையை நம்பி சமாதானப்படுகிறேன். மகாத்மா சத்தியத்தையும் சாத்வீ கத்தையும் ஆதாரமாகக் கொண்டே இப்போது விலகுகின்றார்.

மகாத்மா தம் லக்ஷியங்களைக் காங்கிரசில் நிறைவேற்ற விரும்பு கிறார். ஆனால் அதற்காக அதிகப்படி வோட்டுகளைச் சேகரிக்க முயலலாகா தென்று கருதுகிறார். உங்கள் திட்டங்களிலும் லட்சி யங்களிலும் ஓரளவு அவற்றிற்கு இடம் கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். காந்திஜீக்கு அவர் கொள்கைகளிலிருக்கும் நம் பிக்கை போல எனக்கு நம்பிக்கை இல்லை. அவரது சத்தியமான வாழ்க்கையும் என்னிடம் இல்லை.

உயர்ந்த தத்துவங்கள்

"அமைதியானதும் ஒழுங்கானது"மான என்ற பதங்களின் கருத்து "சத்தியமானதும், சாத்வீகமானது"மான பதங்களின் அர்த்தமென்பதைப் பற்றி நீங்கள் இந்த பல வருடங்களில் எப் பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? நமது கொள்கையைப் பற்றி இதர தேசத்தினர் வேறு விதமான அர்த்தம் கொண்டிருக்கி

ரூர்களா? இவ்வளவு வருடகாலமாக நாம் இதே லட்சியத்துடன் நமது இயக்கத்தை நடாத்தி வந்திருக்கிறோம். இந்த உயர்ந்த லட்சியம் காரணமாக உலகமே நமது இயக்கத்தை ஆவலுடன் கவனித்து வந்தது. நாம் இந்த லட்சியத்தைக் கைவிட்டோமேயானால் நமது போராட்டத்தை உலகம் அவ்வளவு ஆவலுடன் கவனிக்காதென்பது நிச்சயம். நமது சாத்வீக எதிர்ப்பு நம்மை ஆளுவோரை நாகரிகப்படுத்தி சீர்திருத்தஞ் செய்யத் தவறிய போதிலும், நம்மிடம் அதிகாரிகள் மிருகத்தனமாகவும், வெட்கக்கேடாகவும் நடந்துகொண்டார்களென்பதை மறுக்க முடியாது.

மகாத்மா சேவை

தேசம் சம்பந்தப்பட்ட வரையில் அவர் காங்கிரசிலிருந்து விலகிவிடுவதால், காங்கிரஸ் அவரை இழந்துவிட்டதாகவோ அல்லது அவர் உதவி கிடைக்காதென்றோ நீங்கள் கருதலாம். மகாத்மா விலகுவதால் காங்கிரசுக்குப் பலம். காங்கிரசைப் பலப்படுத்தவும், அதற்கு வேண்டிய உதவி செய்யவுமே அவர் காங்கிரசிலிருந்து விலகுகிறார். காங்கிரஸ் மகாத்மா காந்தியின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை ஆகவே, மகாத்மா காங்கிரசிற்கு வெளியில் இருப்பதால் காங்கிரசிற்கும், தேசத்திற்கும் அதிக உதவியாயிருக்கும். நீங்கள் அவர் மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும். உறுதியான நம்பிக்கை வைப்பீர்களேயானால் அவர் காங்கிரசிலிருந்து வேலை செய்தாலுஞ் சரி, இறுதியில் யாவும் நன்மையாகவே முடியுமென்பது எனது உறுதியான நம்பிக்கை.

சட்டசபைப் பிரவேசம்

அடுத்த இந்திய சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் அபேட்சகர்களாக நின்று, சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு வெள்ளை யறிக்கையை இந்தியர் பேரால் உதறித் தள்ளவும், அடக்குமுறைச் சட்டங்களைத் தகர்த்தெரியவும் போகிறார்கள். ஆகவே ஓட்டர்கள், காங்கிரஸ்காரர் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்களென்பதைப் பகிரங்கமாகக் காட்டிக் காங்கிரஸ்காரர்களையே தேர்ந்தெடுப்பார்களென்று நம்புகிறேன். சட்டசபை மூலம் நாம் சுயராஜ்யம் அடைந்துவிடலாமென்ற எண்ணத்தால் மயங்கிவிட வேண்டாம்.

சுயராஜ்யப் போர்

சுயராஜ்யம் பெறுவதற்காகச் சகல தியாகங்களையும் நாம் சுயராஜ்யம் பெறுவதற்கு முன்னடியே செய்து தீர வேண்டுமென்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். சுயராஜ்யத்திற்காக நாம் செய்திருக்கும் தியாகங்களைப் பற்றியும் இதற்காக

நமது தேசம் எவ்வளவு கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறதென்பதைப் பற்றியும் நாம் பெருமை கொள்ள வேண்டியது ஒருபுறமிருக்க, நமது உயர்ந்த சுயராஜ்ய லட்சியம் கைகூடுவதற்கு நாம் இதுவரையில் செய்திருக்கும் தியாகங்கள் போதுமானவை யல்ல. காலமும் உலக சக்திகளும் நமக்குப் பெருந் துணையாக இருக்கின்றன. நம்மிடம் ஆயுதங்கள் கிடையாது. சத்தியமாகிய சாத்வீக எதிர்ப்பையும் பலாத்கார மின்மையையுமே நமது ஆயுதங்களாகக் கொண்டு மகாபலம் பொருந்திய ஒரு சர்க்காரை—தற்கால ரசாயன முறைப்படியும் மனிதர் தங்கள் சிறந்த மூளையால் கண்டுபிடிக்கக்கூடிய மகா கொடுமையான ஆயுதங்களுடைய—ஒரு சர்க்காரை நாம் எதிர்த்துப் போராட தெய்வமே நமக்குத் துணையாக இருக்கிறது. இந்தப் போராட்டத்திலிருந்து நாம் திரும்பி முதுகு காட்டி ஓட முடியாது. நமது லட்சியம் என்ன வென்பது நமக்குத் தெளிவாக இருக்கிறது. அதுவே பூர்ண சுதந்திரம்.

பூர்ண சுதந்திரம்

இந்தியாவில் நடந்தேறிவரும் சுதந்திரப் போராட்டத்தின் இயற்கையான முடிவு பூர்ண சுதந்திர லட்சியமேயாகும். இந்த லட்சியத்தை நாம் வேறாகப் பிரிக்க முடியாது. பூரண சுதந்திர லட்சியத்தை சாத்வீக எதிர்ப்பைக் கொண்டு நாம் அடைய வேண்டியதிருப்பதால் விசேஷமாக இதை நாம் வேறுபடுத்த முடியாது. ஒரு தேசம் மற்றொரு தேசத்தைக் கொள்ளை கொள்ளுவதை அடியோடு தொலைத்துவிட வேண்டுமென்பதே இந்தச் சுதந்திரத்தின் லட்சியம். ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரை அடக்கி, அடிமைப்படுத்தி அவர்கள் உரிமையைப் பறிப்பதை எதிர்ப்பதே இந்த சுதந்திரத்தின் லட்சியமாகும். சகல நாடுகளுடனும் நட்புக் கொண்டு, சகல நாடுகளின் நலனைக் கோரி சுதந்திரமாக இருக்க வேண்டுமென்பது இதன் லட்சியமாம். எவருக்கும் தீங்கு நினைக்கக்கூடாது. நம்மைக் கொள்ளை கொள்ளுபவர்களுக்குக் கூட நாம் தீங்கு நினைக்கக் கூடாது. அவர்கள் நல்ல எண்ணமின்றிச் சதா கொள்ளை கொள்ளுவதிலேயே நாட்ட மிருந்தால் அதை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அப்பொழுதும்கூட நாம் சாத்வீக எதிர்ப்பைக் கொண்டே ஜெயிக்க வேண்டும். பூர்ண சுதந்திரத்தின் லட்சியம் இதுதான். சாத்வீக எதிர்ப்பே அதன் மூல தத்துவம். சகலர் மீதும் துவேஷமின்றி, தீங்கான எண்ணமின்றி, அன்பாக நடந்துகொள்ள வேண்டும். சகலர் மீதும் அன்புகொண்டிருக்க வேண்டுமென்பதே சாத்வீகத்தின் ஒரே நோக்கம். இந்த சாத்வீக எதிர்ப்பு உலக மக்களை எவ்விதம் வசப்படுத்தி யிருக்கிறதென்பதையும், அவர்கள் அதை எவ்வாறு ஆதரித்து வருகிறார்கள்

என்பதையும் இப்பொழுதே நாம் பல அறிகுறிகளால் தெரிந்து கொண்டிருக்கலாம். சாத்வீக எதிர்ப்பின் மகிமையை அவர்களால் அறிந்துகொள்ளாமலிருக்க முடியாது. அதை நிராகரிக்கவும் முடியாது. இது சம்பந்தமாக அவர்களுக்கு நம்பிக்கை இன்மை ஏற்பட்டிருக்கலாம்; சந்தேகம் தோன்றியிருக்கலாம்; அதனால் இதில் நம்பிக்கை ஏற்பட்டிருக்காது. ஆனால் இந்தியாவின் நல்ல எண்ணமும், அதன் உறுதியும் அவர்களுக்கு நம்பிக்கையும் உண்டுபண்ணியிருக்கிறது. இந்தியாவுக்கு வேறு தேசங்களை ஜெயிக்க வேண்டுமென்ற திட்டம் கிடையாது. பிற நாடுகளை கொள்ளையடிக்க எண்ணமில்லை. ஆகவே இந்தியாவுக்குப் பெரிய சேனுவம் வேண்டியதில்லை. இந்தியாவைப் பிற நாடுகளின் படையெடுப்பிலிருந்து பாதுகாக்கவோ அல்லது இந்தியாவில் ஏற்படும் உள் நாட்டுக் குழப்பங்களை அடக்கவோ அதற்கு ராணுவம் வேண்டியதில்லை. இந்தியரின் நல்லெண்ணமே அதற்குப் போதிய பாதுகாப்பாகும். பிற நாடுகளை ஜெயிக்க வேண்டுமென்ற துர் எண்ணம் இந்தியாவுக்குக் கிடையாததலால் பிற நாடுகளும் இந்தியாவைக் கவர நினைக்கமாட்டா. ஆகவே, அதற்கு உலகத்தின் பாதுகாப்பும், ஆதரவும் கிடைத்துக் கொண்டிருக்கும். உலக மக்களின் நல்லெண்ணமும் இருந்து கொண்டிருக்கும். இந்தவிதப் பரிசுத்தமான கருத்து நம்மிடம் இருந்துகொண்டிருப்பதால் நமது பூரண சுதந்திர லட்சியத்தைப் பற்றிப் பிரிட்டிஷார்கூடப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. பிரிட்டிஷார் தற்போது இந்தியாவை வைத்துக்கொண்டிருக்கும் இயற்கைக்கு மாறான நிலைமையிலேயே சதா வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலொழிய இந்திய பூரண சுதந்திரத்தைப் பற்றி அவர்கள் அஞ்ச வேண்டியதேயில்லை. அவ்விதம் பூர்ண சுதந்திரமடைவதற்கான வழியும் தெளிவாகவிருக்கிறது. இந்தியர் சாத்வீக எதிர்ப்பைக் கொண்டே பூர்ண சுதந்திரமடைய வேண்டும். நாம் ஒரு முறை இந்த இயக்கத்தால் தோல்வியடையலாம்; இரு முறை தோல்வியடையலாம். ஆனால் என்றைக்கேனும் நாம் வெற்றி பெறுவது நிச்சயம். இந்த இயக்கத்தில் ஈடுபட்ட பலர் உயிர் துறந்தார்கள். வேறு பலர் தங்கள் சொத்துச் சுகமெல்லாம் இழந்தார்கள். எண்ணிறந்தோர், இந்த சுதந்திர இயக்கத்திற்காகத் தங்களையே அர்ப்பணஞ் செய்து விட்டார்கள். இந்தப் போராட்டத்தில் ஏற்படும் பல இடையூறுகளைக் கண்டு நாம் பின்னடையக் கூடாது. எவர் தயவையோ தாட்சண்யத்தையோ கண்டு அல்லது பயம் கொண்டு நமது நேரடியான முறையிலிருந்தும் மாறுபட்டு நமது சுதந்திரப் போராட்டத்தை நடத்தக் கூடாது. நாம் கைக்கொண்டிருக்கும் சாத்வீக எதிர்ப்பு ஆயுதம் இணையற்றது. உலகிலேயே அது ஒரு நவீன ஆயுதம். இந்த

சென்னைக் கடிதம்.

தற்காலத் தமிழ்க் கவிகள்.

[மு. வேலி.]

அன்பார்ந்த நண்ப,

தேர்தல் மறைந்தது. புயல் ஓய்ந்தமாதிரி இருக்கிறது.

தென்னிந்தியாவில் காங்கிரஸ் முழு வெற்றியடைந்தது ஆச்சர்யமல்ல. சுதந்திரத்திற்காகப் பாடுபடுபவர்களுக்குத்தானே மக்கள் ஆதரவளிப்பார்கள்? காங்கிரசின் ஜயம் பொதுஜனங்களுடைய ஜயம்.

* * *

உங்களுக்கு ச. து. சுப்பிரமணியத்தைத் தெரியுமா? இப்போது தமிழ் நாட்டில் இருக்கும் கவிகளில் இவரே முதன்மையானவர். சில நாட்களுக்கு முன்னால் பிரசிடென்சி காலேஜில் இவர் ஒரு பிரசங்கம் செய்தார். எடுத்துக்கொண்ட 'விஷயம் தற்காலத் தமிழ்க் கவிகள்.'

ஆயுதத்தைக் கொண்டு நாம் போராடும் பெரிய இந்த நவீன போராட்டத்தை உலகம் ஆவலோடு கவனித்துக்கொண்டிருக்கிறது. நாம் இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுவோமென்ற நம்பிக்கையுடன் உலகம் நம்மைக் கவனித்து வருகிறது. ஆகவே நாம் நமது கொள்கையிலிருந்தும் நழுவாமல் சத்தியமாக நடந்துகொள்ள வேண்டும்.

நமது தீர்மானத்தில் உறுதியுடன் போராட்டத்தை நடத்திச் செல்ல வேண்டும். சத்தியாக்கிரக இயக்கத்தை அதி தீவிரமாக நடத்திச் சென்றால் அதற்குத் தற்காலிகமான சில இடையூறுகள் ஏற்படலாம். ஆனால் சத்தியாக்கிரகத்திற்குத் தோல்வி கிடையாது. சத்தியாக்கிரகமென்பதே பெரிய வெற்றி. பேர் பெற்ற ஆங்கிலக் கவியான ஜேம்ஸ் லோவெல் கூறியது போல சத்தியம் தூக்கு மேடை செல்லலாம். அசத்தியம் சிம்மாசனம் அமர்ந்து ஆட்சி புரியலாம். ஆனால் தூக்கு மேடை ஏறும் சத்தியமே எதிர்கால வெற்றியின் அறிகுறி. அந்தச் சத்தியத்திற்கே தெய்வத்தின் துணையுண்டு அதே சத்தியத்தையே தெய்வம் எதற்கும் மேலாகக் கண்ணிமையெனப் பாதுகாத்து வரும். சத்தியமே ஜெயம்.

விஷயத்தைக் கேட்டவுடனே 'தமிழ் நாட்டில் கவிகள்கூட இருக்கிறார்களா' வென்று ஆச்சரியப்படாதீர்கள். ச. து. சுப்பிரமணியம் சொன்னதிலிருந்து சில பொறுக்குகள் தருகிறேன்:—

"பாரதிக்குப் பின் வந்துள்ள இப்போதையக் கவிராயர்கள் யாவரும் பெரும்பாலும் பாரதியாரையே பின்பற்றுகின்றனர். இவ்வகுப்பில் நான் முதன்முதலில் குறிப்பிட விரும்புவது பாரதியாரின் சீடரான புதுவை பாரதிதாசனை. அவரது பழம் பாடல்கள் மிகவும் சிறந்தவையாய், பாரதியாரில் அச்சில் வார்க்கப்பெற்று விளங்குகின்றன. ஆனால் வரவர அவரது பாடல்கள் சுவை குறைந்து வருவது மிகவும் வருந்தத்தக்க விஷயம். அந்தப் பழைய பாட்டுக்களில் உள்ள கம்பீரம், வேகம், ஆவேசம், சொல்லமைப்பு முதலியவை இப்போதைய பாடல்களில் இல்லை. மற்றொன்று; அவரது பாடல்கள் சாதாரணமாய்ச் சமூகக் கொடுமைகளைப்பற்றியவை. சில சமயங்களில் பிரசார வேகத்தில் கவிதையின் அழகையும் உயர்வையுங் கூட மறந்துவிடுகிறார். அவருடைய பாடல்களில் ஒன்று:

எங்கெங்கு காணினும் சக்தியடா—தம்பி
ஏழு கடலவன் வண்ணமடா—அங்கு
தங்கு வெளியினிற் கோடியண்டம்—அந்தத்
தாயின் கைப் பந்தென ஓடுதடா—ஒரு
கங்குலி லேழு முகிலினமும்—வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா.

காளையொருவன் கவிச் சுவையைக்—கரை
காண நினைத்த முழு நினைப்பில்—அன்னை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்—அவள்
தொல்லறிவாளர் திறம் பெறுவாள்—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வையம் முழுதும் துண்டு செய்வேன்—என
நீள இடையின்றி நீ நினைத்தால்—அன்னை
நேர் படுவாளென்றன் தோளினிலே.

பிறகு தேசிகவிநாயகம் பிள்ளையின் கவியைப்பற்றிப் பேசினார்·

"அவருடைய கவிகள் உண்மையிலேயே அழகான எளிய துண்டுக் கவிகள். அவருக்கு ஆங்கில நாட்டு ஏரிக்கரைக் கவிகளின் அனுசந்தானம் மிகுதியென்று நினைக்கிறேன். எனினும் கற்பனை வித்தையும் ஷெல்லியைப்போல அவரிடம் கலந்துள்ளது. அவரது பாட்டில் ஒன்றைக் கீழே குறிப்பிடுகிறேன்:—

சந்திரிகை

மீனினம் ஓடிப் பறக்குதம்மா—ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானுங் கடலாக மாறுதம்மா—இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா.

பாலாழி மீதுபடர்ந்த வெண்ணை—ஒரு
பந்தா யுருண்டது திரண்டதுவோ
பேலா யுலகில் ஒளிசெயவே—ஈசன்
விண்ணக மிட்ட விளக்கிதுவோ.

"இவ் வெல்லாக் கவிஞர்களும் பொதுவாகக் கற்பனைக் கவிஞர்களே. இனித்தான் தமிழ் நாட்டில் உயர்ந்த கம்பன் போன்ற கற்பனைகள் சிருஷ்டியாகவேண்டும்."

இவ் விடத்தில் ச. து சுப்பிரமணியத்தின் கவித் திறனைப் பற்றிச் சில வார்த்தைகள் எழுதாமலிருக்க முடியவில்லை. அவர் கற்பனைக் கவி. இறந்துபோன 'பித்தன்,' 'புதுமை'ப் பத்திரிகைகளில் இவருடைய பாடல்கள் பல வெளிவந்தன. அவைகளில் வந்த 'குயில் பாட்டு' ஷெல்லியின் 'வானம்பாடி''க் கவிதையை ஞாபகமூட்டும்.

பிரசிடென்சி காலேஜ் மாணவர்கள் ச. து. சுப்பிரமணியத்தைக் கூப்பிட்டுப் பேசச் சொன்னது சந்தோஷப்படத்தக்க காரியம்.

கடிதத்தை முடிக்கு முன்னால் ஒரு வார்த்தை. இப்போது இங்கே புதுக் கவர்னர் வந்திருக்கிறார். லார்டு எர்ஸ்கின் அவரது பேர். குடிகளைப் பொறுத்தவரையில் புதுக் கவர்னரா யிருந்தாலென்ன, பழைய கவர்னரா யிருந்தாலென்ன? எல்லாம் அந்நியர்கள்தானே.

நம் நிலையை யோசித்துப் பார்த்தால் எனக்கே ஆச்சர்யமாயிருக்கிறது. இங்கிலீஷ்காரர்கள் மொத்தம் இருப்பது நாலரைக் கோடி. நம் ராஜதானியின் ஜனத்தொகை யவ்வளவு. இவர்களுக்கு முப்பத்தைந்து கோடி நிறைந்த நம் இந்தியா பணிந்து அடங்கி அடிமைப்பட்டுக் கிடப்பது இயற்கை விபரீதம். இன்னும் இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தியாவில் இருக்கும் வெள்ளைக்காரர்களின் எண்ணிக்கை லக்ஷத்து முப்பத்தையாயிரந்தான்!

கடிதம் நீண்டுவிட்டது.

தங்களன்புள்ள,

சென்னை.
3—12—34

மு. வேலி.

ஹென்றி போர்டு.

திரு. கே. வீ. எஸ். வாஸ் அவர்கள், B. A., (Hons.)

I

முன்னுரை.

சமூக வாழ்க்கை ஒவ்வோர் நாளும் வர வரச் சிக்கலடைந்து கொண்டே வருகின்றதென்பது சரித்திரம் பிரத்தியக்ஷமாகக் காட்டும் உண்மை. புதிது புதிதாகத் தோன்றும் நூதனப் போக்குவரத்து சாதனக் கருவிகளும், உலகின் பல பாகங்களையும் ஒன்றாய்ப் பிணைக்கும் விசித்திர ஒலி பரப்பும் கருவிகளும் மனிதனது வாழ்க்கை இலட்சியங்களிலோர் பெரும் புரட்சியைச் செய்து கொண்டு வருகின்றன இப்பொழுது மனிதன் பூகோளப் படத்தில் புள்ளியாகத் தோன்றும் ஒவ்வோர் நகரத்திலுமுள்ள அற்புத விஷயங்களைக் கண்ணினால் கண்டு களிக்கின்றான். நூதன மனிதர்களுடன் சகஜமாகக் கூடிப் பழகுகின்றான். புதிய தொழில்களில் ஈடுபடுகின்றான். கிராம வாழ்க்கையும், குடும்பப் பாசமும், சமூகப் பந்தங்களும் சிறிது சிறிதாக அவனை விடுவித்துக்கொண்டே வருகின்றன. ஆனால் இவ்வளவு விரைவில் மாறுதலை யடையாதது அவனது கற்பனைக் கண்ணொன்றே யாகும். அதுவும் சிறிது சிறிதாகத் திறந்துகொண்டே வருகின்றதாயினும், அதன் முன்னேற்றம் அவ்வளவு விரைவிலேற்பட்டுக்கொண் டிருப்பதாகத் தெரியவில்லை.

கற்பனை யென்பது ஓர் தனி சக்தி; ஓர் அருள். மனதில் நூதன விஷயங்கள் தோன்றுவதினின்று ஒருவனது கற்பனைக் கண்கள் திறந்து விட்டதாகக் கொள்வது தவறு. பல விஷயங்களைக் கவனம் செய்வதினின்று அந்த அருளைப் பெற்று விடுவது அரிது. கற்பனை, சிருஷ்டி செய்யும் பிரமன். பழைய விஷயங்களை, பலரது ஆராய்ச்சிகளை அது துண்டு துண்டாக வெட்டி மூளையில் கறைத்துத் தன்னிஷ்டம் போல் அதினின்று மறுபடி நூதனமான ஆராய்ச்சி யொன்றைச் சிருஷ்டி செய்கின்றது. தலைச்சன் குழந்தையைப் பெற்றெடுத்த தாய் அடையும் ஆனந்தத்தை விடப் பன்மடங்கு பரமானந்தத்தை இந்த நூதன சிருஷ்டி கற்பனாசிரியனுக் களிக்கின்றது.

உண்மை உழைப்பில் உள்ளக் களிப்பும், மன உறுதியும், திட நம்பிக்கையுமே இந்தக் கற்பனைக் கண்களைச் சிருஷ்டி செய்யும் கருவிகள். இவைகளால் சிருஷ்டிக்கப்பட்ட கற்பனைக் கண்கள் பின்பு தாங்களாகப் பல நூதனங்களைச் சிருஷ்டி செய்யும் சக்தியைப் பெறுகின்றன. இந்த தத்துவத்தின் உண்மை இரகசியங்களை உணர வேண்டுமாயின் வயற்புறங்களில் உழவைக் கட்டிக்கொண்டு வாழ் நாளைக் கழிக்க வேண்டிய ஹென்றி போர்டு என்னும் உலகப் பிரசித்தி பெற்றமோட்டார் வியாபாரி-"போர்டு மோட்டார் கம்பெனி" யின் சொந்தக்காரர் சரித்திரத்தைத் தவிர வேறொன்றையும் உதாரணமாகக் கொள்ள முடியாது.

II

ஹென்றி போர்டு—ஓர் குடியானச் சிறுவன்

ஹென்றி போர்டு 1863-ம் வருடம் ஜூலை மாதம் 30வ "மைகிகான்" ஜில்லாவைச் சார்ந்த "டியர்பார்ன்" (Dearborn) என்னும் கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தையின் தொழில் விவசாயமாகும். போர்டு பிறந்த சமயம் அவர் குடும்பம் வறுமையில் மிகவும் வருந்திக்கொண் டிருந்ததாம். ஆனால் அமெரிக்காவில் நகர ஸ்தாபனங்கள் மும்முரமாகத் தொடங்கவும் மைகிகான் ஜில்லாவிலிருந்த விவசாயிகள் சிறிது சிறிதாக நகரப்புறங்களுக்குக் குடியேறத் தலைப்பட்டனர். போர்டு குடும்பமும் வறுமையினின்று ஒருவாறு நிவர்த்திக்கப்பட்டது. இப்பொழுது அவர் குடும்பம் உணவிற்கு முன்போல் வருந்தாமலிருந்ததேயாயினும், அளவுக்கு மிஞ்சிய ஐசுவர்யமுடையவர்களாகி விடவில்லை யென்பது குறிப்பிடத் தக்கது.

போர்டும் வயற்புறங்களில் வேலை செய்யக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவரது தந்தையின் அவாவேயாயினும், போர்டு விவசாய வேலையை முழுதும் வெறுத்து வந்தார். அது அவருக்கு அதிக ஆயாசத்தை யளித்து வந்தது. உலகிலுள்ள வேலைகளெல்லாவற்றிலும் அதிக சரீரப் பிரயாசையைக் கொண்டு நடக்கும் தொழில் விவசாயமே யென்று போர்டு இன்றும் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவரது கற்பனைக் கண்களைத் திறந்தது, இந்த விவசாய வேலைகளை யென்பதை அவர் மறந்தவரல்லர்.

அக்காலத்தில் நிலத்தை உழுவதற்கும், சாகுபடி செய்வதற்கும் தற்கால உபயோகத்திலிருக்கும் நூதன இயந்திரங்களில்லை. நான்கைந்து ஊர்களுக்குப் பொதுவாகப் பெரிய தனவந்த ரொருவரிடம் ஏதாவது ஓர் இயந்திர மிருக்கும். மற்ற விவசாயிகள் அதையே வாடகைக்கு அமர்த்திக்கொண்டு உபயோகிப்பது வழக்

கம். எல்லாக் குடியானவர்களிடமும் விவசாய வேலைக்கெனச் சாதாரணமான சில இரும்பு ஆயுதங்களை யிருக்கும். போர்டு, வேலை நேரம் தவிர இதர சமயங்களில் அவைகளை வைத்துக் கொண்டு ஏதாவது சேஷ்டைகள் செய்தவண்ணமாகவே யிருப்பார். அதைப் பார்த்த அவரது தாயார் "ஒருகாலத்தில் இயந்திரப் பிரம்மனாக நீ ஆகப்போகிறாய்!" என்று அடிக்கடி கூறுவாளாம். அன்று அவள் சொல்லிய ஜோஸ்யம் இன்று பூரணமாகப் பலித்துவிட்டதையும் உலகினர் கண்டு விட்டார்கள்.

III

ஆராயும் ஆற்றல்

ஹென்றி போர்டு தனது பன்னிரண்டாம் வயதில் பல சிறுவர்களுடன் வீதியிற் போய்க்கொண் டிருக்கையி லோர்நாள் கதிர் அடிக்கும் (தானியத்தை உலர்ந்த பயிரினின்று பிரிக்கும்) இயந்திரமொன்றைக் கண்டார். குதிரையின்றி நீராவியினுதவியால் தானாக நகரும் இயந்திரத்தைத் தன் வாழ் நாளில் போர்டு சந்தித்தது இதுவே முதன் முறை யாதலின் அவரடைந்த பேராச்சர்யத்திற் களவே யில்லையாம். பிரமித்துப் போய் அது எப்படித் தானாக ஓடுகின்றதென்பதைப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் வெகு நேரம் அங்கேயே நின்றாராம். அந்த இயந்திரத்தை யோட்டிக்கொண்டு வந்த மனிதன் போர்டின் தந்தையுடைய நெருங்கிய நண்பனாதலின் போர்டின் ஆராயும் ஆற்றலைக் கண்டு மெச்சி இயந்திரம் எப்படி வேலை செய்கின்றதென ஒவ்வோர் பாகத்தையும் காட்டி விளக்கிக் கூறினான். அன்றிரவு முழுதும் மாலையில் கண்ட இயந்திரங்களைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தாரே யன்றி உறங்கவில்லையாம்.

அதே வருடப் பழுதான கைக்கெடிகார மொன்று அவர் கைவசம் வந்தது. "வெறும் வாயை மெல்லுகிறவனுக்குச் சிறிது அவலும் அகப்பட்டால் விடுவானோ" என்பதைப்போல் விவசாய இரும்பு ஆயுதங்களை வைத்துக்கொண்டு விளையாடும் போர்டுக்கு ஓர் கடிகாரமும் அகப்பட்டுவிட்டால் கை சும்மாவிருக்குமா? இரவு பகலாய் அதன் பாகங்களொவ்வொன்றையும் பிரித்துக் கொண்டும் மறுபடி மாட்டிக்கொண்டும் சேஷ்டைகள் செய்து முடிவில் அதைச் சரியாக நேரம் காட்டும்படியாயும் செய்து விட்டார். இயந்திர விஷயங்களை நன்குணர வேண்டுமாயின் அவைகளைக் கூர்ந்து கவனிப்பதால் மட்டும் அதிலுள்ள நுட்பங்கள் விளங்குமேயன்றி புத்தகங்களின் மூலம் கற்றுணர்ந்துவிடலா மென்பது மௌடீகமே யென்பதை இப்பொழுதே யறிந்தார்.

IV

இளமைப் பருவத்திய இன்பத் தோற்றங்கள்

ஹென்றி போர்டுக்கு பதினேழாம் ஆண்டு பூர்த்தியாகிப் பள்ளிப் படிப்பும் முடிந்தது. அவரது தந்தை கிராமத்திற்குத் திரும்பி வந்து நிலத்தைக் கவனிக்க வேண்டுமென்று வற்புறுத்தத் தொடங்கினார். ஆனால் விவசாயத்தில் சிறிதும் மனமில்லாத போர்டு "ட்ரைடாக் (Drydock) என்னுமிடத்திலுள்ள தோர் இயந்திரசாலையில் சேர்ந்து வேலை செய்யத் தொடங்கிவிட்டார். அங்கு மூன்று வருடங்கள் வேலை செய்துப் பல புதிய விஷயங்களை யறிந்துகொண்டு கடிகாரக்கடை யொன்றில் சேர்ந்து பழுதாகப் போன கடிகாரங்களைப் பழுது பார்க்கும் வேலையி லமர்ந்தார்.

அப்பொழுதுதான் அமெரிக்காவில் இருப்புப் பாதைகள் சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்றுக்கொண்டு வந்தது. இரயில்வே ஸ்டேஷன்களி லமைக்கப்பட்டிருந்த கடிகாரத்தின் நேரத்திற்கும் சமூகத்தில் சாதாரணமாகப் பழக்கத்திலிருந்து வந்த கடிகாரத்தின் நேரத்திற்கும் பேதமிருந்து வந்ததால், பல அசௌகர்யங்களேற்பட்டு வந்தன. இதை நிவர்த்திக்க ஒரே கடிகாரத்தில் இரு நேரங்களையும் காட்டுவதற்கு ஓர் கடிகாரமமைக்க வேண்டுமென்று பலர் ஆராய்ச்சி செய்து வந்தனர். போர்டு வெகு நாட்கள் பிரயாசைப்பட்டு ஒரே கடிகாரத்தில் இரண்டு "டயல்"களமைத்து (Dials) இரண்டு நேரங்களையும் குறிப்பிட்ட ஓர் கடிகாரத்தை யமைத்தார். இது ஜனங்களுக்குப் பேராச்சர்யத்தை விளைவித்ததாதலின் இவ்வித கெடிகாரங்களுக்கு ஏராளமான தேவை யுண்டாகியது.

போர்டின் கெடிகார வேலை வெகுநாட்கள் வரையில் நீடித்திருக்கவில்லை. கெடிகாரம் உலகத்தினர் யாவரும் விரும்பக்கூடிய பொருளில்லையாதலின், யாவரும் வெகு பிரியத்துடன் விரும்பக்கூடிய பொருளொன்றைச் செய்யும் தொழிலி லீடுபட வேண்டுமென்பது அவரது அவா. ஆகவே கெடிகார வேலையை விட்டொழித்து விட்டு வீதிகளில் ஓடும் இயந்திரங்களைப் பழுது பார்க்கும் ஓர் இயந்திரசாலையில் 1879-ம் வருடம் போய்ச் சேர்ந்துகொண்டார். தனது பன்னிரண்டாம் ஆண்டில் பார்த்து பிரமித்த நீராவி இயந்திரத்தைத் தானே பழுது பார்த்து ஓட்டும் பாக்கியத்தை போர்டு பெற்றது இங்கேயேயாகும். இந்த இயந்திரங்கள் கனமுள்ள சாமான்களை யிழுப்பதற்கும், வெளிப்புறங்களில் கதிர் அடிப்பதற்குமே உபயோகிக்கப்பட்டு வந்தன. மேலும் இவைகள் இரண்டு டன்களுக்கு மேல் நிறையுள்ளவைகளாக விருந்தன. சாதாரணமாக ஜனங்கள் போக்கு வரத்திற்குக் குதிரை வண்டிகளையே யுபயோகித்து வந்தனர். குதிரையினுதவியால் அதிக கனமில்லா

பல் போக்குவரத்திற் குபயோகப்படும் வண்டியொன்றைக் கற்பிக்கக் கூடுமானால் அதுவோர் பெரிய சமூக சேவையாக விருக்குமென்று போர்டு எண்ணினர். குதிரையில்லாமல் நீராவியி னுதவியால் ஓடக்கூடிய வாகனங்களைப் பற்றிய பேச்சு அப்பொழுது இல்லாமலில்லை. இரண்டொருவர் அதிக கனமுள்ள நீராவி இயந்திர வாகனங்களை யுபயோகத்திலும் வைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் கனமில்லாமல் யாவரும் வெகு சுலபமாக ஓட்டக்கூடிய இயந்திரமொன்றைச் சிருஷ்டிக்க வேண்டுமென்பதே அவர் அவா. அதைக் கண்டுபிடித்துவிட்டால் குதிரைகளைக் கட்டி மேய்த்துக் கொண்டிருக்கும் சிரமத்தினின்று விடுவிக்கப்படுவார்களென்பது அவரது நம்பிக்கை.

V

போர்டின் முதல் நீராவி வண்டி

நீராவி இயந்திரத்திலேயே பல ஆராய்ச்சிகளைச் செய்து தனது விடா முயற்சியின் பயனாய்க் கடைசியாக ஓர் நீராவி வண்டியையும் போர்டு சிருஷ்டி செய்துவிட்டார். ஆனால் அது அவருடைய நோக்கத்திற்குச் சரியானதாகவின்றி மிகப் பெரியதாகவும் அதிக கனமுள்ளதாகவு மிருந்தது. சிறியதாகவும் கனக் குறைவாகவு மிருக்க வேண்டுமாயின் அதிலுற்பத்தி செய்யப்படும் நீராவி வண்டியைத் தானாக ஓட்டுவதற்குப் போதுமான சக்தியுடையதாகவில்லை. ஆகையால் நீராவியைக்கொண்டு வாகனங்களைக் கற்பிக்கலாமென்ற நம்பிக்கையை யடியோடு விட்டுவிட வேண்டியதாயிற்று. அப்பொழுது இங்கிலாந்தில் "வாயு"க்களைக் கொண்டு (Gas) பலவித ஆராய்ச்சிகள் மும்முறமாகச் செய்யப்பட்டு வந்தன. அவைகளை போர்டு, பத்திரிகைகளின் மூலம் கவனமாகப் படித்துக்கொண்டு வந்தாராதலின் வாயுவின் உதவியால் ஓடும் வண்டியைச் சிருஷ்டிக்கலாமென்ற நம்பிக்கை யவருக்குண்டாயிற்று. அன்று முதல் வாயுக்களில் சளைக்காது பல அரிய ஆராய்ச்சிகளைச் செய்து 1887-ம் ஆண்டில் வாயுவின் உதவியால் தானாகச் செல்லக்கூடிய நான்கு சக்கிர வண்டியை அமைத்தார். இதுவே ஹென்றி போர்டு வாயுவின் உதவியால் சிருஷ்டித்த முதல் மோட்டார் வண்டியாகும்.

VI

போர்டின் திருமணம்

இப்பொழுது அவருடைய தந்தை கிராமத்திற்குத் திரும்பி வந்துவிட வேண்டுமென்று போர்டைக் கட்டாயப்படுத்த வாரம்பித்து விட்டார். மேலும் இயந்திர வேலைகளை விட்டொழித்துவிட்டு விவசாயத்தில் முழு மனதுடன் வேலை செய்வதானால், அவர்

பெயருக்கு நாற்பது ஏகரா சவுக்கு மர நிலங்களை யெழுதி வைப்ப தாகவும் அவரது தந்தை வாக்களிக்கவே, சொந்தமான சொத்து ஒன்றுமில்லாமல் இயந்திரசாலைகளில் கூலி வேலை செய்துகொண்டிருந் தால் எவரும் தனக்குப் பெண்ணை மணம் செய்து கொடுக்கமாட் டார்களென்றெண்ணி போர்டு கிராமத்திற்கே திரும்பி வந்துவிட்டார். அதே வருடம் போர்டுக்குத் திருமணமும் நடந்தேறியது. போர்டு வயலில் உழவைக் கட்டி வேலை செய்துகொண்டும், சவுக்கு மரத் தோப்பில் மரங்களை யறுத்துக்கொண்டும் பொழுது போக்கி வந் தாரேயாயினும் "வாயுக்களில்" செய்து வந்த ஆராய்ச்சிகளை மட்டும் விட்டுவிடவில்லை. பகற் பொழுதெல்லாம் சரீரப் பிரயாசையுடன் வயலிலும் தோப்பிலும் வேலை செய்துவிட்டு இரவிலும் உறக்க மின்றி வாயுக்களில் ஆராய்ச்சி செய்தவண்ணமாகவே கண் விழித் துக்கொண்டிருப்பாராம.

VII

டெட்ராயிட் (*Detroit*) கம்பெனியில் உத்தியோகம்

1890-ம் வருடம் முதன் முதலாக ஹென்றி போர்டு இரண்டு ஸிலிண்டர் (Two Cylinders) மோட்டார் இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். உடனே டெட்ராயிட் எலெக்ட்ரிக் கம்பெனியார் மாதம் 45$ (டாலர்) சம்பளத்தில் ஓர் எஞ்சினீயர் வேலையைத் தங்கள் கம் பெனியில் போர்டுக்குக் கொடுப்பதாகச் சொல்லி யழைத்தார்கள். விவசாயத்தில் இந்த 45$ வருமானமில்லை யாதலாலும், தனது சொந்த ஆராய்ச்சிகளுக்குச் செலவு செய்ய விவசாய வருமானம இடங்கொடுக்கவில்லை யாதலாலும் போர்டு கிராமத்தை விட்டு டெட் ராயிட் கம்பெனிக்கு வந்துவிட்டார். இங்குதான் போர்டு 1892-ம் வருடம் இரண்டு வருட ஆராய்ச்சியின் பயனாய் வாயுக்களினுதவி யால் ஓடும் இரண்டு ஸிலிண்டர் மோட்டார் ஒன்றை முதன் முத லாகப் பிரத்யக்ஷமாய் சிருஷ்டி செய்தது. இந்த வண்டியில் பத்து மைல் வேகத்திலும் இருபது மைல் வேகத்திலும் ஓட்டுவதற்கு விசைகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் வேகத்தைக் குறைக்கவும் அதிகரிக்கவும் விசைகளிருந்தன.

டெட்ராயிட் நகரத்தில் வாயுவினுதவியால் மனிதன் உட் கார்ந்து ஓட்டும் இரண்டு ஸிலிண்டர் மோட்டார் வண்டி இதுவே முதலாவதாகையால், போர்டு இதை வெகு ஜாக்கிரதையாகப் பாது காக்கவேண்டியதாயிற்று. வீதியில் போர்டு வண்டியை நிறுத்திவைத் துவிட்டு அலுவலாக வோர் வீட்டினுள் நுழைந்தால் போகிறவர்கள் வருகிறவர்களெல்லாம் ஆச்சர்யத்துடன் அதிலுட்கார்ந்து ஓட்டிப்

பார்க்க வாரம்பித்துவிடுவார்களாம். இந்தத் தொந்திரவிற்கென போர்டு வீதியில் வண்டியை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டால், அதை லாந்தர் மரத்தடியிலோ அல்லது ஓர் கம்பத்திலோ சங்கிலிகொண்டு பூட்டி வைத்துவிட்டே போகவேண்டியிருக்குமாம். 1896-ம் வருடம் போர்டின் இரண்டாவது மோட்டார் வெளிவந்தது. இதுவும் இரண்டு ஸிலிண்டர் காரேயாயினும் முதலாவது வண்டியைவிட இரண்டாவது வண்டி இலேசாக விருந்ததால் இன்னும் இலேசான வண்டிகளைச் செய்யலாம் என்ற நம்பிக்கை போர்டுக்கு உண்டாகியது. முதன் முதலாகச் செய்த இந்த இரண்டு மோட்டார் வண்டிகளையும் போர்டு விலைக்கு வாங்கி ஓர் பெரிய பொக்கிஷமாகக் கருதி இன்றும் வைத்திருக்கிறாராம்.

VIII

வேலையை விட்டு நீங்குதல்

ஹென்றி போர்டு இந்த இரண்டு மோட்டார்களையும் சிருஷ்டி செய்தது சொந்தமாகத் தன் வீட்டிலேயே யன்றி கம்பெனியிலல்ல. பழைய இயந்திரங்களைப் பழுது பார்க்கும் வேலையைத் தவிற கம்பெனியில் அவர் செய்ய வேண்டிய வேலை வேறொன்றுமில்லை. பகல் முழுதும் கம்பெனியில் வேலை செய்வாராம். இரவெல்லாம் வீட்டில் வேலை செய்வாராம். இப்படியாகக் களைப்பின்றி இரவு பகலாய் உழைத்தே இரண்டு மோட்டார்களையும் செய்து முடித்தார். கமபெனி வேலையையும் விடாது செய்து வந்து வெகு விரைவில் மாதம் 125$ சம்பளத்தில் தலைமை எஞ்சினீயராகவு மாகிவிட்டார். ஆனால் இவருக்கும் கம்பெனி மானேஜருக்கும் மட்டில் மனமொத்திருக்கவில்லை. போர்டின் தந்தை இயந்திர வேலைகளை எவ்வளவு வெறுத்தாரோ அவ்வளவு தூரம் கம்பெனி மானேஜர் வாயுக்களின் ஆராய்ச்சிகளை வெறுத்தார். "மின்சாரம் ஒன்றுதான நிலத்தில் ஓடும் வண்டிகளுக்குத் தகுந்தது. வாயுவினால் ஓடும் வண்டி நீடித்ததுமில்லை, நாகரீகமானதுமில்லை!'' என்று அவர் அடிக்கடி கூறி வருவாராம். ஆனால் போர்டு மின்சாரத்தில் ஆராய்ச்சி செய்யாதவருமில்லை. சொந்தத்தில் "டைனமோ' ஒன்றை விலைக்கு வாங்கி அதன் மூலம் பல ஆராய்ச்சிகளைச் செய்துகொண்டுதானிருந்தார்.

1902-ம் வருடம் போர்டு அந்தக் கம்பெனியிலிருந்து விலகிக்கொண்டு ஓர் தனிமையான வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு நூதன ஆராய்ச்சிகளைச் செய்யத் தொடங்கினார். 1902-ம் ஆண்டு முதல் சொந்தத்தில் போர்டு சம்பெனியை ஸ்தாபனம் செய்யும் வரையில் போர்டு மறுபடி ஒருவரை அண்டி உத்தியோகம் பார்க்கவில்லை.

IX
போட்டியின் உதயம்

மோட்டார் வண்டிகள் முதன் முதலில் பொது ஜனங்களுக்கு ஓர் அவநம்பிக்கையையும், அவமதிப்பையும், அருவருப்பையுமே கொடுத்து வந்தன. இவைகள் சாதாரண விளையாட்டுக் கருவிகளே யன்றி உண்மையில் குதிரை வண்டிகளுக்குப் பதிலாகப் பழக்கத்தில் உபயோகிக்கக் கூடியதல்ல வென்பதே பொதுவான கொள்கை. ஆனால் இரண்டொருவர் வெகு சகஜமாய் மோட்டார்களை யுபயோகிக்கத் தலைப்படவும் மோட்டார் போகம் சிறிது சிறிதாகச் சமூகத்தைப் பிடித்துக்கொண்டது. மோட்டார்களின் தேவை இப்படி யதிகரிக்கவும் மோட்டார் உற்பத்தி செய்யவும் கம்பெனிகள் பல தோன்ற வாரம்பித்தன. இப்பொழுது எந்தக் கம்பெனி அதிக வேகமாகப் போகக்கூடிய வண்டிகளைச் செய்யக்கூடு மென்ற கேள்வி பிறந்தது. பொது ஜனங்கள் மோட்டார்களை வாங்குகையில் எது அதிக வேகமாகச் செல்லும் என்பதில் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்களே யன்றி எந்த வண்டி சிறிதாகவும், இலேசாகவும் நீடித்து உழைக்கக்கூடியதாகவு மிருக்கிறது என்பதைப் பற்றி நினைப்பதே யில்லை. ஆகவே போர்டு இதுவரையில் கனக் குறைவையும் சிறியதாகவிருக்க வேண்டுமென்ற எண்ணங்களையும் மட்டிற் கொண்டு வேலை செய்யாது வேகத்தையும் அதிக ஊக்கத்துடன் கவனிக்க வேண்டியதாயிற்று. 1903-ம் வருடம் “டாம் கூபர்” (Tom Cooper) என்னும் நண்பரொருவருடன் கூடி நான்கு ஸிலிண்டர்களுடன் ஓடக்கூடிய “999” “ஆர்ரோ” (அம்பு) என்ற பெயர்களை யுடைய இரண்டு வண்டிகளைச் செய்து முடித்தார். இந்த இரு வண்டிகளும் உலகத்திலேயே அதிக வேகமாகச் செல்லக்கூடிய மோட்டார்களைச் செய்யக்கூடியவர் ஹென்றி போர்டு ஒருவரே என்பதை உலகத்திற்கே விளம்பரம் செய்துவிட்டன. இந்த வண்டியில் உட்கார்ந்து ஓட்டுவதற்கே பலருக்குப் பயமாக விருந்ததாம்.

X
போர்டு மோட்டார் கம்பெனியின் ஸ்தாபனம்

எந்த வருடம் ஹென்றி போர்டின் திறமையை உலகம் உணர்ந்ததோ அதே வருடந்தான் போர்டு மோட்டார் கம்பெனியும் ஸ்தாபனமாயிற்று. அவருடைய நண்பர்களுள் பலரும், பெரிய முதலாளிகளும் தாங்கள் பங்கெடுத்துக் கொள்வதாகச் சொல்லி ஓர் மோட்டார் கம்பெனியை ஸ்தாபிக்கும்படி போர்டைத் தூண்டினார்கள். போர்டும் வெற்றி வெறியில் ஒரு லக்ஷம் டாலர் முதலைக் கொண்டு தனது சொந்தத் தலைமையின் கீழ் போர்டு மோட்டார் கம்பெனியை

ஸ்தாபனம் செய்தார். இதன் மொத்த முதல் லக்ஷம் டாலரில் கால் பங்கிற்கு மேல் போர்டுக்கே சொந்தமாக விருந்தது. மிகுதி முக் கால் பாகத்தைப் பங்குகளாகப் பலர் கொடுத்திருந்தனர்.

பிறருக்கும் நிர்வாகத்தில் பாத்தியமுடைய ஓர் கம்பெனியின் கீழ் வேலை செய்வதில் போர்டுக்குப் பல இடையூறுகள் உண்டாயின. 1902-ம் வருடம் போர்டு டெட்ராயிட் எலெக்ட்ரிக் சம்பெனியி லிருந்து விலகியதற்குக் காரணமே ஒருவருக்கு அடியில் நின்று சுதந் திரமாக எந்த வேலையையும் செய்ய முடியாதென்று எண்ணியதே யாகும். சுதந்திர உணர்ச்சியும், உழைப்பும் இன்றேல் எத்தொழி லும் முன்னேற்றமடைவது அரிது என்பது போர்டின் திடமான கொள்கை. ஆகவே வருடா வருடம் தன் பங்கிற்குக் கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு கம்பெனி பங்குகளை விலைக்கு வாங்கி மொத்த முதலில் 58½%க்கு மேல் தன் சொந்த முதலாக்கிக் கொண் டார். 1919-ம் வருடம் மிகுதிப் பங்குகளும் அவருடைய குமா ரன் எட்ஸல் (Edsel) என்பவரால் விலைக்கு வாங்கப்பட்டு போர்டு கம்பெனி அவர்களுடைய குடும்பச் சொத்தாக முழுதும் ஆயிற்று. இப்பொழுதே போர்டு சுதந்திரத்துடனும் சுறுசுறுப்புடனும் வேலை செய்ய இயன்றது.

XI

போர்டு கம்பெனியின் வளர்ச்சி

போர்டு கம்பெனி மற்ற மோட்டார் கம்பெனிகளைவிட அதிக இலேசாகவும், காற்றுப் பறக்கக்கூடிய சக்தியையுடையதாகவு முள்ள மோட்டார்களை யுற்பத்தி செய்து பொது ஜனங்களின் பிரி யத்தையும் நன் மதிப்பையும் வெகு விரைவில் அடைந்தது. தன் கம்பெனியினின்று உற்பத்தி செய்யப்படும் வண்டிகள் யாவும் ஒரே மாதிரியாக (Model) விருக்கவேண்டு மென்பது போர்டின் அவா. ஆனால் இதர மோட்டார்க் கம்பெனிகள் வருடத்திற்கு வருடம் புதிது புதிதான மாதிரியில் வண்டிகளைச் செய்து ஜனங்களி னுள்ளத்தைக் கபடமான வழிகளில் கவர்ந்ததால் நமது கம்பெனி யும் ஸ்திரமாவதற்கு முன் ஒரே விதமான வண்டிகளைச் செய்து ஜனங்களின் அருவருப்பிற்குப் பாத்திரமாவது தவறு என்று உதவி மானேஜர்கள் வற்புறுத்தவே போர்டும் வருடத்திற்கு வருடம் புதிய மாதிரி மோட்டார்களை யுற்பத்தி செய்வதிலீடுபட வேண்டிய அவ சிய மேற்பட்டது. இரண்டாவது வருடம் நான்கு ஸிலிண்டர்க ளுடன் கூடிய யாத்திரை ஸ்பெஷல் மோட்டார் வண்டிகளை போர்டு கம்பெனி உற்பத்தி செய்து இரண்டாயிரம் டாலர் விகிதம் விற்றது. இதற்கு Model 'C' என்று பெயர். Model 'B' மோட்டார்கள் சாதாரணமாக வீதியில் தினப்படி புபயோகத்திற்கெனச் செய்யப்

பட்ட நான்கு ஸிலிண்டர் மோட்டார்களே யாகும். கம்பெனி வர வர விருத்தியடைந்து கொண்டு வந்ததால் இப்பொழுதுள்ள தொழிற்சாலை போதாமற் போகவே கம்பெனியில் அந்த வருடம் கிடைத்த இலாபத்தைக் கொண்டு புதிய கட்டிடங்களை அடுத்த வருடத்தில் கட்டி முடித்தார். போர்டு கம்பெனி ஸ்தாபனமான காலத்தில் அதன் விஸ்தீரணம் 0.28 ஏகரா நிலமேயாகும். அப்பொழுது சுமார் 320 பேர்கள் வேலை செய்து வந்தனர். 1908-ம் வருட ஆரம்பத்தில் 1908 பெயர்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டு 2.65 ஏகரா விஸ்தீரணமுள்ளதாக போர்டு கம்பெனி பெருகியது. போர்டு கம்பெனி எவ்வளவு விரைவில் முன்னேற்றமடைந்தது என்பதற்கு 1911-ம் ஆண்டில் 4110 ஆட்களுக்கு வேலை கொடுத்துக்கொண்டு 32 ஏகரா விஸ்தீரணமுள்ளதாக விருந்தும் போதுமானதாகவில்லை யென்பதைத் தவிர வேறு உதாரணங்கள் வேண்டியதில்லை.

XII

போர்டு கம்பெனி வெற்றியின் இரகசியம்

போர்டு கம்பெனி பூரண வெற்றி யடைந்ததற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவதாக, கம்பெனி ஒரே குடும்பத்தினருக்கு முழுதும் சொந்தமாக விருந்ததாதலின், பிறருடைய தயவையும், அனுமதியையும் எதிர்பாராது அக் குடும்பத்தினர் தங்களுடைய இஷ்டம் போல் பூரண சுதந்திரத்துடன் கம்பெனியில் எதையும் செய்ய இயன்றது. இரண்டாவதாக இதற கம்பெனிகள் கடனுக்கு வியாபாரம் செய்வதை போர்டு முழு மனதுடன் வெறுத்து வந்தது மற்றோர் காரணமாகும். கடனுக்கு மோட்டார்களை விற்பனை செய்வதாயின் அதிக மோட்டார்கள் வருடா வருடம் செலவாவதுடன் இலாபமும் அதிகரிக்கும் என்பது அனுபவத்தில் எல்லா வியாபாரிகளும் அறிந்ததே. ஆனால் கடனுக்குச் செய்யும் வியாபாரத்தில் இலாபம் புத்தகக் கணக்கில் ஏராளமாக விருக்குமேயன்றி கையில் உடனுக்குடனே கிடைக்காது என்பதை நன்கறிந்தே போர்டு கடனுக்கு விற்பனை செய்வதை மறுத்து வந்தார். குறைவாக மோட்டார்கள் விற்பனையாகிக் குறைந்த இலாபம் கிடைத்துக்கொண்டிருந்த போதிலும், இந்தத் தொகை நிரந்தரமாகக் கிடைத்துக்கொண்டிருந்தால் அதை மறுபடி கம்பெனி முதலில் போட்டு மேலும் மேலும் விருத்திக்குக் கொண்டுவரலாம் என்பது அவர் கொள்கை. மற்ற கம்பெனிகள் திடீரெனத் தோன்றி திடீரென மறைந்ததற்குக் காரணம் கையிலிருந்த பணத்தைக் கொண்டு உற்பத்தி செய்த மோட்டார்களைக் கடனுக்கு விற்றுவிட்டு மறுபடி உற்பத்தியைத் தொடங்குவதற்குப் பணமில்லாமற் போனதே யாகும்.

XIII
புதிய சீர்திருத்தங்கள்

பிரஞ்சு மோட்டார்கள் போர்டு கம்பெனி மோட்டார்களை விடச் சிறியதாகவும் அதிக இலேசாகவுமிருந்தன. ஆனால் வேகத்தில் போர்டு மோட்டாரை வெல்லுவதற்கு வேறு வண்டிகளே உலகிலில்லை யென்று கூறிவிடலாம். வேகமாக ஓடுவது தவிர இலேசாகவுமிருக்க வேண்டுமென்பது போர்டின் வெகுநாளைய அவாவாதலின் பிரஞ்சு மோட்டார்க் கம்பெனிகள் எவ்வித இரும்பினால் மோட்டார்களைச் செய்கின்றன வென்றறிய ஆவலுடனிருந்தார். ஒரு சமயம் போர்டுக்கும் ஓர் பிரஞ்சு மோட்டாருக்கும் போட்டி ஏற்படவே கண் தெரியாமல் இரண்டு வண்டிகளும் காற்றாய்ப் பறந்து ஓடுகையில் பிரஞ்சு மோட்டார் ஓர் பாலத்தில் மோதித் துண்டு துண்டாக உடைந்து போயிற்று. அப்பொழுது அந்த வண்டியிலிருந்து உடைந்து விழுந்த ஓர் சிறு பாகத்தைப் பொறுக்கி யெடுத்துக் கொண்டுவந்து அது என்ன உலோகம் எனப் பரீட்சை செய்து பார்த்து 3000° உஷ்ணத்தில் செய்யப்பட்ட "வாண்டியம்" (Vandium) என்னும் எஃகு எனக் கண்டுபிடித்தார். இந்த எஃகு மிக இலேசாகவிருப்பதுடன் அதிக உறுதியுமான தாகையால் இனி செய்யும் மோட்டார்களை யெல்லாம் இதே எஃகில் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தார். வண்டியின் கனம் குறையக் குறைய அதை யோட்டும் சக்தியை யுற்பத்தி செய்யச் செலவிடும் பெட்ரோலின் அளவும் குறைவதால் மோட்டாரின் வேகம் ஒன்றைத் தவிர அதன் கனத்தையும் கவனிக்க வேண்டுவது அவசியமென்று போர்டு கருதியது போற்றற்குரியதே யாகும். நாள் ஒன்றுக்கு போர்டு கம்பெனி நூறு வண்டிகளை உற்பத்தி செய்யத் தலைப்படவே அமெரிக்கர்கள் யாவரும் ஆச்சர்யத்துடன் போர்டு கம்பெனியை நோக்கலாயினர். ஆனால் போர்டோ வெகு விரைவில் போர்டு மோட்டார்க் கம்பெனி நாளொன்றுக்கு ஆயிரம் வண்டிகளை உற்பத்தி செய்யக் கூடும் என்று நம்பிக்கையுடனிருந்தார்.

XIV
கம்பெனியின் கொள்கைகள்

(1) நீடித்த காலம் உழைப்பதற்கு மோட்டாரின் ஒவ்வோர் பாகமும் உறுதியான எஃகினால் செய்யப்படுதல் வேண்டும்.

(2) மோட்டார்களை யாவரும் குதிரைகளுக்குப் பதிலாக தினப் பழக்கத்தில் சாதாரணமாகப் போக்குவரத்திற்கு உபயோகிக்கவேண்டுமாயின் அதை யோட்டுவதற்கு எவருக்கும் சுலபமான வழியில் இயந்திரங்கள் அமைக்கப்பட வேண்டுவது அவசியம். மோட்டார்

கள் பொதுஜன உபயோகத்திற்கே யன்றி திறமையுள்ள இஞ்சினீயர்கள் மட்டில் அனுபவிக்கும் பொருளில்லை யாதலின் அவைகளின் இயந்திரங்கள் அதிகச் சிக்கலின்றி யாவரும் ஒவ்வோர் பாகத்தையும் நன்கறிந்துகொள்ளுமாறு அமைக்கப்பட வேண்டுவது அவசியம்.

(3) ஓடும் சக்தியை மோட்டாரில் உற்பத்தி செய்வதற்குச் செலவிடும் பெட்ரோலின் அளவு அந்த வண்டி எவ்வளவுக்கெவ்வளவு இலேசாக விருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாக ஆவதால் சிக்கனமாக யாவரும் மோட்டாரின உபயோகத்தைப் பெற வேண்டுமாயின், இலேசான வண்டிகளை உற்பத்தி செய்வது முக்கியமானதாகும்.

(4) நான்காவதாக மோட்டார் அதி விரைவில் போகும் பொழுது வேகத்தை இஷ்டப்படிக் குறைக்கவும், அபாயகரமான தருணங்களில் திடீரென நிறுத்தவும் சுலபமான விசைகள் அமைக்கப்பட வேண்டும்.

(5) மோட்டாரின் உபயோகத்தை எல்லோருமடைய வேண்டுமாயின், அதன் விலை கூடிய விரைவில் குறைவாகவிருக்க வேண்டும். ஆதலால் கம்பெனியில் ஆடம்பரச் செலவுகளின்றி சிக்கன முறைகளைக் கையாளுவது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயமாகும்.

(6) இவைகளைத் தவிர மோட்டாரில் ஒரு பாகம் பழுதாகிவிடில் எஞ்சினியர்களைக் கொண்டு சரி செய்வதாயின் அதிகச் செலவேற்படுவதால் அந்தப் பாகத்தை மட்டில் குறைந்த விலையில் புதிதாகச் செய்து தனிமையாக விலைக்குக் கொடுக்கக் கூடுமாயின் அது ஓர் பொதுஜன சேவையாகும். ஆகவே மோட்டார்களை முழுதாகச் செய்து விற்பனை செய்வதுடன் அதிலுள்ள ஒவ்வோர் தனி பாகத்தையும் பிரத்தியேகமாகச் செய்து விற்க வேண்டும்.

XV

போர்டு கம்பெனியின் முன்னேற்றம்

1908-ம் வருடத்தில் மட்டும் போர்டு கம்பெனி 10,600 மோட்டார்களுக்கு மேல் உற்பத்தி செய்தது. போர்டு கம்பெனியின் மோட்டார்கள் மிக உறுதியுள்ளதாகவும் விலை குறைவாகவு மிருப்பதால் அவர்கள் போட்டியின பொருட்டு நஷ்டத்திற்கு விற்கிறார்களேயன்றி வெகு காலம் இக் கம்பெனி நீடித்திராது என்றே யாவரும் எண்ணி வந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒவ்வோராண்டிலும் புதிய சீர்திருத்தங்களுடன் கம்பெனி வளர்ச்சி பெற்றுக் கொண்டே வருவது எல்லோருக்கும் வியப்பையே விளைவித்தது. வருடத்திற்கு வருடம் போர்டு மோட்டார்களின் விற்

பனை விலையைக் குறைத்துக் கொண்டே வந்தார். அதையொட்டி போர்டு மோட்டார்களின் விற்பனையும் அதிகரித்து இலாபமும் பெருகிக் கொண்டே வந்ததே யன்றி ஒரு வருடத்தை விட மற்றோர் வருடம் வளர்ச்சி குறைந்ததாகத் தெரியவில்லை. எவ்வளவு விரைவில் போர்டு கம்பெனி முன்னேற்றமடைந்து கொண்டு வந்தது என்பதற்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளினின்று வாசகர்கள் தெரிந்து கொள்வார்களாக:—

வருடம்.	மோட்டார்களின் விலை.	உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார்களின் விலை.
1909—10	$ 950.	18,664.
1911—12	$ 690.	78,440.
1915—16	$ 490.	308,213.
1916—17	$ 360.	785,432.
1917—18	$ 450.	706,584.
1918—19	$ 525.	533,706.
1919—20	$ 440.	996,660.
1920—21	$ 355.	1,250,000.

எவ்வளவுக்கெவ்வளவு விற்பனை விலை குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மொத்த மோட்டார்களின் விற்பனையும் அதிகரிக்கின்றது என்பதை யறிந்தே போர்டு வருஷத்திற்கு வருடம் விலையைக் குறைத்துக்கொண்டே வந்தார். 1917–18ம் ஆண்டிலும் 1916–17ம் ஆண்டிலும் போர்டு மோட்டார்களின் விற்பனை வீழ்ந்ததற்குக் காரணம் விலை உயர்த்தப்பட்டதே யாகும். மகாயுத்த சமயத்தில் போர்டு கம்பெனி யுத்த சாமான்களை யுற்பத்தி செய்யும் வேலையில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டதால் மோட்டார் உற்பத்தியில் அவர்கள் அதிக கவனத்தைச் செலுத்த வியலவில்லை. அதன் பொருட்டே மோட்டார்களின் விற்பனை விலையையும் அதிகப்படுத்த வேண்டிய அவசிய மேற்பட்டது. அடுத்த ஆண்டில் விலையைக் குறைக்கவே மறுபடி முன்னையைவிடப் பல பங்கு விற்பனை யதிகரிக்கத் தலைப்பட்டது. 1921–ம் ஆண்டில் இதுவரையில் நாங்கள் ஐந்து இலக்ஷம் மோட்டார்களை யுற்பத்தி செய்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிட்டு No. 500,000 மோட்டாரை மார்க்கெட்டில் விற்பனைக்குக் கொண்டுவரவே அந்தக் கம்பெனியின் திறமையைக் கண்டு உலகமே பிரமித்துவிட்டது.

XVI
போர்டின் தொழில் உபதேசங்கள்

ஹென்றி போர்டு "எனது தத்துவம்" என்ற தலைப்புடன் ஓர் நூலை வெளியிட்டிருக்கிறார். அதில் முக்கியமாகக் கடன் வாங்கிக்

கம்பெனியை நிர்வகிப்பதைப் பலமாகக் கண்டிப்பதுடன் சிக்கனச் செலவை யாதரித்து வரைகிறார். அத்துடன் கம்பெனி ஸ்திரமான நிலைமையை யடையும் வரையில் அதன் மூலம் கிடைக்கும் இலாபத்தை அதிலேயே மறுபடியும் போட்டுத் தொழிலை விருத்தி செய்ய வேண்டுமென்பது அவரது கொள்கை. இப்படிச் செய்பவர்களுக்கு ஒருக்காலும் வெளியிலுள்ள பாங்குகளிடமிருந்து கடன் வாங்க வேண்டிய அவசியமும் ஏற்படாதென்பது வெளிப்படை. எப்படி வெளியிலிருந்து கடன் வாங்காது கம்பெனியை நிர்வகிப்பது அவசியமோ அதைப் போன்றே கடன் கொடுத்து வியாபார விருத்தியை நாடாமலிருப்பதும் அத்யாவசியமாகும். கடன் வாங்குபவர்களுக்கு சிக்கன நிர்வாகம் தெரியாது என்பது அவரது அபிப்பிராயம். முதல் முழுதும் சொந்தமானதாக விருப்பின், சுயமான தேகப் பிரயாசையால் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருளாகவிருப்பின் அங்கு எல்லாம் நஷ்டமாகிவிடுமோ வென்ற அச்சமும், பணத்தின் அருமையும் ஒருவனைக் கம்பெனி நிர்வாகங்களை ஆழ்ந்து கவனிக்கத் தூண்டுவதுடன், அவனது ஊக்கத்தையும், உழைப்பையும் அதிகரிக்கின்றது. கடன் பொருள் பழக்கம் கம்பெனியில் அதிகமாக விருப்பது அலட்சியத்தையும் சோம்பேறித் தன்மையையும் அதிகரிப்பதற்கு ஆதாரமாகவிருக்கும் என்று போர்டு அபிப்பிராயப்படுகிறார்.

எவ்வளவுக்கெவ்வளவு நிர்வாகச் செலவு குறைந்து உற்பத்தியதிகரித்து விற்பனை விலையும் குறைக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்தக் கம்பெனி அதிக முன்னேற்ற மடைந்திருக்கிறதெனக் கூறிவிடலாம். போர்டு மோட்டார் கம்பெனி வண்டிகள் வருடத்திற்கு வருடம் விலை குறைந்து அவர்களுக்கு அதிக இலாபத்தைக் கொடுத்ததின் இரகசியம் ஷெ கம்பெனியின் ஒழுங்கான சிக்கன நிர்வாகமேயாகும்.

எத் தொழிலை யாரம்பிக்கினும் முதலில் அத் தொழிலிலோர் உண்மை உழைப்பும், உழைப்பிலோர் உள்ளக் களிப்பும் தேவையேயன்றி இலாபத்தையே பிரதானமாகக் கருதித் தொடங்கும் எத் தொழிலும் விரைவில் முன்னேற்றமடைவதில்லை. ஆனால் தொழிலாளிகள் இலாபத்தையும் கவனியாமலிருக்க முடியாது. ஆரம்பத்தில் அதிக ஊக்கத்தையும உழைப்பையுமே பிரதானமாகக் கொண்டு ஸ்தாபனம் செய்யப்படும் தொழிற்சாலைகள் முடிவில் நிரந்திரமான இலாபத்தை யளிக்குமே யன்றி இலாபத்தையே முக்கியமாகக் கொண்டு துவக்கப்படும் தொழில் அவ்வளவு விரைவிலும், நிரந்திரமாகவும், வெற்றியை யளிப்பதில்லை யென்பதே போர்டின் தத்துவம்.

மனமும் அதன் தொழிலும்.

பண்டிதை ஸ்ரீமதி பத்மாசனி அம்மாள் அவர்கள்.

"மனமான ஒருசிறுவன் மதியான குருவையு
மதித்திடா னின்னடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மா விராங்காம
மடுவினிடை வீழ்ந்துசுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவனு லோபமாஞ்
சிறுகுகையினூடு புகுவான்
செறுமோக விருளினிடஞ் செல்குவான் மதமெனுஞ்
செய்குன்றிலேறி விழுவான்
இனமான மார்ச்சர்ய வெங்குழியி னுள்ளே
யிறங்குவான் சிறிதுமங்கோ
என்சொல்கே ளானெனது கைப்படா னமற்றிதற்
கேழையே னென்செய்குவேன்
தனநீடு சென்னையிற் கந்தகோட்டத்து வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே."

இவைகளைத் தவிர மன உறுதியும், திட நம்பிக்கையும் எத் தொழிலிலும் வெற்றியைப் பெருவதற்குப் பிரதான அம்சங்களாகும். ஆராய்ச்சியாளர்களும், தொழிலாளிகளும் முதலில் தவருன மார்க்கத்தைப் பற்றிச் சென்று முடிவில் தோல்வியுறலாம். ஆனுல் தவறும் தோல்வியும் உண்டாவது சகஜமே யென்றும், இவைகளே சரியான மார்க்கத்தைக் காட்டும் பாதைகளென்றும் எண்ணி மனத் தளர்ச்சி யடையாது என்றேனும் ஓர் நாள் வெற்றி பெறுவது திண்ணம் என்ற திட நம்பிக்கையுடன் தொடங்கிய தொழிலைக் கைவிடாது மறுபடி மறுபடி செய்வது முடிவில் பூரண வெற்றியை யளிப்பது திண்ணம். இவைகளை யறிந்து உழைப்பதே வெற்றியைப் பெறும் மார்க்கங்களாகும்!

"இறையருட் செல்வம் இனிதுற அமையப் பெறல் மெய்த்தவ ஞானியாராம் திருவருட்பிரகாச வள்ளலார் தமது திருவருட் பாவில் மனதின் தொழிலை மிக அழகாகக் கூறியுள்ளார். மனமாகிய சிறுவன் மதியாசிய குருவையு மதித்திடான்; நின்னடிச்சீர் மகிழ்கல்வி கற்றிடான்; சும்மா இரான்; காம மடுவினிடை வீழ்ந்து சுழல்வான்; சினமான வெஞ்சுரத் துழலுவான்; லோபமாஞ் சிறு குகையினூடு புகுவான்; மோக இருளிடைச் செல்குவான்; மதமெனுஞ் செய் குன்றிலேறி விழுவான் மாற்சர்ய வெங்குழியி னுள்ளே யிறங்குவான் அந்தோ! என் சொல் சிறிதும் கேளான்; எனது கைப் படான்." எனக் கூறுகின்றார்

இங்ஙனமாகவே மனமானது அரைக்கணமேனும் ஓரிடத்தில் தரித்திலதாகி உலகமெல்லாம் திரிந்துழல்கின்றது. தனக்கென ஒருருவமில்லாததா யிருப்பினும், உலகத் தோற்றத்தின் காரணமாகியும், நித்தியம் அநித்திய மென்னும் பொருள்களிற் பயின்று வெளிப்பட்டுக் காணப்படுவதாகியும், சங்கற்பம் எங்குண்டோ அங்கெல்லா மிருப்பதாகியு மிருக்கின்றது. இவ்விதமான மனமே யாம் செய்யும் ஒவ்வோர் தொழிலுக்கும் காரணமாயுள்ளது. பஞ்சேந்திரியங்களையும் தன்னுணையி னடாத்துகின்றது. தானுமடங்காது, தன் ஆணை வழி யொழுகும் இந்திரியங்களையு மடங்கி யிருக்கவிடாது. நாம் எங்கே போனாலும் அங்கே யெல்லாம் நம்மை விடாது பின் தொடர்ந்து வருகின்றது. எண்ணாததெல்லாம் எண்ணி அலைகின்றது. இதனாலன்றோ காடுங்கரையும் மனக் குரங்கு கால்விட்டோடு மெனப் பெரியாருரைத்தனர். இந்த மனத்தின் வலிமையைக் கவனித்தே இதனைக் குரங்கெனவும் உரைத்தனர்.

உலகத்திலேயுள்ள எந்தக் கருமத்தையும் மிக்க சுலபமாகச் செய்துவிடலாம். ஆனால் இந்த மனத்தை யடக்கி யாளுதல் அரிது அரிது! இதனுண்மையை:

"கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாங்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி விரதம்வைத் தைந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணம லுலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளளலாம்

சந்ததமு மிளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாஞ்
சலமே னடக்கலாங் கனன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே''

என்னும் தாயுமானசுவாமிகள் திருவாக்கால் உணரலாம்.

மனமானது சாத்துவிதம், இராசதம், தாமத மென்னும் முக்குண வசப்பட்டு இருக்கின்றது. எந்தக் குணம் மேற்பட்டு நிற்குமோ அதன் சம்பந்தமான குணங்களே விருத்தியாகும். சாத்விகம் மேற்பட்டால் பக்தி, அருள் முதலான தெய்விக சிந்தனைகளும், இராசதம் மேற்பட்டால், தேக வாதனை, உலக வாதனை, சந்திர வாதனை முதலான சிந்தனைகளும், தாமதம் மேற்பட்டால் கொலை களவு முதலான துஷ்ட சிந்தனைகளும் விருத்தியாகும்.

மனமானது எந்த நேரமும் ஓர் தொழிலைச் செய்து கொண்டிருக்கின்றது. ஆகவே நாமதனை நற்செயலிற் பழக்கிக்கொள்ளுதல் வேண்டும். மனமாகிய பீடத்தில் கெட்ட குணங்களாகிய தேவதை உட்கார்ந்துகொள்ள விடாமல் தடுத்து நற்குணங்களாகிய தேவதையை வீற்றிருக்கச் செய்தல் வேண்டும். மனதிலே மறைந்திருக்கும் பரஞ்சுடரை—பிரமத்தைப் பிரகாசிக்கச் செய்தல் வேண்டும். கடவுள் தியானம் முதலான சற்கருமங்களால் நற்சிந்தனைகளை விருத்தி செய்யல் வேண்டும்.

600 008

"பாரதி."

மாலை 6	பவ-மார்கழி 1934 டிசம்பர்-1935 ஜனவரிமீ	மணி 9

வரப்பிரசாதம்.

"சர்தார்."

இந்தியாவிற்கு பிரிட்டிஷார் வழங்கப் போவதாகச் சொல்லி வந்த அரசியற் சீர்திருத்தம் என்ற வரப்பிரசாதத்தை வழங்கிவிட்டனர். மக்கள் உவந்து உண்ணக் கூடும் உணவா யிராமல், அவர்களை அழுத்திக் கொண்டிருப்பதற்கே பயன்படும் ஓர் பெரிய சுமையாக வந்திருக்கிறது அப் பிரசாதம். மிக ஃபிற்போக்கான கூட்டுக் கமிட்டி அறிக்கை வெகு தந்திரமாகத் தயார் செய்யப்பட்டிருக்கிறது. "எரிகிற கொள்ளியைப் பிடுங்கிவிட்டால் கொதிக்கிற கொதி தானாக அடங்கிவிடுகிறது" என்பது நம் நாட்டு முதுமொழி. அக் கொள்கையைத்தான் நம் பிரம்மாக்கள் அனுசரித்திருப்பதாகத் தோன்றுகிறது. சமாதான வழிகளில் இந்தியர் தங்கள் தேசிய கோரிக்கையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதபடி புதிய அரசியற் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளையருடன் உறவாடித் தங்கள் நாவன்மையால் நாட்டு விடுதலையைப் பெற்றுவிடலாமென்று கனவு கண்டுகொண்டிருந்தவர்களுக்கு ஏற்ற மருந்துதான் இத் திட்டம்.

குடியேற்றநாட்டு அந்தஸ்து

இந்தியா குடியேற்ற நாட்டு அந்தஸ்தையாகிலும் சட்டபூர்வமாக அடைவதற்கு அதில் வழி யேற்படுத்தப்பட் டிருக்கிறதா? இல்லை யென்றுதான் கூற வேண்டும். குடியேற்றநாட்டு அந்தஸ்து என்ற வார்த்தையை அவ் வறிக்கையிலிருந்து சாமர்த்தியமாக நீக்கியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். இதுதான் வெள்ளையரின்

ராஜ தந்திரம். புதிய அரசியல் அமைப்புப்படி இன்னும் ஒரு தலை முறை சென்றாலும் இந்தியாவிற்குக் குடியேற்றநாட்டு அந்தஸ்துக் கூட கிடைக்காதென்று மிதவாதியான சர். சிவசாமி அய்யர் எடுத்துக் காட்டி யிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

மாகாண சுயாட்சி

மாகாணங்களுக்குச் சுய ஆட்சி கொடுப்பார்களாம். சட்டம் ஒழுங்கு முதலிய இலாக்காகளின் பொறுப்புகளும் மந்திரிகளின் கைக்கு மாறிவிடுமாம். ஆனால் பயன் என்ன? கவர்னரின் விசேஷ பொறுப்புகள், விசேஷ அதிகாரங்கள் என்ற சில பிரேக்குகள்தான் தயாராக இருக்கின்றனவே. வாதத்தில் அப் பிரேக்குகளின் நன்மைகளைக் குறித்து என்ன வேண்டுமானாலும் கூறலாம். அனுபவத்தில் அவை மந்திரிகளின் பொறுப்பாட்சிக்கு முட்டுக்கட்டையாகவே பயன்படுகின்றன. இனியும் அப்படியே இருக்கும். ரகசிய இலாகாவின் ரிபோர்டுகளை மந்திரிகள் பார்வையிடக் கூடாதாம். போலீஸ் இலாகாவிற்கு கவர்னரின் விசேஷ பாதுகாப்பு அளிக்கப்படுமாம். இவை யெல்லாம் மாகாண சுயாட்சி என்பதை பொய்யாக வன்றோ ஆக்கிவிடுகின்றன.

மத்திய அரசாங்கம்

மத்திய அரசாங்க நிர்வாகத்திலும் இந்தியருக்குப் பங்களிப்பார்களாம். ஆனால் தேச பாதுகாப்பு, வெளிநாட்டு விஷயங்கள், மத விஷயங்கள், சமஷ்டியின் நிதிப் பொறுப்பு நாணயப் பொறுப்பு ஆகியவை வைசிராயின் பொறுப்புகளாக இருக்குமாம். அப்புறம் என்ன இருக்கிறது சத்தைப் பிழிந்துகொண்டு சக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் நமக்கு. அரசியற் திட்டம் பூராவும் பாதுகாப்புகளால் பயனற்றதாகச் செய்யப்பட்டிருக்கிறது. அவநம்பிக்கையே தாண்டவமாடுகிறது.

விசேஷ அதிகாரம்

கவர்னர் ஜெனரலுக்கு வேறொரு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது 'பிரிட்டனிலிருந்து இந்தியாவிற்குள் இறக்குமதியாகும் பிரிட்டிஷ் பொருள்களுக்கு விரோதமாகவும், இறக்குமதியையே தடுத்துவிடும்படியும் சட்ட மூலமாகவோ நிர்வாக அதிகார மூலமாகவோ ஒன்றும் நடைபெறாமல் தடுப்பது' தான் அவ் விசேஷப் பொறுப்பு இன்று வியாபாரத்திலும் தொழி லபிவிருத்தியிலும் இந்தியா சிறு குழந்தையாக இருக்கிறது. அதற்குக் குறுநடைதான் நடக்கத் தெரியும். பிற நாடுகளைப் போல் நிமிர்ந்து திட நடை நடக்க அது இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. இக் குழவி முதிர்ந்

தோர் உலவும் பாதையிற் செல்கிறபோது அவர்களால் மிதியுண்டு நசுங்காதபடி அதைக் காப்பாற்ற வேண்டுவது அவசியமாகிறது. இந்தியத் தலைவர்கள் அதற்கான சட்டங்கள் செய்யக்கூடும். அவற்ருல் பிரிட்டிஷாரின் நலன் பாதிக்கப்படலாம். ஆகவே அப்படிப்பட்ட சட்டங்களைத் தடுக்க கவர்னர் ஜெனரலுக்கு விசேஷ அதிகாரமென்ற வாளைக் கொடுத்திருக்கிருர்கள். அதைக்கொண்டு அவர் அவற்றை வெட்டி வீழ்த்தலாம். இது விஷயமாக அவர் இந்திய மந்திரிகளைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை யென்றும் கூறப்பட்டிருக்கிறது. இதன் பொருள் என்ன? அத்தகைய சட்டங்களால் இந்தியத் தொழிலுக்கு நன்மை யுண்டா என்பதை அவர் கவனிக்க வேண்டுவதில்லை. பிரிட்டிஷாரிடமுள்ள விரோத உணர்ச்சியால் அவை விளைகின்றன வென்று அவருக்குத் தோன்றினுல் போதும். உடனே அதற்கு அவர் தாம்பூலம் பிடித்துவிடலாம். பச்சையாகக் கூறுமிடத்து, இந்திய வியாபாரத்தால் பிரிட்டிஷார் வழி வழியாக வாழ்ந்துகொண் டிருப்பதற்காகவே இவ் வேற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கப்பல் வியாபாரத்தைப் பற்றியும் கூட்டுக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதை ஏற்றுக்கொள்வதானுல் பிரிட்டிஷ் கப்பல்களே இந்தியக் கடலோர வியாபாரத்தை அனுபவித்து வருவதற்கு ஏற்ற வழியில் விதிகள் ஏற்படுத்தப்படும். இதனுல் இந்திய கப்பற் தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும்.

மறைமுகத் தேர்தல்

மத்திய சட்டசபைக்கு மறைமுகத் தேர்தல் ஏற்படுத்தி யிருப்பது மிக பிற்போக்காகும். பொதுஜனங்களின் மனுேபீஷ்டையின் பிரதிபிம்பமாகவும், அதை நிறைவேற்றி வைக்கும் சபையாகவும் சட்டசபை விளங்க வேண்டும். மறைமுகத் தேர்தல் ஏற்பட்டால் இதை எதிர்பார்ப்பதற்கில்லை. முன்னேற்றத்திற்குப் பெரிய தடை ஏற்படும். சென்னை பம்பாய் ஆகிய மாகாணங்களுக்கு அம் மாகாணங்களின் விருப்பத்திற்கு மாருக 'மேல் சபை' என்ற சுமை வைக்கப்பட்டிருப்பது மிகக் கெடுதலாகும்.

பர்மா பிரிவினை

பர்மாப் பிரிவினை யென்ற வேருெரு அனர்த்தமும் கூட்டுக் கமிட்டித் திட்டத்தில் இருக்கிறது. பர்மாவை இந்தியாவிலிருந்து பிரிப்பதா வேண்டாமா என்ற பிரச்சினையின் பேரில் நடந்த தேர்தலில் பிரிவினை வேண்டாத கட்சியாரே வெற்றி பெற்றனர். இதுதான் உண்மை. ஆனுல் பர்மாவால் இந்தியத் தொழில்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்காதபடி செய்யவும் பிரிட்டிஷ் வர்க்கத்திற்கு பர்மாவை ஓர் மார்க்கெட்டாக உபயோகிக்கவுமே இச் சூழ்ச்சி செய்யப்படுகிறது.

மனிதர் கடமை.

(463-ம் பக்கத் தொடர்ச்சி.)

[மாஜினி.]

II

இத்தாலிய வேலைக்காரர்களுக்கு

உரிமைகள் வாஸ்தவந்தான்; ஆனால் ஒருவனுடைய உரிமைகள் மற்றொருவனுடைய உரிமைகளோடு மாறுபடும்போது உரிமைகளை விட மேலான தொன்றை நாடாமல் எப்படி நாம் அவர்களைச் சரிப்படுத்தி இணங்கச் செய்வது? ஒரு தனி மனிதனுடையவோ அல்லது பலருடைய உரிமைகளோ தேசத்தின் உரிமைகளோடு முட்டிக்கொண்டால் எந்த நீதி ஸ்தலத்

முடிவென்ன?

இவ்வளவு மோசமான அரசியற் திட்டம் இந்திய தேசியக் கோரிக்கையை எப்படி பூர்த்தி செய்யும்? மிதவாதிகள்கூட இதிற் திருப்தியடைய வில்லையே! சர். சிவசாமி அய்யர் எடுத்துக் காட்டுவது போல், இத் திட்டத்தால் இந்தியாவிற்கு ஒரு தலைமுறையில் குடியேற்றநாட்டு அந்தஸ்து கிடைப்பதோ, இந்தியா தன் பாதுகாப்பைத் தானே மேற்கொள்வதோ முடியாது. இந்தியர் தங்கள் தொழிலபிவிருத்திக்குப் பாடுபடும் சுதந்திரமோ, வல்லமையோ, அதற்குரிய சாதனங்களோ அதில் இல்லை. இந்திய நிர்வாகம் லண்டனிலுள்ள இந்தியா மந்திரியின் உத்தரவுப்படி மேலும் நடப்பதற்கான வழிகளே அதில் காணப்படுகின்றன. இந்த பயனற்ற அரசியல் சீர்திருத்தத்தை ஆண்மையுள்ள இந்தியர் ஏற்றுக்கொள்வார்களா? நம் சுதந்திர தாகத்தையே ஏளனஞ் செய்வதாகவன்றோ இருக்கிறது இத் திட்டம். இந்திய மக்கள் தங்கள் தேசிய கோரிக்கை நிறைவேறும் பொருட்டு காங்கிரஸ் மகாசபை காட்டும் வழியில் முனைந்து நின்று வேலை செய்வார்களாக!

திடம் தஞ்சம் புகுவது? பெருஞ் சுகமே ஒவ்வொரு மனிதனுக்கும் பாத்தியமென்றால் தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையே தோன்றும் கஷ்டத்தை யார்தான் தீர்ப்பது? உலகில் வாழ்வது ஒவ்வொருவனுடைய உரிமை என்றால் பிறர் நலத்திற்காக அவ் வுரிமையைத் தியாகஞ் செய்யும்படி யார் கேட்க முடியும்? தேசத்தின் பேராலும், சமூகத்தின் பேராலும், உங்கள் சகோதரர்களின் பேராலும் நீங்கள் அதைக் கேட்பீர்களா? நான் குறிக்கும் அம் மக்களது எண்ணத்தில் தேசமென்பது தனி மனிதன் உரிமைகள் ஸ்திரமாக உள்ள இடமென்பதல்லால் வேறென்ன? ஒவ்வொருவனுடைய உரிமைகளையும் ஆதரிக்கும் பலர் சேர்ந்த கூட்டமல்லாது சமூகமென்பது வேறென்ன? ஐம்பது வருட காலமாகச் சமூகமென்பது தனி மனிதனுடைய உரிமைகளைச் சாதிக்க ஸ்தாபிக்கப்பட்டது என்று போதித்த பிறகு, இன்று அவற்றைச் சமூகத்திற்காகத் தியாகஞ் செய் என்று கேட்க முடியுமா? அவசியமேற்பட்டால் அதைச் சீர்திருத்துவதற்காகத் தீரா உழைப்பையும், சிறையையும், தேசப் பிரஷ்டத்தையும் மேற்கொள்ளும்படி தூண்ட முடியுமா? வாழ்க்கையின் நோக்கமே சுகந் தேடுவதென்று எங்கும் முழக்கிய பிறகு திடரென்று தேசத்தை அந்நியனிடமிருந்து விடுவிக்கவோ அல்லது பிற வகுப்பினர்களுக்கு நல்ல நிலைமை யுண்டாக்கவோ ஒருவனைச் சுகத்தையும் உயிரையுமே விடச் சொல்ல முடியுமா? வருஷக் கணக்காக லௌகிக சுகத்தையே பேசிக்கொண் டிருந்துவிட்டு, செல்வமும் அதிகாரமும் கைக்கெட்டும் சமயத்தில் அவற்றைக் கைப்பற்றுவதால் அவனுடைய சகோதரர்களுக்குத் தீமை விளையும் என்று எவ்வாறு நிலை நாட்டலாம்?

இத்தாலியத் தொழிலாளிகளே, இது உண்மையை அடிப்படையாகக் கொண்டதே யல்லாது என் மனதில் அகஸ்மாத்தாகத் தோன்றிய எண்ணமல்ல. இது சரித்திரம்; நமது காலத்துச் சரித்திரமேதான்; மக்களின் இரத்தம் கசிகின்ற கொடூரங்கள் நிறைந்த சரித்திரம். 1830-ம் வருடப் புரட்சியால் ஒரு சிலருக்குப் பதிலாக வேறு சிலரை அதிகாரத்தில் நியமித்த எல்லோரையும் கேளுங்கள்; அந்த மூன்று நாட் சண்டையில் இறந்தவர்களைப் படியாகக் கொண்டு மிதித்துச் சென்று அதிகாரத்தை அடைந்தவர்களைக் கேளுங்கள்; 1830-க்கு முன்னால் அவர்கள் கொள்கைகளெல்லாம் மனிதனுடைய உரிமைகளையே அடிப்படையாகக் கொண்டவை. கடமையில் நம்பிக்கை கொண்டவையல்ல. இன்று நீங்கள் அவர்களைத் துரோகிகள் என்று கூப்பிடுகிறீர்கள்; இருந்தாலும் அவர்கள் தங்கள் கொள்கைப்படியேதான் நடந்தனர். அவர்கள் பத்தாம் சார்லஸின் அரசை

எதிர்த்து முழு மனதுடன் போராடினர்; ஏனென்றால் அந்த அரசாங்கம் அவர்கள் தோன்றிய வகுப்பிற்கு விரோதமானதாகவும், அவர்கள் உரிமைகளேயே நசுக்குவதுமாக விருந்தது. தங்களுக்கு ஏற்பட்டதென்று அவர்கள் நினைத்த அளவு லௌகிக சுகம் கிடைக்காததால் அவர்கள் அதற்காகப் போராடினர். சுயேச்சையான எண்ணத்திற்காகச் சிலர் கொல்லப்பட்டனர்; திட மனது படைத்த சிலர் தாங்கள் அசட்டை செய்யப்பட்டதையும், தங்களைவிடக் குறைந்த திறமை வாய்ந்த மனிதர்கள் வகிக்கும் உத்தியோகங்களிலிருந்து ஒதுக்கப்பட்டதையும் கண்டார்கள். மக்களின் குறைகளும் அவர்களுக்குக் கோபமூட்டின. பிறகு அவர்கள் தைரியமாக ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்தமான உரிமைகளைப் பற்றி எழுதலானார்கள். அதற்கப்புறம், தங்களுடைய தேசிய உரிமைகளும், அதி விவேக உரிமைகளும் கிட்டிய பிறகு, உத்தியோகத்திற்குத் தமக்கு வழியேற்பட்ட பிறகு, தாங்கள் தேடிய சுகங் கைக்கு வந்த பிறகு, அவர்கள் பாமர மக்களை மறந்து விட்டார்கள்; தங்களைவிடக் குறைந்த கல்வியும், எண்ணங்களுமுடைய லக்ஷக் கணக்கான மக்கள் வேறு விதமான சுகத்தையும் உரிமைகளையும் தேடுகின்றார்களென்பதை மறந்து விட்டார்கள். அதற்கு மேல் பிறரைப் பற்றி அவர்கள் தொந்தரவெடுத்துக் கொள்ளவே யில்லை. அவர்களைத் துரோகிகள் என்று ஏன் சொல்ல வேண்டும்? அதற்குப் பதிலாக அவர்கள் கொள்கைகளைத் துரோகமானவை என்று ஏன் சொல்லக் கூடாது.

அந்தச் சமயத்தில் பிரான்சில் அவர்கள் எல்லோர் அறிவிற்கும் மேற்பட்ட ஆழ்ந்த அறிவுள்ள ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் எண்ணங்களை எழுதி யிருக்கிறான்; அவனை நீங்கள் என்றும் மறக்கவே கூடாது. அன்று அவன் நம் எதிரி; ஆனால் அவன் வாழ்க்கையையே பொதுநலத்திற்காகத் தியாகஞ் செய்யும் மேலான கடமையில் நம்பிக்கை கொண்டிருந்தான். அவன் அக் கால மனிதர்களையும் வர்த்தமானங்களையும் ஆழ்ந்து கவனித்தான்; அவன் கரகோஷத்தால் நிலை பிறழ்ந்து போகவில்லை; ஏமாற்றத்தால் மனமுடையவில்லை. பொது மக்களின் உயர்ச்சி ஒரு வழியில் கைகூடாவிடில் அவன் வேறொன்றை முயற்சித்தான். அவன்தான் லெமென்னையஸ் (Lamennais). அவன் ஒரே ஒரு சக்திதான் மனித சுகத்தைக் கொடுக்குமென்று தெரிந்துகொண்ட பிறகு, நாமெல்லாம் சகோதரத்துவத்துடன் உழைக்கும் லட்சியத்திற்குச் சிறந்த சேவகனானான். அவன் மூலம் உரிமைக்குப் பாடுபடும் மனிதர்களும், கடமையைக் கைக்கொண்ட மனிதர்களுக்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்குப் புலனாகும். முந்தியவர் தனி உரிமையை அடைந்ததும் முயற்சி யிழந்து நின்று விடுகிறார்கள்; பிந்தியவர் வேலை இவ்வுலகில் அவர் உயிர் போகு முன் தீருவதில்லை.

அடிமையில் முழுகிக் கிடக்கும் மக்களிடையே, அவர்கள் நல் நிலைமையை நாடி வைக்கும் ஒவ்வொரு அடியும் தியாகிகளின் இரத்தக்கறை படிந்திருக்கும் பொழுது, உயர்ந்தோர் அநீதியை எதிர்ப்பது ரகசியமாகவும், பொதுஜனப் புகழ்ச்சி யில்லாமலும் இருக்கும் பொழுது, இப் புண்ணியச் சமூகச் சண்டையைத் தனி உரிமைப் பூசலாகச் செய்து விட்டால், பிறகு எதுதான் அவர்களை ஸ்திரமாக ஒரே எண்ணத்தைக் கொண்டிருக்கத் தூண்டும்? நான் வெவ்வேறு எண்ணங்களுடைய கக்ஷிகளைச் சார்ந்தவர்களைப் பற்றிப் பொதுவாகவே பேசுகிறேன்; தனிப்பட்ட ஒரு சிலரைப் பற்றி நான் பேசவில்லை என்பதை நீங்கள் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். இளைஞர்களை இயற்கையாகவே போருக்கு இழுக்கும் கொடுங் கொடூரத்தைக் கண்டு பொங்கிய இரத்தக் கொதிப்பும் புரட்சி உணர்ச்சியும் அடங்கிய பிறகு, சில வருட முயற்சியின் பின், அதிலேற்படும் பல ஏமாற்றங்களுக்குப் பிறகு, அவர்கள் சலிப்படையாதபடி எதுதான் தடுத்து நிற்கும்? சிறைவாசத்திலோ, தூக்கு மேடையிலோ, தேசப் பிரஷ்டத்திலோ முடியும் அந்த ஆபத்தும் ஓயாச் சண்டையும் பொருந்திய அமைதியற்ற வாழ்க்கைக்குப் பதிலாக வேறு எவ்வகையான இளைப்பாறுதலையும் அவர்கள் ஏன் விரும்பக் கூடாது? பழைய பிரஞ்சுக் கொள்கைகள் ஊறிக் கிடக்கும் பல இதாலியர்களின் மேல் சாதாரணமாக இக் குற்றம் சாற்றப்படுகிறது; இது விசனிக்கத் தக்கதே. ஆனால் அவர்கள் தங்களுக்குத் துணையாகக் கொண்ட கொள்கைகளை மாற்றாமல் இதை எப்படி மாற்ற முடியும்? ஆபத்தாலும் ஏமாற்றத்தாலும் மேலும் மேலும் சளையாத வலிமையையே பெற வேண்டும் என்றும், சில வருடங்கள் மட்டும் போர் செய்வது போதாது, வாழ்நாள் முழுதும் போரிட வேண்டுமென்றும் அவர்களுக்கு எப்படி, எதன் பேரால் நன்கு படும்படி சொல்ல முடியும்? உரிமைகளுக்காகப் பாடுபடுவது, அவைகளை விட்டுக் கொடுப்பதால் ஏற்படுவதை விட அதிக இடரை விளைவிக்கின்ற காலத்து, ஒருவனைப் பார்த்து உனது உரிமைகளுக்காகப் பாடுபடு என்று யார் சொல்ல முடியும்?

நம்மதைவிட மேலான நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்திலும், உரிமைக் கோட்பாடுகளிலேயே நம்பிக்கை கொண்ட ஒருவனுக்கு, பொதுக் காரியத்திற்காகவும், சமூக எண்ணம் வளருவதற்காகவும் பாடுபட வேண்டும் என்று யாரால் மனதிற் படும்படி சொல்ல முடியும்? அவன் கலகஞ் செய்கிறானென்று வைத்துக்கொள்வோம்; அவன் பலவான் என்றுணர்ந்து உங்களிடம்: "சமூக ஒப்பந்தத்தை நான் உடைத்தெறியப் போகிறேன்; எனது விருப்பமும், திறமையும் என்னை வேறு விஷயங்களுக்குத் திருப்புகின்றன; அவைகளை விருத்தி செய்ய எனக்கு யாராலும் விலக்க முடி

யாத அரிய உரிமையுண்டு; நான் ஒவ்வொருவரிடமும் போரிட நிற்கின்றேன்'' என்று சொல்லுகிறுனென்று வைத்துக்கொள்வோம்; உரிமைக் கோட்பாடுகளையே கொண்டிருக்கும் வரையில் அவனுக்கு என்ன பதில் கொடுக்க முடியும்? அவனுடைய விருப்பத்திற்கும், அவனுடைய தனிப்பட்ட நாட்டத்திற்கும் இசையாத விதிகளுக்குப் பணிந்து நடக்கும்படி வற்புறுத்த, நீங்கள் பெரும்பான்மையோராக இருந்தாலும், உங்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? அவ் விதிகளை அவன் மீறினல் அவனைத் தண்டிக்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? உரிமைகள் ஒவ்வொருவனுக்கும் சமமானவையே; சமூகமாக ஒருங்கு வாழ்வதால் ஒரு தனி உரிமையும் ஏற்படுவதில்லை. சமூகத்திற்குப் பெரு வலிமையுண்டு, ஆனல் தனி மனிதனுக்கிருப்பதை விட அதிக உரிமைகள் கிடையாது. பிறகு எப்படித் தேசத்திலோ, உலகெலாம் பறந்த ஜன சமூகத்திலோ வசிக்கும் அவனது சகோதரர்கள் விருப்பத்தோடு அவன் விருப்பத்தையும் கலக்க வேண்டுமென்று நீங்கள் நிரூபிக்கப் போகிறீர்கள்? சிறையிலடைக்கும் அதிகாரியைக் கொண்டா? இதுவரை நிலைத்திருந்த சமூகங்கள் இவ் வழியை உபயோகித்தன. ஆனல் அது சண்டை; நாம் வேண்டுவது சமாதானம்; அது குரூரமான அடக்குமுறை; நாம் வேண்டுவது அறிவு.

அறிவு என்று நாம் சொல்லுகிறோம்; நமது கொள்கைகளையெல்லாம் இப் பெரிய வார்த்தை தொகுத்து நிற்கின்றது. நமது நூற்றுண்டைக் கலக்கும் முக்கிய பிரச்சனை இந்த அறிவுப் பிரச்சனை தான். பலவந்தத்தால் ஒரு புது முறையை ஸ்தாபிப்பது நமது வேலையல்ல. பழைய முறையைவிட இது சிறந்ததாக இருந்தாலும் இது என்றும் குரூரமானது. இன்று அபிவிருத்திக்காக எடுக்கும் ஒவ்வொரு பிரயத்தனத்தையும் எதிர்க்கும் மிருக பலத்தை நாம் பலத்தால் கவிழ்க்க வேண்டும்; பிறகு தனது விருப்பத்தைத் தாராளமாக வெளியிடக் கூடிய மக்களுக்கு நல்ல முறையென்று நம்மால் கருதப்படுவதை எடுத்துச் சொல்லி ஆமோதிக்கச் செய்து, அதை மேலும் விருத்தி செய்யவும் அதன்படி நடக்கவும் அவர்களுக்கு நம்மால் இயன்ற ஒவ்வொரு வழியிலும் போதிக்க வேண்டும். உரிமைக் கோட்பாடுகள் தடைகளை உடைத்தெறியவே உதவுகின்றன; ஆனல் தேசத்தின் அவசியங்கள் எல்லாம் சம்மதிக்கும்படியான ஒரு நிலையான உறுதியுள்ள கட்டுப்பாட்டை ஏற்படுத்த உதவா. லௌகிக சுகமே வாழ்க்கையின் முதல் நோக்கம் என்னும் கொள்கைகளுடன், நாம் லௌகிக சுகத்தைக் கையெடுத்துப் போற்றும் அகம்பாவம் பிடித்த மனிதர்களே ஆவோம்; பிறகு நாம் புது முறையிலும் பழைய ஆசைகளைப் புகுத்திச் சில மாதங்களுக்குள் அதைக் கெடுத்துவிடுவோம். ஆகையால் நாம் இம்மாதிரி கொள்கைகளுக்

அன்பின் வளர்ச்சி.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

'அன்பு' என்பதற்குப் பிரியம், ஆசை, இரக்கம், நட்பு எனப் பொருள் கொள்ளலாம். உயர்வாகிய மக்கட் குலத்திற் பிறந்த ஒவ்வொருவருக்கும் அன்புடைமை இன்றியமையாத இலக்கணமாகும். "அன்பின் வழியது உயிர்நிலை, அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என்ற வள்ளுவரின் வாக்கின்படி அன்பு படைத்தவர்களே மனிதர்களாவர்; அன்பில்லாதவர்கள் மக்களுருக் கொண்ட மாக்களே யாவர். மிருகங்கள், பக்ஷிகள் முதலிய பிராணிகளும் அவற்றுள் ஒன்றுக்கொன்று அன்பு காட்டி நடந்துகொள்ளுகின்றனவென்றால், ஆறறிவு படைத்த மக்களிடையில் எவ்வளவு அன்பு நிலைத்திருக்க வேண்டுமென்பதை ஊகித்துக்கொள்ளலாம். மக்கள் சகஜமாக ஒருவர்க்கொருவர் உதவி புரிந்துகொண்டு வாழ வேண்டிய இயல்பினரா யிருக்கின்றனர்.

கெல்லாம் உயர்ந்ததும், மக்கள் உயர்ச்சிக்கு வழி காட்டுவதும், தியாகத்தில் ஸ்திரமாக இருக்கப் போதிப்பதும், தனி மனிதனுடைய எண்ணங்களுக்கும் அனைவருடைய பலத்திற்கும் கீழ்ப்படியாது நமது சகோதரர்களுடன் பிணைப்பதுமான ஒரு கொள்கையை யுடைய அறிவைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அந்தக் கொள்கைதான் கடமை என்பது. ஒரு தனிக் கடவுளின் மக்களான அவர்களுக்கு, இவ் வுலகில் ஒரு தனி விதியையே பணிய வேண்டும் என்பதை நன்கு படும்படி நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்; தனக்கென வாழாது பிறர்க்கென வாழ வேண்டும்; பெருஞ் சுகத்தையோ, குறைந்த சுகத்தையோ அநுபவிப்பது மட்டும் வாழ்க்கையின் நோக்கம் அல்ல; தாமும் பிறரும் மேன்மை யடைய வழி தேட வேண்டும்; அவர்களின் சகோதரர்களின் நன்மைக்காக அநீதியையும், தப்பையும் எதிர்த்துப் போராடுவது உரிமைமட்டுமல்ல, ஆனால் அது கடமை; அவ் வாழ்க்கைக் கடமையைப் புறக்கணிப்பது பாவமாகும் என்பதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

(தொடரும்.)

மேலும் மக்கள் பலர் கூடி குடும்பமாகவும், கிராமமாகவும், நகரமாக வும் வாழ்ந்து வருவதே அவர்களுடைய சுபாவமாகும். ஆகவே, ஒருவர்க்கொருவர் உதவி புரிந்துகொண்டு, பலர் கூடி ஒருங்கே வாழ வேண்டுமானால் அவர்கள் ஒற்றுமையோடிருக்க வேண்டும். அவ்வித ஒற்றுமையை யுண்டாக்குவதற்கு அன்பு மிக அவசியம். மனிதனது உள்ளத்தில் இயல்பாக அன்பு அமைந்திருக்கிறது. அவ்வன்பை அவன் தன் அறியாமையினால் குறைத்தும், முறையற்ற துறையிற் செலுத்தியும் இடர்ப்படுகின்றான், மிகவுங் கொடிய துன்மார்க்க னென்றும், கொலைஞனென்றும் பெயர்படைத்த ஒருவனும் தன் காதற் கிழத்தியினிடத்திலும், ஆசைக் குழந்தைகளினிடத்திலும் அளவற்ற அன்பு காட்டுவதைக் காணலாம். எனவே, உலகில் அன்பு இல்லாத உள்ளம் படைத்த மனிதர் இல்லை யென்பது நிச்சயம். ஆயினும் அவ்வன்பை நேர்மையான வழியில் வளர்த்துப் பயன் பெறும் மக்களே மிகஅருமையாவர். ஒருவன் தன்னைப் போன்ற பிற மக்களை அன்புன் நேசித்தால் மட்டும் போதாது; உயிர் படைத்த எல்லா ஜீவன்களையும் அன்புடன் நேசித்தல் வேண்டும். ஒரு புறுவின் உயிருக்காக வேண்டி தன் உடலையே அர்ப்பணஞ் செய் யத் துணிந்த சிபிச் சக்கிரவர்த்தியின் உதாரணத்தைக் கவனியுங்கள். மகான்கள் பலர் உயிரற்றனவாகக் கருதப்பட்ட ஜடப் பொருள்க ளிடத்தும் அன்பு பாராட்டி யிருக்கின்றனர். "அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாள்?" என்றபடி அன்புக்கு எல்லை யென்பதில்லை. கொழுக் கொம்பின்றித் தவித்து நின்ற முல்லைக் கொடிக்குத் தான் ஏறி வந்த இரதத்தைக் கொழுக் கொம்பாக நிறுத்திவிட்டு, நடந்து தன் வீடு சென்ற தமிழ் நாட்டு மன்னனுடைய அன்பின் எல்லையை நினைத்துப் பாருங்கள். அவசியமான அளவுக்கன்றி அதற்கு மேற் பட்டு ஒரு சிறிதளவு காய் கனிகளையும் செடி கொடிகளினின்று பறிக்க ஒருப்படார் பெரியோர். உத்தமமான மனிதனது அன்பா னது உலக மனைத்தையுமே இலக்கியமாகக் கொண்டு வளரும். அவ் வாறு அன்பு படைத்த மனிதனே தெய்வத் தன்மை வாய்ந்தவன். தெய்வமே அன்பின் வடிவமென்று பெரியோர்கள் கூறியிருக்கின்ற னர். "அன்பே சிவம்" என்று வரும் ஆன்றோர் வசனங்களைக் கவனிக்க. அவ்வாறு இருக்கையில் மனிதர் ஒருவர்க்கொருவர் அன் பின்றி சுயநலத்தைக் கைப்பற்றிக் கலகம் விளைவித்துக்கொண் டிருப் பது மனிதத் தன்மை யாகுமா? உள்ள மென்னும் குளத்தில் எழும் அன்பு என்னும் வட்டமானது முதலில் தன் குடும்பம், பிறகு தன் சுற்றத்தார், பின் தன் இனத்தார் என்று முறையே கிராமத் தார், தன் மொழி பேசுபவர், தன் சமயத்தார், தன் தேசத்தார், தன்னைப் போன்ற உலக மக்கள் என வளர்ந்து, கடைசியில் இப் பிரபஞ்ச முழுதும் என்ற அளவில் விரிந்து பரவுகின்றது. அப்படி

உலகத்தை நேசிக்கப் புகுந்த ஒருவனுக்கு இவ்வுலக முழுதும் சொந்தமாய் விடுகிறது. உலகமே அவரிடத்து அன்பு கொள்ளுகிறது. அப்படிப்பட்டவருக்கு ஒரு ஜாதி, ஒரு பாஷை, ஒரு சமயம், ஒரு தேசம் என்ற கட்டுப்பாடுகளில்லை. அவை யனைத்தையுங் கடந்து அவரது அன்பின் வாழ்க்கை உலகமெங்கும் வியாபித்து விளங்குவதாகும். கவி ரவீந்திரநாத தாகூருக்கு அன்பு காட்டி வரவேற்புக் கூறாத சாதியும், பாஷையும், சமயமும், நாடும் உலகில் ஒன்றுண்டோ? ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய பல நாடுகளும் அவரை ஆவலுடன் ஏற்று உபசரிப்பதன் இரகசியமென்ன? அவர் ஒரு வங்காளியர் என்பதை முன்னிட்டா? அல்லது அவர் ஒரு இந்தியர் என்பதை முன்னிட்டா? இல்லை; இல்லை. அவர் உலகை நேசித்ததை முன்னிட்டேயாகும். மகாத்மா காந்தி யடிகளை இந்திய நாடு முழுதுமன்றி உலகமே நேசிப்பதன் காரணம் யாது? அவரது அன்பு வட்டம் எல்லை கடந்து சென்றிருப்பதே காரணமல்லவா? காந்தி யடிகளால் நேசிக்கப்படாத அல்லது அன்பு காட்டப்படாத ஒரு பொருள் உலகில் உண்டா? சிந்தியுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் ஏன் அவ்வாறு மகாத்மாக்களாகக் கூடாது? அவர் தனிப்பட்ட அவதார புருஷர் என்கிறீர்களா? அந்தோ இப்படித்தான் இந்தியர்களாகிய நீங்கள் எண்ணி எண்ணி இக் கதிக்காளானீர்கள். அவதார புருஷர் என்பது ஒரு தனிப் பிறவியன்று. காந்தி யடிகளேயல்ல, அவதார புருடர்களென்று நம்மால் பாராட்டப்படும் அனைவருமே சாமானிய மனிதர்களேயாவர். அவர்கள் தம் சுய முயற்சியினாலேயே அப் பேறு பெற்றார்கள். ஆகவே, ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி ஒவ்வொருவரும் உங்களிடத்தில் தெய்வீக சக்தி நிறைந்திருக்கிற தெனக் கருதுங்கள் நீங்கள் முயன்றால் அவசியம் ஒவ்வொருவரும் அவதார புருஷர்களாகலாம். எனவே இந்தியர்களாகிய நீங்கள் அனைவரும் ஒருவர்க்கொருவர் அன்பு கொண்டு நேசியுங்கள். உங்களில் யாவரும் சரி நிகர் சமானமெனக் கருதுங்கள். உங்களிடையில் குறுக்கிட்டு நிற்கும் சாதி, சமயம், மொழி, நிறம், அந்தஸ்து, உயர்வு, தாழ்வு, பணக்காரன் ஏழை, எஜமானன், அடிமை என்ற வேற்றுமை விளைக்கும் முள் வேலிகளை யறவே வெட்டி வீழ்த்துங்கள். எல்லை கடந்த அன்பு உங்களிடையில் எழுச்சி யடையட்டும். மக்களிடையில் ஒருவர்க்கொருவரை பிரித்து வைக்கும் வேற்றுமை யுணர்ச்சிகளை, வேரறக் களையும் சாதனம் பொதுவுடைமைத் தத்துவமே யென்று உலக பேரிகை முழங்கி வருகிறதைக் கவனியுங்கள். உங்கள் உள்ளத்தில் எழும் அன்பின் வட்டம் நமது நாட்டின் அளவுக்கு விரிந்து சென்று, உலக வட்டத்தை எட்ட முயலட்டும். அதுவே உலக சகோதரத்துவத்தின் இலக்கியமாகும். ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் அன்பு வட்டத்தைப் பெருக்கி,

விதவையின் கண்ணீர்.

திரு. K. வேங்கட ராவ் அவர்கள்.

சனாதன மகான்களே! சாஸ்திர விற்பன்னர்களே! எடுத்ததற்கெல்லாம் மதம், மதம் என்று பறையடிக்கும் பெரியோர்களே! பெற்றோர்களே! குடும்பத் தலைவர்களே! பாரத மக்களே! உங்களுக்கு ஜீவகாருண்யமில்லையா? ஈவிரக்கமில்லையா? நம்மைப்போல்தானே பிறர் என்னும் எண்ணமில்லையா? உங்கள் நெஞ்சில் அன்பு என்பதற்குச் சற்றேனும் இடமில்லையே! இது நல்லது, இது கெட்டது என்று எண்ணிப் பார்க்கவும் பகுத்தறிவில்லாமலா போய்விட்டது? நியாயத்தை எடுத்துச் சொன்னாலும் "சிவ சிவா" யென்று காதைப் பொத்திக்கொள்கிறீர்களே! தர்மத்தை எடுத்தோதினாலும் அவற்றைக் கேட்க மறுக்கிறீர்களே! மனித தர்மத்தையும் மானிட நிலைமையையும் சற்றேனும் கவனிப்பதில்லையே! உங்களை ஓர் அடி அடித்தால், அடித்தவனைக் கொலை செய்யவும் மனங்கொள்வீர்கள்; வேறொருவன் அடிபட்டால் ஆனந்தக் கூத்தாடுவீர்கள்! உங்கள் கல் மனதை எடுத்துக் காட்டவும், உங்கள் அநியாயத்தைச் சொல்லவும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் விவரிக்கிறேன். அப்பனே! ஸ்வாமிகளே! சன்மார்க்கநெறி தவறாதவர்களென்று சொல்லும் பெரியோர்களே! கேளுங்கள்.

நான் சொல்வதற்கெல்லாம் ஏதேனும் குருட்டுப் பாடம் செய்து வைத்துள்ளதை கண்ணை மூடிக்கொண்டு ஒப்பிக்க வேண்டாம். செல்லெரித்த ஓலைச்சுவடிகளை எடுத்துக் காட்ட வேண்டாம். நீங்கள் ஒப்பிப்பதற்கு உங்களுக்கே அர்த்தம் தெரியாது. நீங்கள் காட்டும் சுவடிகளில் முக்கியமான பாகங்களை செல்லெரித்துவிட்டன. இப்போது எஞ்சி நிற்பது ஒன்றுக்கும் உதவாக் கஞ்சியேயாகும். பழங்காலத்து நியாயத்தைச் சொல்வதால், இப்போது ஏற்பட்டிருக்கும் மனப்புண் ஆறாது; நல்ல பேச்சால் மட்டும் பசித்த

உலகை நேசித்து, அவ் வழியே உலகில் திருட்டு, வஞ்சனை, பொறாமை, சூது, வாது, கொலை, பகை முதலிய தீமைகளையொழித்து, எங்கும் இரக்கம், சிநேகம், உபகாரம், சந்தோஷம், சாந்தம் முதலியவற்றை வளர்க்க முயலுவீர்களாக.

வயிறு சந்துஷ்டி யடையாது. பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் ஒரு துளி தண்ணீரும் கீழே விழாது; அது போலவே நீங்கள் செய்யும் பிரம்மோபதேசத்தால் பொட்டையான கண் திறக்காது! பெரியோர் களே! நன்றாக ஓர் முறைக்கு ஆயிரம் முறைகள் எண்ணி யெண்ணிப் பாருங்கள். நமது பெண்கள் பாரத சமுதாயத்தின் உயிர்நாடிகள். பெண்களே பாதி பாரதம். பெண்களால்தான் நமது புராதன நாக ரீகமும், கலைகளும் உயிர் பெற்றிருக்கின்றன. பெண்களின்றேல் இல்லை இவ்வுலகம். நாட்டிற்கு அணியாக விளங்குவது பெண் களே. ஆண்மகனுக்கு அறிவும், ஊக்கமுந் தருவது பெண்களே. பெண்களே தாய் சிவ சக்தியின் திருவவதாரங்கள். நமது மனைவி மாரும், தங்கைமாரும், தாய்மாரும், பெண் குழந்தைகளும், நம் நாட்டுப் பெண்களும் சக்தியின் வடிவங்களே. சக்தியின்றேல் சிவ னும் அசைய முடியாது. பெண்களே சக்தித் தெய்வங்களென்று மறைகளோதுகின்றன. நவதான்யங்களுக்கும், அஷ்ட ஐஸ்வர்யங் களுக்கும், நாம் உயிர் வாழ்ந்திருக்க அத்யாவசியமா யிருக்கும் சகல பொருள்களுக்கும் நாயகியாய், கேட்டது கொடுத்துக் காப்பாற்றும் திருமகளும் பெண்ணே! வீரத்திற்கும் தைர்யத்திற்கும் உறைவிட மாயுள்ள மாகாளியும் பெண்ணே! கவிகளின் நாக்கிலும் எழுத்தாளர் களின் எழுதுகோலிலும் சாக்ஷாத்காரமா யிருந்து உலகத்தின் கண் ணைத் திறந்திடும் என்னம்மையும் பெண்ணே! வாயில்லாப் பிராணி களுக்குப் புல்லளித்து, மானிட வயிற்றை நிறப்ப நவதானியங்களை யளித்து உய்விக்கும் பூதேவியும் பெண்ணே! இத் தெய்வங்களை மனமாற நினைத்து, வாயாரப் புகழ்ந்து பாடும் நீங்களோ என்ன செய்கிறீர்கள்? இத் தெய்வங்களின் சாயல்களும் பிரதிபிம்பங்களு மான வீட்டுப் பெண்களையும் நாட்டுப் பெண்களையும் மூலையில் கிடத்தி முக்காடிடுகிறீர்கள்? இது நியாயமா? தர்மமா? பெண் தெய்வங்களுக்குத்தான் பொறுக்குமா? சொல்லுங்கள் கேட்போம்.

அடடே! அந்த சுவடிகளைத்தான் எடுக்க வேண்டாமென்று சொன்னேனே! அவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்காதீர்கள்! உங் களைப் பொறுத்தமட்டில் அந்த சுவடிகளில் சொல்லியபடியே செய் கிறீர்களா? சற்றேனுமில்லையே! அவ்வாறிருக்க பிறரைப் பொறுத்த மட்டில் ஏன் சுவடிப் பளுவை அவர்கள் மேல் தள்ளுகிறீர்கள்? சுவ டிகளில் சொல்லியபடி கடமைகளைக் கைவிட்டீர்கள்! ஆசாரங்களை ஒழித்தீர்கள்' அனுஷ்டானங்களை "தூ" வென்று துப்பி உமிழ்ந்தீர் கள்! பணம் அகப்படவில்லை யானல் கலியாண மில்லாமல் பதி னெட்டு வயதுவரையில் பெண்களை வளர்த்து வருகிறீர்கள். இவ் வளவும் செய்து வரும் உங்களிடம் விதவைக்கு மறு மணம் என் னும் பேச்சை எடுத்தால் சரடு திரிக்கக் கிளம்பி விடுகிறீர்கள். சமு

தாயத்திற்கு ஆண்கள் ஓர் கண்; பெண்கள் மற்ஞேர் கண். ஒரு கண் பொட்டையானல் முகம் நன்ரு யிருக்குமா? அது போலவே நாட்டின் கண்களில் ஒன்று பொலிவிழந்தால் நாடு செழிக்குமா? நாட்டினர் உறுப்படுவரோ? "பெண்கள் எக்கேடு கெட்டால்தா னென்ன" வென்று நீங்கள் கேட்கும் அகம்பாவத்திற்கு நீங்களே கேடு கெடாமலிருக்க முடியுமா? நீங்கள் வேண்டுமானல் நான் ஆண், அவள் பெண், நான் பார்ப்பான், அவன் சூத்ரன் என்று பேசிக் கொள்ளலாம். எல்லோரையும் படைத்துக் காக்கும் ஆதிமுதல்வ னுக்கு இத்தகைய வித்தியாசங்கள் தோன்றுமா? ஆணுகில் தன் னிச்சைப்படி நடக்கலாமென்றும், பெண்ணுகில் நரக வாழ்வே வாழ வேண்டும் என்றும் எந்த தர்ம சாஸ்திரம்தான் சொல்லுமையா? எந்த அறிவுள்ளவன்தான் ஒப்புக்கொள்வானப்பா? அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றும், பெண்கள் எப்போதும் அடிமைகளாகவே வாழவேண்டு மென்றும் உங்கள் தர்ம சாஸ்திரங் களை இங்கிலாந்திலேனும், அமெரிக்காவிலேனும், ருஷ்யாவிலேனும் போய்ச் சொல்லுங்கள். உங்களைப் போல் மடையர்களைக் கண்ட தில்லை யென்று கண் காக்ஷியில் உங்களைக் கொண்டுபோய் வைப் பார்கள். அந் நாட்டுப் பெண்கள் உங்கள் கன்னங்களில் ஓங்கி அறை கொடுப்பார்கள். நம் நாட்டிலல்லவா கூசாமற் கூறி வருகி றீர்கள்?

மனைவியை யிழந்த எழுபது வயது கிழவனும் மணக்கலாமாம். கணவனை யிழந்த பெண் குழந்தையோ, முக்காடிட்டுத் தலையைச் சிரைத்து சாக வேண்டுமாம். என்ன நியாயமிது? இந்த நியாயத் தில் கருணை யென்பது சிறிதேனும் ஜ்வலிக்கிறதா நீங்களே சொல் லுங்கள். ஆண் விதவைக்கு ஆயிரம் கலியாணங்க ளென்ருலும் "ஆகட்டும்" என்கிறீர்கள். பெண் விதவைக்கோ படுகுழியே கதி யென்கிறீர்கள்; உங்கள் சுவடிப் பேச்சையே எடுத்துக்கொள்வோம். ஆண் மக்களுக்குண்டான காமப் பித்துக்கு அதிகப்படியாக எண் மடங்கு பெண்களுக்குண்டு என்று சுலோகம் சொல்லுகிறீர்கள். ஒரு பங்குள்ள காமப் பித்தன் எழுபது வயதானுலும் சாகுமட்டும் ஒன்று வேண்டுமே யென்று ஓர் இள நங்கைக்குத் தாலி கட்டுகி ருன். எண் மடங்கு காமமுள்ள மடமங்கையோ "முண்டை" யென்னும் முத்திரை குத்தப்பட்டு மூலையில் சாகிருள். அவள் அழுத அழுகை வீண் போகுமா? சிந்துங் கண்ணீர் வெறும் மண் ணிற் கலக்குமா? விதவையின் கண்ணீர் பாரத சமுதாயத்தை வாளென அறுக்கிறது. நரக வாழ்வு வாழ்ந்து நரக வேதனைப் படும் இளம் விதவைகள் பாரத நாட்டில் எத்தனை பேர்? எண்ணிப் பார்க் குந்தோறும் அடி வயிற்றில் "பகீர்" என்று நெருப்புக் கனல் கொழுந்துவிட் டெறிகிறது.

எத்தனை பேர் நமது பாரத நாட்டில் லக்ஷக் கணக்கில்—ஏன்? கோடிக் கணக்கில்—இள வயதிலேயே நாயகன்மாரை யமனுலகிற் கனுப்பிவிட்டு வாடி வதங்கி கண்ணீரை ஆறாகப் பெருக்கும் மங்கைகள் எத்தனை பேர்? ஐயோ! என்னப்பா!! அவர்தம் துயரையும் மன வேதனையையும் நினைக்க நினைக்க மனம் பதறுகின்றதே! விதவைகளில் அண்ணன் தம்பிகளுக்கும் கசப்பாய்க் கிடப்போர் எத்தனை பேர்? அண்ணிகளிடத்திலும் நாத்திகளிடத்திலும் இடிபட்டுச் சாவோர் எத்தனை பேர்? "இந்த முண்டையைத் தொட்டுத் தாலி கட்டாதிருந்தால் என் மகன் இன்னும் வாழ்ந்திருப்பான்" என்று சொல்லிச் சொல்லி உயிர் வாங்கும் மாமிகள் எத்தனை பேர்? "மாங்கல்ய பலமில்லாத முண்டை முகத்திலேயே விழிக்கலாகாதென்று சொல்லி முகத்தைத் திருப்பிக்கொள்வோர் எத்தனை பேர்? கணவனை யிழந்ததால் ஆதரவற்று, கவனிப்பாரற்று, கேட்பாரின்றி, நிற்க நிழலின்றி, கூப்பிட ஆளின்றி தெருவில் ஏங்கி நிற்போர் எத்தனை பேர்? சகல செளகரியங்களிருந்தும், புருஷனது புன்முறுவல் என்னும் பொக்கிஷத்தை யிழந்ததால், செல்வச் செருக்கு போயிழந்து, முகம் வாடி, உடல் சுருங்கி வதங்குவதைக் காணக் காண பெருமூச்சு விடும் பெற்றோர் எத்தனை பேர்? வீதியில் எட்டிப் பார்த்தாலும் "முண்டையே மூலையில் கிட; வெளியே வந்து எங்கள் மீது அபாண்டத்தையும் அபக்யாதியையும் சுமத்தப் பார்க்கிறாயா?" என்று ஆதரிப்போர் ஏச, மன மொடிந்து கிடக்கும் மங்கைக் கனிகள் எத்தனை பேர்?

இன்னும் சொல்லட்டுமா? விதவையானதால் உள்ளதோர் ஆதரவை யிழந்து, வயிறு வளர்க்கப் பட்டணவாசங்களில் இட்டிலி மாவரைக்கும் இளம் பெண்கள் எத்தனை பேர்? அங்கும் இவள் பாடுபட்டு வயிறு வளர்த்துக்கொண்டாலும், பார்ப்போர் கேட்போர் இவள் மீது அடாத பழி சுமத்தப் பின் வாங்குகிறார்களா? தாசிகளின் வீடுகளில் போய்ப் பாருங்கள். எத்தனை விதவைகள் சமையற்காரிகளாகவும், விபசாரத் தொழிலுக்காகவும் போய் அமர்கின்றனர். என்ன செய்வார்கள்? இவர்கள் மீது சற்றேனும் குற்றமில்லை. வயிறு வளர்க்க வேண்டுமே என்ன செய்வது? பெண் விதவைகளுக்கு கதிமோக்ஷமில்லை. ஜன சமூகமோ இவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மறுக்கிறது. எத்தனை விதவைகள் வேசித் தொழிலுக்கு தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகவே ஈடுபடுகிறார்கள் தெரியுமா? மனோ வேதனையையும், திரேக தர்ம அவஸ்தையையும் தாங்க மாட்டாமல் நடு நிசியில் கிணற்றில் இறங்குகிறார்கள் தெரியுமா? வீட்டிற்குள்ளேயே தூக்குப் போட்டுக்கொண்டு இறந்து மடிகிறார்கள் தெரியுமா? திரேக அவஸ்தையைப் பொறுத்துப் பொறுத்துக் கடைசியில் தம்மையும் மீறி செய்துவிடும் ஓர் சிறு

காரியத்தால், கர்ப்பம் தரிக்கவே ஊர் நிந்தனைக்கும், உலகப் பழிக்கும் பயந்து விஷமுண்டு உயிர் துறக்கும் கற்பிணிகள் எத்தனை பேர் தெரியுமா? மூடி மூடி வைத்துக்கொண்டிருந்து கடைசியில் குழந்தை பிறக்கவே, கண் திறக்காத சிசுக்களை தெருக்களிலும், கால்வாய்களிலும், பாழுங் கிணறுகளிலும் விட்டுச் செல்வோர் எத்தனை பேர்? இவ்வளவிற்கும் சுவடிகளைக் காட்டிக் காட்டி, சுலோகம் சொல்லிச் சொல்லி சமாதானப்பட முடியுமா?

என்னையா குடியா முழுகிப்போகும் விதவைகளுக்குக் கலியாணம் செய்துவிட்டால்? விதவைகளுக்கு கலியாணம் செய்துவிட்டால் மேற்குறித்த இவ்வளவு அக்ரமங்களும் நடைபெறுமா? பத்தினி யென்று சொல்லிக்கொண்டு வேசித்தனம் செய்வதெல்லாம் நின்று போகாதா? மறு மணம் விரும்பாத விதவைகளைக் கட்டாயப் படுத்தாதீர்கள். பால் மணமும் மாறாத இளஞ் சிறுமிகளை இருட்டில் தள்ள யார்தான் மனமொப்ப முடியும்? மறு மணத்தை விரும்பும் விதவைகளுக்கும், அனாதரவாய்ப் பரிதவிக்கும் விதவைகளுக்கும் ஏனய்யா மறு மணம் செய்யப்படாது? ஆண் விதவை யொருவனுக்குக் கன்னியைக் கொடுத்து கலியாணம் செய்யாதீர்கள். ஆண் விதவை பெண் விதவையையே ஏன் மணக்கலாகாது? பெண் விதவையை மணக்க சம்மதமில்லையானால், இவனும் பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்கட்டும் பார்ப்போம்! ஆண் விதவைக்குக் கன்னிகையைக் கொடுக்கும் வழக்கத்தை அடியோடு ஒதுக்கி விடுங்கள்; அப்போது பெண் விதவைகளுக்கும் கிராக்கி ஏற்படுவதை நீங்களே காண்பீர்கள்! அப்போது நமது சாஸ்திரிக் கூட்டத்தினரும் "இதுவே சரி" யென்று வேறோர் சுலோகத்தை உண்டுபண்ணிப் படித்து விடுவார்கள். சாஸ்திரம் எங்கேய்யா யிருக்கிறது? முன்னர் புருஷன் இறந்தால் மனைவியையும் உயிருடன் உடன்கட்டை சேர்ப்பதே சாஸ்திரமென்கிறீர்கள்! "உடன் கட்டை கூடாது" என்று கருணையுடன் சட்டம் வரவே, அத்துடன் அந்த சாஸ்திரப் பேச்சும் மலையேறிப் போய்விட்டது! பிராமணன் வேதத்யாயனம் செய்வதே சாஸ்திரமென்றீர்கள். உத்தியோக வேட்டை கிளம்பவே "உத்தியோகம் புருஷ லக்ஷணம்" என்று பாடிக்கொண்டு ஆபீஸ் ஆபீஸாக புகுந்தீர்கள்! ஆபீஸ் வேலை, கச்சேரி அலுவல் வரவே சந்தியாவந்தனம் போச்சு, அமாவாசை மறக்கலாச்சு, தாய்தந்தையர் சிரார்த்தத்தையும் சாஸ்திரிகளே செய்யலாச்சு! எங்கேய்யா உட்கார்ந்திருக்கிறது உங்கள் சாஸ்திரங்களெல்லாம்? விதவைகளைப் பாவம் நரகத்தில் தள்ள உங்கள் சாஸ்திரங்களெல்லாம் வீரிட்டெழுகின்றன போலும்!

எளிய விதவைகளுக்கு உங்கள் கருணையை ஏன் காட்டலாகாது? குரங்குப் பிடியை ஏன் விடலாகாது? நம்மைப் போலவே

ஹரி ஜனங்களின் பொருளாதார நிலைமை.

திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A.

4. தேக நலம்.

ஹரி ஜனங்கள் எல்லோரும் தேகத்தால் பாடுபடுபவர்கள், வெட்ட வெளிச்சமான தோட்டம், வயல் காடுகளில் வேலை செய்ய வேண்டியவர்களாதலால், பகலிற் பெரும்பாலான காலத்தில் சுத்தமான காற்றையே உட்கொள்பவர்கள். களைப்புடன் வீட்டுக்கு வந்து சேருகிறபடியால், நன்றாகத் தூங்குபவர்கள், பசியால் மடிந்து போகும் நிலைமையில் இருந்தாலும் இருக்கலாமே பொழியத் தின்று தெவிட்டுவதென்பதை என்றுமறியாதவர்களாதலால், அந்த வகையிலும் தேக நலம் கெடாமலிருக்கக் கூடியவர்கள்.

எனவே, இவர்கள் கட்டு மஸ்தான தேகம் படைத்தவர்களாய் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. உண்மையிலேயே, சிறு வயது

ஸ்திரீகளும் என்று நினைத்து ஜீவகாருண்யம் காட்டுங்கள். இப்போது நீங்கள் பெண்களை வைத்திருக்கும் நிலைமையைக் காட்டிலும், தாலியை அறுப்பதற்குப் பதிலாக அவர்களது கழுத்தையே அறுத்தெறிந்து விடலாம். நீங்கள் அவர்கள்பால் அன்பு காட்டினால்தான், கடவுளும் உங்கள் மீது அன்பு செலுத்துவார். இல்லாவிட்டால் நீங்களும் அடுத்து வரும் ஜென்மங்களில் விதவைகள் வாழ்வையே அடைவீர்கள். கடவுள் ஒருவர் இருக்கிறார், அவர் நியாயப் போக்குள்ளவர், அவர் சிறந்த நியாயாதிபதி, அவருக்கு ஆண் பெண் ஜாதி மத நிற வேற்றுமை யில்லை, எல்லோரிடத்தும் ஒரேவித அன்பு காட்டுபவர், அவர் முன்னிலையில் ஓர் நாள் நின்று நமது நடவடிக்கைகளுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களா யிருக்கிறோம் என்று நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்களானால் இவ்வளவு அநியாயம் செய்ய உங்களுக்கு மனம் வருமா?

முதல் நல்ல முதுமைப் பருவம் வரையில், சிறந்த தேகமும், நல்ல பலமும், நோயற்ற நிலைமையும் இவர்களுக்குள் காணக் கிடைப்பது போல் மற்றவர்களுக்குள் கிடைப்பது அரிது. வாலிபப் பருவத்தி லிருக்கும் ஹரிஜன ஸ்திரீ புருஷர்கள் தேக நலத்தின் வடிவங்களா கவே விளங்குகிறார்கள். அவர்களைக் கண்டு மகிழ்வதையே நான் சில சமயங்களில் பெரும் பாக்கியமாகக் கருதியதும் உண்டு

ஆனால் அவர்கள் தேகம் கெடுவதற்கும் நோய்வாய்ப்பட்ட பின் நெடுங் காலம் வரைக்கும் கஷ்டப்படுவதற்கும் பல காரணங்கள் இருக் கின்றன. அவைகளிற் சில வருமாறு.

1. வறுமையும் கடனும்.
2. மிதமீறிய தேக உழைப்பு.
3. ஓய்வு இல்லாமல் வருந்துவது.
4. தேகம் நோகும்படி அடிபடுவது.
5. மதுபானம்.

முதலியன.

வறுமையும் கடனும்

அவர்களுடைய கஷ்டங்களுக் கெல்லாம் வறுமையையே முக்கிய காரணமாகச் சொல்லலாம். வறுமை ஒன்று மட்டும் இல்லாமற் போனால், அவர்கள் கஷ்டப்படுவதற்கு மதுபானம் தவிர வேறு கார ணங்களே இல்லை என்று சொல்லிவிடலாம். அவர்கள் அடிமைப்பட் டிருப்பதற்கும், வருவாய் குறைவதற்கும், கடன் பெருகுவதற்கும், கஷ்டப்பட்டு உழைப்பதன் பலன் கிடைக்காமற் போவதற்கும்;—ஏறக் குறைய அவர்களுடைய எல்லாத் துயரங்களுக்கும் முக்கிய காரணம் வறுமையே யாகும். இதனால் தேக நலம் குன்றிப் போகிறது. தேக நலம் குறைவதால் வறுமை அதிகரிக்கிறது. தேக நலத்தின் இந்தப் பொருளாதார அம்சத்தை எடுத்துக் காட்டுவதற்குத்தான் இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

மாகாளி என்பவன் ஒரு பண்ணையத்தில் 22 வள்ளம் படிக்கு வேலை செய்து வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு அளக்கப்படும் படி கூலி வள்ளத்தில். கூலி வள்ளம் என்பது முத் திரி வள்ளம் என்ற நியாயமான அளவு வள்ளத்தில் $\frac{3}{4}$ பங்கு ஆகும். இந்த 22 வள்ள வருமானத்தின் மதிப்பு மாதம் 3—4—0 ரூபாய் என்று வைத்துக்கொள்வோம்.

மாகாளி என்பவன் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் பண்ணயத்தில் வேலை செய்ய வேண்டும். எந்தக் காரணத்தைக்

கொண்டாவது அவன் ஒரு நாளேனும் வேலை செய்யாமற் போனால், தினம் ஒன்றுக்கு முத்திரி வள்ளத்தில் ஒரு வள்ளம் பிடித்துக் கொள்ளப்படும். அவன் மாதத்தில் 12 நாள் வேலை செய்ததாகவும், 18 நாள் வேலை செய்யாமலும் போனால், அவனுக்கு அந்த மாதத்தில் கூலியே கிடையாது. 6 நாள்தான் வேலை செய்தான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது அடுத்த மாதப் படியில், முத்திரி வள்ளத்தில் 6 வள்ளம் பிடித்தமாகும். இதுதான் நம் நாட்டின் ஒரு பாகத்தில் பூமிக்கு எஜமானர்கள் தங்களையே கதி என்று நம்பி யிருக்கும் கூலிக்காரரிடம் நடந்துகொள்ளும் முறையாகும்.

ஆனால் கூலி கிடைக்காத மாதத்திலும் அவனும் அவன் குடும்பத்தாரும் காற்றைத் தவிர, திரவமான, திடமான பதார்த்தங்களிலும் கொஞ்சம் சாப்பிட்டே தீர வேண்டும். இது இலவசமாகக் கிடைக்காதாகையால், கடன் வாங்கியே தீர வேண்டி இருக்கிறது. அதுவும் கிடைக்காத நிலைமையில் அவன் என்ன செய்வானோ என்று சொல்லுவதற்கு எனக்கு மாகாளியைப் பற்றி அவ்வளவு தெரியாது.

பிறகு, அவன் அப்படி வேலை செய்ய முடியாமலிருப்பதற்குப் பல காரணங்களுக்குள் தேக நலம் குறைவதும் ஒன்றாகும். இதில் ஒன்றை யொன்று அவலம்பித்துக் கொண்டிருக்கும் மூன்று விஷயங்கள் இருக்கின்றன.

1. தேக நலம் குறையும் போதுதான் செலவு அதிகமாகிறது.

2. செலவு அதிகமாகும் போதுதான் வருமானம் குறைகிறது.

3. வருமானம் குறைந்திருக்கும் போதுதான் தேக நலம் சீர் திருந்தும்படி அவ்வளவு செலவு செய்வதற்குப் பணம் இருப்பதில்லை.

இந்தச் சக்ரவ்யூகத்திலிருந்து விடுபட்டு வெளியேறுவ தென்பது மிகவும் கஷ்டமான காரியம்; ஆனால் பல சமயங்க ளில்லாவிட்டாலும் சில சமயங்களிலாவது இந்தச் சுழியிலகப்படாத சிரமஜீவிகள் இல்லை என்றே சொல்லிவிடலாம். விஷயம் எவ்வளவு பெரியது என்பது இந்த ஒரே உண்மையிலிருந்து விளங்கலாம் என்று நினைக்கிறேன்.

தேக நலம் படைத்தவன் சாதாரணத்தில் அதை இழப்பதில்லை என்பது உண்மையே. ஆனால் ஸ்ரமஜீவிகள் அதை இழக்கப் பல சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

1. நாற்று நடவு சமயம் என்று வைத்துக்கொள்வோம். காற்று ஜோ வென்று அடிக்கும் காலம். தண்ணீர் விரு விரு வென்றிருக்கும் காலம். வயலில் வேலை செய்பவர்கள் திறந்த உடலுடன், சில சமயங்

O911,N3BH
197904

களில் ஓடி சேற்றில் காலை வைத்துக்கொண்டு வேலை செய்ய வேண்டும். இப்படி ஒரு மாதம் கழிவதற்குள் சிலருக்குத் தேக நலம் முற்றிலும் கெட்டுப் போனால் ஆச்சரியமில்லை.

2. அறுவடை காலம். பனி கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. பகல் 12 மணிக்கு வெய்யிலில் இல்லாமல் நிழலில் இருந்தால் நிச்சயமாகக் குளிருகிறது. இந்தக் காலத்தில் காலையிலிருந்து மாலை வரையில் வேலை செய்ய வேண்டும்.

இரவில் பனி இன்னும் அதிகம். அப்பொழுது திறந்த வெளியில் களத்து நெல்லுக்குக் காவலாகப் படுத்துக்கொள்ள வேண்டும். சோறு களத்துக்கே வந்துவிட வேண்டுமே யொழிய, அதை யுண்பதற்கு வீட்டிற்குப் போக முடியாது.

இப்படி ஒரு மாதம் ஒன்றரை மாதம், இந்த நிலைமைகளில் தேக நலம் குன்றிப் போகாத ஜனங்கள் மிகவும் சந்தோஷப்பட வேண்டியவர்களே. என்றாலும் இதற்காக யாரும் குறை கூற முடியாது. இப்படியே வேலை செய்வதற்குத்தான் அவர்களுக்குக் கூலி கிடைக்கிறது. இந்த வேலை கிடைக்காவிட்டால் ஆயிரக் கணக்கான ஜனங்கள் பிழைப்புக்கு லாட்டரி யடிக்க வேண்டி யிருக்கும் என்பதையும் நாம் மறக்கலாகாது. ஆனால் அடியிற் கண்டதைப் பற்றி என்னென்பது?

மாகாளி காலைமுதல் மாலை வரையில் வேலை செய்துவிட்டு அலுத்துப் போய் வீட்டில் படுத்துக்கொண் டிருக்கிறான். நிலாக் காலம். பண்ணயத்து எஜமானர் ஆள் அனுப்புகிறார். "கமலை இறைக்க வேண்டும்!" "வேலியைப் பிடுங்கிவிட்டுக் கல் கட்டுக் கட்ட வேண்டும். அதற்குக் கல்லெடுத்துப் போட வேண்டும்," "பருத்திக் காட்டுக்களை வெட்டு" என்றெல்லாம் சொல்லி, "உடனே எழுந்து வா!" என்று உத்தரவு பிறப்பிக்கிறார். மாகாளி கிளம்புகிறான். இரவு வெகு நேரம் வரையில் வேலை செய்துவிட்டுத் தோட்டத்திலேயே படுத்துக்கொள்ளுகிறான். விடிந்ததும் மறுபடியும் எழுப்பி விடுகிறார்கள்.

இப்படி ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல, பத்துப் பதினைந்து நாள் வேலை செய் என்றாலும் செய்துதானாக வேண்டும். இதற்கென்று அதிக கூலி கிடையாது. ஆ, ஊ என்றால் அடி விழுந்தாலும் விழலாம். பேசாமல் வேலை செய்கிறான் மாகாளி.

மாகாளி கடைசியில் பார்க்கப் போனால் மனிதன்தானே? ஓய்வும் இல்லாமல், சிரமமும் அதிகமாகி, அதிக கூலி கிடைக்கிறதென்ற உற்சாகமும் இல்லாதவனாய் வேலை செய்கிறான். நோய்வாய்ப்பட்டு

கிராம ஆராய்ச்சி.

திரு. O. P. தேசிகன் அவர்கள்.

(1) கிராமங்களின் சீரழிவு.

நவீன இந்தியாவில் நம் முன் நிற்கும் முக்கியமான பிரச்சனைகளில் கிராமாந்தரங்களின் சீரழிவே இதுபோழ்து தேச நலத்தை நாடுவோரின் கவனத்தை மிகுதியும் கவர்ந்து வருகிறது. கிராம வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும்—ஒவ்வொரு பகுதியிலும்—இச் சீரழிவின் பலாபலன்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம். முக்கியமாக (1) பாசன வசதிகளின் குறைவு, (2) கால்நடைகளின் கேவலமான நிலைமை, (3) பண்ணைகளைப் பல கூறுகத் துண்டாடுவதால் ஏற்படும் தீமை, (4) மாசூல் குறை, (5) கிராமத் தொழிலாளிகளின் அநாதரவான நிலைமை, (6) ஜன நெருக்கமான விடுதிகள், (7) கல்வி வசதியின்மை, (8) வியாஜ்ய வழக்குகளின் வருக்கம், (9) கிராமவாசிகளின் ஒற்றுமைக் குறைவு போன்ற வருங் குறைகளே கிராமாந்தரங்களின் தற்காலப் பரிதாபகரமான ஸ்திதிக்குப் பெரிதும் காரணமாக யிருக்கின்றன.

நான்கு நாள், ஐந்து நாள் வேலைக்குப் போக முடிகிறதில்லை. முத்திரி வள்ளத்தில் அத்தனை வள்ளம் குறைந்த படியை வாங்கிக்கொண்டு அவன் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்.

மாகாளி இன்று தேக நலத்துடன் தளதள வென்றிருக்கிறுன். மேலே சொன்ன காரணத்தால் அடுத்த வாரம் அப்படியே இருப்பானு என்று அவனுக்குத் தெரியாது; அவனுல் சொல்ல முடியாது.

பொருளாதார நிலைமைக்கும் தேக நலத்துக்கும் உள்ள சம்மந்தத்தைப் பற்றி இதைவிட அதிகம் கூற நான் விரும்பவில்லை.

வெளிப்படையாகக் காட்சிக்குப் புலனுவதும், ஆனல் எளிதிலே அகற்றக் கூடாமலிருப்பதுமான இது போன்ற குறைப்பாடுகளின் விளைவாக கிராமாந்தரங்களின் உயிர் நிலையே ஓர்புறம் தாக்கப்பட்டு, நாளடைவில் கிராமங்க ளெல்லாம் சீர்மை குன்றி அவலமாகிக் கொண்டு வருகையில், நவீன நாகரீகத்தின் எதிர் தாக்குதலின் பயனுக கிராமவாசிகளினுடைய சமுதாய வாழ்விலும், அவர்களது முக்கிய ஜீவனோபாயமான பயிர்த் தொழிலின் வளர்ச்சியிலும் குறிப்பிடத் தக்க அபிவிருத்திகளேனும் அல்லது மாறுதல் உணர்ச்சியேனும் நமது கண்களுக்குப் புலப்படுகின்றனவா வென்பதைக் கவனித்தால் அந்தக் கலம் அடியோடு பூஜ்யம் என்றே சொல்லிவிடலாம். போக்கு வரத்து மார்க்கங்களைப் பெருக்கிக்கொள்வதிலும் சாஸ்திரீயமான புதிய முறைகளில் பயிரிடுவதிலும், அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களைத் திறமையாக விற்பனை செய்வதிலும், கல்வி யபி விருத்திக்கான சாதனங்களை யமைத்துக் கொள்ளுவதிலும், நாகரீகக் கலை யுணர்விலும் முன்னேற்ற மடைந்து வரும் பிற நாடுகளைப் போன்று நாம் முன்னேறி வருகிறேமில்லை. தொழில் பெருக்கமும் கலை வளர்ச்சியும் வெகுவாகக் குன்றிவிட்டன. அதன் பயனுக மக்க ளின் அறிவும் ஒழுக்கமும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு விட்டது. ஊக்கமும் உற்சாகமும் உள்ள வாலிபர்கள் தங்களது பொருளாதார நிலைமையை விருத்தி செய்து கொள்வதற்காகவாகிலும் தமது திறமை யையும் கல்வி யறிவையும் பயனளிக்கக் கூடிய விதமாகச் செலுத்துவ தற்காகவாவது, தற்காலத்திய கிராம வாழ்க்கை முறையானது போதிய வசதியையும், ஆக்கத்தையும் அளிக்கக்கூடியதாக இருக்கவில்லை.

ஆதலின் அறிவாளிகளும், காரிய ஊக்கமுள்ள ஒரு சிலரும் கிராமப்புறங்களினின்றும் வெளியேறி, நகர்ப்புறங்களை யாவலுடன் நாடி, ஆங்குப் பெருமிதமாகக் குடியேறி வருவது சகஜமேயாகும். கிராமாந்தரங்களிலோ கல்வி வாசனையற்றவர்களும், விசாலமான மனோ பாவம் வாய்ந்திராத பாமர ஜனங்களுமே தமது முன்னோர்கள் சென்ற தேய்ந்த பாதையிலேயே செக்கு மாடு போல் உழன்று வருகிருர்கள்.

(2) இச் சீரழிவுக்குக் காரணம் யாது?

இந்தப் பரந்த தேசத்தின் முன்னேற்றத்தையும் கைத்தொழில் அமைப்பையும், சிறு தொழில் முயற்சிகளின் வளர்ச்சியையும் தடைப் படுத்தி—முற்போக்குப் பாதையின் ஒவ்வொரு அடியிலும் நம்மை பின்னடையச் செய்யும் சமூக—ராஜீய முட்டுக்கட்டைகள் பலவுள; சாதிப் பிரிவினை, பால்ய விவாகம், ஜன சங்கியையின் பெருக்கம், அன் னிய ஆட்சி போன்ற பற்பல குறைகளை இதற்குக் காரணமாகப் பலர் குறிப்பிடுவார்களாயினும், அவை யனைத்தையும் விட தற்கால க்ஷீண தசைக்கு அதுப் பொருளாதாரச் செல்வ நிலைமையில் மிகவும் பிற்

போக்கடைந்திருப்பதே அடிப்படையான காரணம் என்று கூற வேண்டும். நவீனமான—விஞ்ஞான சாஸ்திர ரீதியான—உற்பத்தி முறைகளை மேற்கொள்ளுவதற்கு நமது நாட்டவர் அபிப்பிராய மில்லாதவர்களா யிருப்பதும், தமது கைம்முதலை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்குச் சிறிதேனும் மனமில்லாதவர்களா யிருப்பதும், இந்தியப் பொருளாதாரச் சிதைவையும் வீழ்ச்சியையும் துரிதப்படுத்தி வருகின்றன வென்று நாம் சந்தேகமின்றிக் கூற முடியும்.

தமது முப்பாட்டன் காலத்திய கருவிகளையும், கர்நாடக வழிகளையும், பழங்கால உற்பத்தி முறைகளையுமே இன்றும் பயன்படுத்திவரும் இந்திய விவசாயிகளும், தொழிலாளிகளும், நவீன யந்திர சாதனங்களின் உதவியைக் கொண்டு, கோடிக் கணக்கான முதலால் ஆக்கமளிக்கப் பெற்று, தேசிய கவர்ன்மெண்டுகளின் பலத்த ஆதரவையும் பெற்றனவாக இறுமாந்திருக்கும் அமெரிக்க, ஜப்பான் முதலிய தேசங்களால்—நவீன யந்திர சாதனங்களின் சகாயத்தால்—உற்பத்தி செய்து குவிக்கப்படும் சரக்குகளுடன் போட்டி போட வேண்டியிருக்கிறது. உள் நாட்டு வியாபாரத்திலும்கூட இந்திய விவசாயிகளும், வர்த்தக முதலாளிகளும் ஒவ்வொரு நாளும் தமது ஸ்தானத்தை யிழந்து வருவது பிரத்தியட்சமாகி விட்டது. புதியதோர் தோரணையில் அடியோடு மாற்றப்பட்டாலன்றி நமது தொழிலாளிகளுக்குப் பிரதிப் பிரயோஜனமளிக்கும் பழைய ஏற்பாடு இனி உருப்படுவதற்கில்லை. அம்முறை அடியோடு சிதைந்து, குலைந்துபோய் விட்டது. விவசாயத் தொழிலும் வெகு தூரம் பின் தாங்கி, காலாகாலத்தில் மழை பெய்யாக் குறையாலும், மற்றும் பல்வேறு புறத் தூண்டுதல்களின் காரணமாகவும் பலத்த அதிர்ச்சியை யடைந்து விட்டது. அன்றியும் அது நாற்புறங்களிலும் பலத்த போட்டியினால் கடுமையாகத் தாக்கப்படுகிறது. ஸயாம் நாட்டரிசியுடன், உள் நாட்டு அரிசி போட்டி போட்டு அதைச் சமாளிக்கக் கூடாமலிருப்பதே இதை ருசுப்படுத்தும்.

பயிரிடுவதற்கு இலாயக்கான தரிசு நிலங்களில் 100-க்கு 44/- விகிதம் (சதமானம்) சென்ற 1920–21ம் ஆண்டில் பயிர் செய்வாரின்றி தரிசாகவே கிடந்தது. அவ்வாறு பயிரிடப்பட்டாலும் நூற்றுக்கு 6 விகிதமுள்ள பூமியிலேயே ஒன்றுக்கு மேற்பட்ட பயிர் வகைகள் உற்பத்தி செய்யப்பட்டன. பயிர் செய்யப்படும் விஸ்தீரணத்திலும், நல்ல வெள்ளாமை கிடைக்கக் கூடிய விதமாகத் திறமையுடன் பயிரிடப்படுகிறதில்லை. உலகத்தின் விளை பொருள்களின் உற்பத்தியைச் சராசரியாகக் கணக்கிட்டுப் பார்த்தால், இந்தியாவின் மொத்த உற்பத்தி 100-க்கு 85/- விகிதமிருப்பதாகக் கூறப்படுகின்றதாயினும், உற்பத்தி விகிதத்தையும் திறமையையும் உத்தேசிக்கையில் விளை

பொருள்களை யுற்பத்தி செய்யும் நாடுகளில் நமது தேசம் 22-வது ஸ்தானத்தையே வகித்து வருகிறது. அன்றியும் இந் நாட்டில் உற்பத்தியாகும் விளை பொருள்களனைத்தும், அப்படியே "மூலப் பொருள்களாகவே" பிற நாடுகளுக்கு உடனுக்குடன் ஏற்றுமதியாவதையும், இந்தியா முழுவதிலும் நடைபெறக்கூடிய ஏனைய மாகூல்களும், காட்டு விளைபொருள்களும், கனிஜ வஸ்துக்களும் போன்ற பொருளாதார மூலங்களையும் செல்வ வளங்களையும் சுரண்டி யெடுப்பதற்குப் பாதியளவிற்குக்கூட யாதொரு உண்மையான முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படாததையும் கவனிக்கும்போது—இவ் வுலகத்திலே நீடூழியாக நிலைபெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கும் நாடுகளிலே—நமது தேசம் மாத்திரம் ஏன் இவ்வளவு ஏழ்மையான ஸ்திதியி லிருக்க வேண்டுமென்றும், அதனுடைய கோடிக் கணக்கான மக்கள்—உழைப்பும் புத்திக் கூர்மையும் வாய்ந்த ஜனத் திரள்கள் அரை வயிற்றுக்கும் ஆகாரமில்லாத பயங்கரமான வறுமையில் வருந்திக் காலங் கடத்தி வரவேண்டி யிருப்பதற்கும் காரணங்களைக் கூறவேண்டியதில்லை.

(3) கைத்தொழிலே கதிமோக்ஷமளிக்க வல்லது

நமது நாட்டினரின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதார வருவாயையும்—முடிவாக தேசீயச் செல்வ நிலைமையையும் உயர்த்தி, நமது தேசத்தை மற்ற நாடுகளின் அளவிற்கு மேனிலைக்குக் கொண்டு வரவேண்டுமாயின், விஸ்தீர்ணத்தில் மிகப் பரந்ததாகவுள்ள இந்த தேசத்தின் கைத்தொழில்களைப் புனருத்தாரணம் செய்வதன் மூலமாகவே அது ஒருவாறு சாத்தியமாகும்.

அஃதொன்றுதான் இந்தியாவின் ஜீவாதாரமான பிரச்னைக்கு உயிரளிக்கக் கூடியதாகும். கிராமாந்தரங்களின் க்ஷேமாபிவிருத்திக்கும் பொருளாதார மேன்மைக்கும் அடிப்படையானதும் மக்களில் நூற்றுக்கு எண்பதுக்கு மேற்பட்டவர்களின் முக்கிய ஜீவனோபாயமாகவுள்ளதுமான கிருஷித் தொழிலில் புதிய மாதிரியான அபிவிருத்தி முறைகளையும், உற்பத்தியைப் பன்மடங்காக அதிகரிக்கக் கூடிய சாஸ்திரீய சாதனங்களையும் உட்புகுத்துவதனல் மாத்திரமே தற்கால நிலைமையை ஒருவாறு பரிகரிக்க முடியும். மிகவும் உறுதியான கைத்தொழிலமைப்பாகிய அஸ்திவாரத்தின் மீதே பலம் பொருந்தியதும் நாளுக்கு நாள் வளர்ச்சியடையக் கூடியதுமான தேசீய வாழ்க்கை (சமுதாயம்) என்னும் கட்டிடத்தை யெழுப்புவது சாத்தியப்படுமென்பதை நாம் நினைப்பில் வைக்கவேண்டும்.

நவீனமான தொழில் முயற்சிகள் பல ஏற்கனவே நமது தேசத்தில் வேரூன்றி ஓரளவு வெற்றியடைந்திருப்பதையும் அப்படிப்பட்ட துறைகளி லீடுபட்டிருப்பவர்களில் அநேகர் வர்த்தக உலகில் கீர்த்தி

பெற்றுச் சீமான்களாக விளங்குவதையும் கவனிக்குங்கால் இந்தியக் கைத்தொழில்களின் எதிர்கால முன்னேற்றத்தைக் குறித்து யாதொரு ஐயமுமிருப்பதற்கில்லை. இந்த இனத்தில் இந்தியாவின் வருங்காலம் மிக்கப் பிரகாசம் பொருந்தியதாகவே காணப்படுகிறது. ஆனால் பருத்தியாலைகளைத் தவிர ஏனைய துறைகளில் அதனுடைய எதிர் தாக்குதல் அவ்வளவு விசேஷமாக வெளிப்படவில்லை.

(4) கைத்தொழில் புனருத்தாரணம் எவ்வகையில் உருப்படுத்தப்படவேண்டும்?

பிரம்மாண்டமான கைத்தொழில் முயற்சிகளும் தொழிற்சாலைகளும் கணக்கின்றி—ஓர் வரையறையின்றிப் பெருகிவருவதும், யந்திர உலகின் ஆதிக்கமும் தெய்வீக வரப்பிரசாதமென்றும், அதனால் யாதொரு தீமைக்கும் இடமில்லையென்றும் கூறுவது நமது உட்கருத்தன்று. உசிதாவுசிதமின்றி, ஓர் அளவின்றி, தேவைக்கு அதிகமாக யந்திர சாதனங்களைக் கையாண்டு வருவதால் அளவற்ற தீமைகளே பல்கிப் பெருகி வருவதைத் தொழில் முன்னேற்றமடைந்திருக்கும் மேனாடுகள் ஒன்றோடொன்று வியாபாரப் போட்டியிலீடுபட்டு, மார்க்கெட்டுகளில் தங்களுடைய சரக்குகளைக் குவித்து, தம் நாட்டைப் பொறுத்தவரையில் காப்பு வரிகளை விதித்துப் பிறநாடுகளுடன் விரோத உணர்ச்சியை வளர்த்து வருவதையும், தேவைக் கதிகமான சரக்குகளை உற்பத்தி செய்தும் ஜனங்களின் வாங்கும் சக்தி உலகப் பொருளாதார மந்தத்தினால் வெகுவாகக் குறைந்துவிட்டதன் பயனாக, நாளுக்கு நாள் பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துக்கொண்டே வருவதையும் ஊன்றிக் கவனித்தவர்கள் நன்கறிவார்கள். பண்டைக் காலந்தொட்டு நமது சமூக—அரசியல் வாழ்வில் கிராமாந்தரப் பிரதேசங்கள் ஓர் தனிப்பட்ட அந்தஸ்தை வகித்து வந்திருக்கின்றன. சமூக—ராஜீய விவகாரங்களில் கிராமங்கள் பூரா அளவிற்கும் சுயாதீனம் பெற்று—சுய நிர்ணய சுதந்திரம் வாய்ந்த சிறு குடியரசுகளாகவே விளங்கி வந்திருக்கின்றன. அவற்றின் தனித் தன்மையையும், சிறப்பியல்களையும் அரசாட்சிச் சக்கரம் உருண்டு உருண்டு எத்தனையோ கைகளை மாறினும்—எத்தனையோ அரசாங்கங்கள் தோன்றி, ஏற்றமடைந்து, நாளடைவில் வீழ்ச்சியுற்றனவாயினும்—உறுதியான அஸ்திவாரத்தின் மீது எழுப்பப்பட்ட கிராம அமைப்பை அவைகள் சிறிதேனும் பாதிக்கவில்லை. இவ்வளவு மாறுதல்களையும், புரட்சிகளையும் பூர்வீகக் கிராம அமைப்பானது தனது முக்கியமான அம்சங்களில் யாதொரு புரட்சிகரமான மாறுதல்களுக்கும் இடந் தராது ஈடு கொடுத்தே வந்துள்ளது இந்தியாவின் கதிமோக்ஷமே அதற்கு இயற்கையாகவுள்ள முறைகளில் உருப்படுத்தப்பட வேண்டுமேயன்றி, இந் நாட்டின் பழக்க வழக்கங்களுக்கு

முற்றிலும் மாறுனதாகவுள்ளப் புறச் சக்திகளால் உருவகப்படுத்தக் கூடுமென்று நினைப்பதும் தவறுகும். இந்தியப் புனருத்தாரணத் திற்கு ஓர் முடிவு காணவேண்டுமேயாகில், அத்தகைய முடிவானது இத் தேசத்தின் பண்டை நாகரீக வாழ்க்கைக்கும், பழக்க வழக்கங் களுக்கும், தேசிய அபிலாஷைகளுக்கும் முற்றிலும் இயைந்ததான அதனுடைய பழமையான அமைப்புகளைத் தழுவியதான வழிகளில் இருக்கவேண்டுவது இன்றியமையாததாகும். இந்தியாவின் சமூக—ராஜீய அந்தஸ்தை உயர்த்துவதன் பொருட்டு உழைப்பவர்கள் அனை வரும் இந்த முக்கியமான அமிசங்களைக் கருத்திலிறுத்தி, அந்த நோக்கத்திற்குப் புறம்பாகவுள்ள யோசனைகளையும் திட்டங்களையும் உதறித் தள்ளவேண்டும்.

(5) கிராம ஆராய்ச்சியும் அதன் ஆவசியகமும்

இத்தகைய இலட்சியங்களை அடிப்படையானதாகக் கொண்டுள்ள ஓர் திட்டத்தினுல்தான் இந்தியாவின் பழமையான நாகரீகத்திற்கும், கலையுணர்வுக்குப் பொருந்துவதான கைத்தொழில் திட்டமொன்றைத் தயாரிப்பதும் அதன் மூலமாக நமது தேசத்தின் ராஜீய அபிவிருத் தியையும், சமூக முன்னேற்றத்தையும் நாடுவது சுலப சாத்தியமாகும்.

மேற்கூறிய உத்தேசங்களை முக்கிய அமிசமாகக் கொண்டிருக்கும் எந்த ஒரு திட்டத்தையும் மேற்கொள்ளுவோமேயாகில், அதுகாலை அடியிற்கண்ட முக்கியமான கேள்விகள் தாமாக எழுவது புலனுகாமற் போகாது. அவை முறையே:—

(1) கிராமாந்தரங்களுக்குச் சிரேஷ்டமாகவுள்ள அமிசங்கள் யாவை?

(2) அந்த அமைப்பு எவ்வாறு சிதறுண்டு சீர்கேடுற்றது?

(3) அந்தச் சீர்கேட்டிற்கு முக்கிய காரணங்கள் யாது?

(4) தற்பொழுது நிலைபெற்றிருக்கும் எந்தெந்த ஸ்தாபனங் களின் வாயிலாக—நவீன சாஸ்திர ஆராய்ச்சி முடிபுகளையும் உட் செலுத்துவதன் காரணமாக—ஜன சமூகத்தின் கைத்தொழில், ராஜீய சமூக பழக்க வழக்கங்களுக்குப் புத்துயிரையும், ஆக்கத்தையுமளித்து, மக்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்விக்கக்கூடும்?

(5) மக்களுக்கு எந்த விதமான வழிகளில் விழிப்பூட்டி அவர் களது உழைப்பையும், அறிவு வளர்ச்சியையும் அதிகரிக்கச் செய்ய லாகும்?

இதுபோன்ற பிரச்னைகளுக்குக் கிராமாந்தரங்களின் தற்கால நிலைமையைக் கூர்ந்து ஆராய்ச்சி செய்தாலல்லது பதில் கூறுவது

லீலாவதி.

(சிறு கதை.)

திரு. S. K. சாமி அவர்கள்.

அது ஒரு நல்ல நாளோ, தீய தினமோ என்று வரையறுத்துக் கூற எவராலும் இயலாது. இராஜபுத்திர கன்னிகையாகிய லீலாவதி என்னும் அந்தமில் அழகி அக்பர் அரசனின் அரண்மனையை அலங்கரிக்க இசைந்த தினம் அந் நாளே யென்று எளிதில் இயம்பலாம்.

எளிதன்று. வியாதிகளின் கூறுகளை நிதானித் தறிவதுபோன்று, கிராமப் புனருத்தாரணத்துக்கு அடிகோலு முன்னதாக, கிராமாந்தரங்களின் நிலைமையினைக் குறித்து விரிவானதோர் ஆராய்ச்சி செய்வது முற்றிலும் இன்றியமையாததாகும். இத்தகைய விரிவான ஆராய்ச்சியில் (Rural Survey) கிராமங்களின் (1) நிலவளம் (2) குடிகளின் தற்கால ஸ்திதி, (3) கைத்தொழிலமைப்பு, (4) ராஜீய உணர்வு, (5) சமூக ஸ்தாபனங்கள் ஆகிய ஒவ்வொரு அங்கமும் அதற்குரிய கவனத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

முடிவுரை

மேலே குறிப்பிட்ட பலதரப்பட்ட அங்கங்களைத் தன்னுள் அடக்கிய ஆராய்ச்சி யொன்றுக்கு அங்குரார்ப்பணம் செய்யுங்கால், அவ் வாராய்ச்சியானது ஜன சமுதாயத்தின் வாழ்க்கை யியல்கள் ஒவ்வொன்றோடும் நெருங்கிய சம்பந்தம் பெற்றிருப்பதையும், அதன் வாயிலாகப் பொருளாதார சாஸ்திர ரீதியாக மட்டுமேயன்றி, சமூக சாஸ்திர ரீதியாகவும் ஓர் முடிவு காணக் கூடுமென்றும், அம் முடிவை யனுசரித்ததான தேசீயப் புனருத்தாரணத் திட்டமொன்றே இந் நாட்டின் பற்பல சிக்கலான பிரச்னைகளையும் தீர்க்க வல்லதென்றும் நாம் துணிந்து கூறலாம். தேச நலத்தில் நாட்டமுள்ள வாலிபர்கள்—எதிர்கால இந்தியாவின் தலைவர்களாக விளங்கப்போகும் வாலிப வித்துக்கள் இவ் வாராய்ச்சியில் ஈடுபடுவார்களாக! வந்தே மாதரம்!

மாலை வேளை. பகலவன் மலையில் மறைகிறான். பச்சை, சிவப்பு, மஞ்சள் முதலிய பல நிறங்கள் படைத்த அழகிய மேகங்கள் ஆகாய வெளியில் அதிவேகமாய்ப் போவது கண்ணைக் கவரும் காட்சி. நகர வீதிகளில் பலவித அழகிய தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. எங்கு நோக்கினும் இயற்கை இன்பமும் செயற்கை இன்பமும் கலந்து இலங்குவதாகவே காணப்பட்டன. இராஜபுத்திர கன்னிகையாகிய லீலாவதியை அக்பர் மன்னனின் அந்தப்புரப் பெண்கள் வரவேற்கும் ஆனந்தக் காட்சியைக் கண்டு களிக்கத் திங்களும் ஒளி பொருந்திய பைங்கதிர்களைப் பரப்பிக்கொண்டே மெல்ல வானில் தோன்றினன் பொன்னைப் பழிக்கும் புனித நிறம் படைத்த இளம் நங்கை லீலாவதியை அரசனின் பள்ளியறையில் விடுத்துப் பாங்கியர்களும் பிரிந்தனர். காரிகையின் வயது பதினெட்டு. நல்ல உடற்கட்டு. கண்டோர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நங்கையர் திலகம் தன்னந் தனியே படுக்கையறையில் அங்குமிங்கும் உலாவிக்கொண் டிருந்தாள். பலவித எண்ணங்கள் அவள் இதயத்தில் தோன்றின. ஆகாயத்தில் தோன்றிய 'சந்திர மாமா'வும் தனது தண்ணிய கதிர்களால் கடல் சூழ் பெருநில ஞாலத்தை இயற்கைப் படைப்பாக்கி நின்றனன். பகற்பொழுது கொடிய வெயிலினல் வெதும்பிய மக்கள், மாக்கள், புல்பூண்டுகள், செடி கொடிகள் முதலிய சகல சீவராசிகளும் திங்களின் பைங்கதிர் கண்டு இன்புற்றன. இவ்வாறு இயற்கை இன்பம் பொழியும் இந்து மதியும் இராஜபுத்திர மங்கையை விட்டுப் பிரிய நேர்ந்தது.

பேரானந்தத்திலும் பெருந் துக்கத்திலும் வேற்றுமையின்றி விளங்குகின்ற மனோ நிலையுடையா ளென்பதை அம் மாது சிரோன் மணியின் சுந்தர வதனம் விளக்கிற்று. நமது கதாநாயகியை நித்திரா தேவி அணுகவில்லை. எண்ணில் கோடி எண்ணங்கள் காரிகையின் இதய மண்டலத்தில் மினனல்போலத் தோன்றுவதும் மறைவதுமாயிருந்தன. ஆனல், ஏதோ ஓர் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருப்பவள்போலக் காணப்பட்டாள். உலக நன்மையைக் கருதி உயிர்துறக்கும் வீரம் செறிந்த இராஜபுத்திர மரபைச் சார்ந்த வனிதையின் மனோநிலைமைக்கு மாறுபட்ட மணவாளனையடைய நேர்ந்த வியாகுலமோ, அன்றி தாய் நாட்டின் நன்மையை நாடி இதந் தரும் இல் வாழ்வைத் தூவென்று நீத்தது முற்றிலும் சரி என்ற உயரிய மனப்பான்மையோ அணங்கின் நெஞ்சத்தைச் சஞ்சலப்படுத்தியது என்று எவராலும் எளிதில் இயம்பல் இயலாது. மணம் என்பது காதலரிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே யாமன்றோ? இரும்பும் காந்தமும் பொருந்தும் தன்மைபோல் இருவர் சிந்தையும் இயல்பாயுருகி ஒன்றும் தன்மையேயன்றி ஒருவரால் ஆக்கப்படும் பொருளாமோ காதல்? அல்லது அழிக்கப்படும் பொருளாமோ?

அறையின் நடுவே ஒளி பொருந்திய அணி விளக்கொன்று எரிந்துகொண் டிருக்கின்றது. பலவித அழகிய படங்கள் சுவர்களில் மாட்டப்பட் டிருக்கின்றன. இரண்டு பெரிய நிலைக் கண்ணுடிகள் வைக்கப்பட் டிருக்கின்றன. அழகிய மஞ்சம், அதன் நடுவே ரதியைப்போல் கோதை தாழ பங்கயத்தை மற்ருேர் பங்கயத்துடன் வைத்த பான்மைபோல் வீற்றிருக்கும் லீலாவதியின் விரிசோதியின் கண், விளக்கினெளி மறைந்தே யிலங்கியது. இவ் வேளையில் மெதுவாக அறைக்குள் அக்பர் மன்னன் பிரவேசித்தான். நெடுநாளாகப் பேராவல் கொண்ட பெருந்தனம் கிட்டியதை யொத்த பேரானந்தத்துடன் கட்டழகியின் அண்மையிலமர்ந்து பெருமூச்சு விட்டு இவ்வாறு கூறினன்: "பெண் பாவாய்! இன்றுதான் எனது ஜீவித லட்சியத்தைப் பெற்றேன். என் மனமானது உனக்காக எவ்வாறு துடிதுடித்துக்கொண் டிருக்கின்றதென்பதும், இரவிலும் பகலிலும், கனவிலும் நனவிலும் நான் உன்னையே நினைந்து உருகுகிறேன் என்பதும் நீ அறிந்ததே. நீயே எனது வாழ்க்கைத் துணைவி; என் ஆருயிர் நாம் இன்பமா யிருப்போமாக" என்று பெருமூச்சு பின்னும் விட்டான்.

லீலாவதி: "அரசே! தங்களது புகழுரைகளுக்காக வருந்துகின்றேன். நான் தங்களது அடிமையன்ருே?"

இப் பதிலைக் கேட்டு எல்லையில்லா இன்பம் எய்திய அரசன் சற்று நேரம் உலகத்தையே மறந்தானென்று கூறின் தவருகாது.

பெண்மணியின் பேரெழிலிலும், நற்குண நற்செய்கைகளிலும் ஈடுபட்டு இன்பமெய்திய அக்பர் மன்னன் வேறு அந்தப்புரப் பெண்களை அடியோடு மறந்தனன் என்று கூறவும் வேண்டுமோ? சதா சர்வ காலம் லீலாவதியுடன் உறவாடி மகிழ்வதிலேயே காலம் கடத்தி வந்தானென்று சொல்லத் தேவையில்லை. அந்தப்புரக் கன்னியர்கள் அனைவரும் தங்களுக்கு நேர்ந்த இந்தச் சோர்ந்த நிலைமையைச் சிந்தித்துச் சந்ததமும் வருந்தியதோடு நில்லாமல், இதற்கு ஏதுவாகிய லீலாவதிக்கும் அரசனுக்கும் நீங்காப் பகைமை உண்டாக்க வேண்டுமென்றும் தீர்மானம் கொண்டு அதற்காக அல்லும் பகலும் அனவரதமும் உழைக்க அன்று முதல் ஆரம்பித்தார்கள். இராஜபுத்திர மங்கையின்பால் கொண்ட கோபத்தை வெளிக்குக் காட்டுவதற்கும் வழியில்லை. ஆனல் அரசனுக்கும் லீலாவதிக்கும் இடையே வெறுப்புணர்த்தும் விபரீதமொன்றைக் கிளப்பிவிட வேண்டுமென்ற கேவலமான எண்ணம் வேருன்றி, நல்ல சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு நெடுநாள்கள் சென்றன.

தன்னுடன் லீலாவதி, வசந்தா என்னும் தோழி யொருவளை அழைத்துக்கொண்டு வந்திருந்தாள். அரசன் இல்லாத காலங்களில் அத் தோழியுடன் இன்பமாக நேரம் போக்குவது லீலாவின் வழக்க மாகும். வசந்தாவின் இன்பக் குரலும், அபார சங்கீத வன்மையும், வீணை வாசிப்புத் திறமையும், லீலாவுக்கு இன்பம் நல்கியது. வேறு பெண்களுடன் வம்பளக்கும் வாடிக்கை யில்லாத லீலாவதி, தன்னை விட்டு அரசன் அகன்ற வேளையில் வசந்தாவுடன் பொழுது போக்கு வதும், ஆடல் பாடலில் ஆனந்தம் கொள்வதும் அந்தப்புரப் பெண் களுக்கு ஏதோ ஓர் எண்ணத்தைத் தோன்றச் செய்தது. மன்ன னின் மாண்பைப் பெற்ற மாதின் நட்புக்குரிய வசந்தாவின் நடபடிக் கைகளை யெல்லாம் அந்தரங்கமாகக் கவனித்து வந்தார்கள். கோபு ரத்தில் ஏறுகின்ற குரங்குக்கு ஏணி கிட்டியதைப்போலவே, வசந் தாவைப்பற்றிய செய்தியொன்று அவர்கள் நீண்டநாள் கொண்ட எண்ணத்தை ஈடேற்றுவதற்குப் பெரும் உதவியாயிருந்தது. வசந்தா உண்மையில் ஓர் பெண்ணல்ல வென்றும், பெண் வேடம் புனைந்த கள்ளக் காதலன் என்றும் அரசனிடம் நயமாகக் கூறின் தங்கள் எண்ணம் நிறைவேறுமென்று கருதினார்கள்.

மன்னவனிடம் இவ் விஷயம் வெகு நயமாக அறிவிக்கப்பட்ட தெனினும், ஆதியில் அரசன் நம்பிக்கை கொள்ளவில்லை. நாளடை வில் 'எறும்பூரக் கல்லும் தேயும்' என்ற சொல்லுக்கேற்பச் சந்தேக அணுக்கள் அக்பரின் இதயத்தில் தோன்றின. வெகுநாள் அரசன் இவ் வெண்ணத்தை வெளிக்காட்டவே யில்லை. ஒருநாள் திடீரென்று அக்பர், லீலாவின் அந்தரங்க அறையில் புகுந்ததும் அங்கு அவர் கண்ட காக்ஷி அன்னார் கொண்ட சந்தேக அணுக்களை நெருக்கச் செய்தது. அரசனின் வருகையை யுணராது, லீலாவதி வசந்தா வின் பக்கத்திலமர்ந்து, இன்னிசைக் கீதத்தி லீடுபட்டு மதிமயங்கி ஆனந்த லகிரியி லாழ்த்தப்பட் டிருந்தாள். அக்பர் அங்கு வந்து சற்று நேரமாயினும், இருவரும் கவனிக்கவில்லை. சங்கீத இன்பம் கண்ணை மறைத்ததுபோலும். அரசன் மனம் பதைத்தது. பல் வேறு எண்ணங்கள் 'குபீர் குபீர்' என்று தோன்றின. கோபக் குறியை மறைக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

காரிகையின் அண்மையில் சென்றதும், அரசனைக் கண்ணுற்ற லீலாவதி மிகவும் மரியாதையுடன் எழுந்து அரசன் வந்ததை உண் மையில் காணவில்லை யென்றும், அறியாது செய்த பிழைக்காக மன் னிக்கவேண்டு மென்றும் மன்றாடினாள். அரசன் லீலாவதியை நோக்கி இவ்வாறு மொழிந்தான்: "எனது வரவை நீ வெறுக்கின்றாய் போலும். மேலும் என்னுடன் நேரம் போக்குவதைவிட வசந்தா

வுடன் பொழுது போக்குவதில் நீ அதிக ஆனந்தமடைகின்ருய் என்பதை அறிந்தேன்.”

லீலாவதி: “பிராண நாதா! தங்கள் சொல் என் நெஞ்சைப் பிளக்கின்றது. அரசியல் விஷயங்களில் ஈடுபட்டிருக்கும் தங்களுக்குப் பொழுது போக்குவதற்கு வேறு வழி தேவையில்லாமலிருக்கலாம். மேலும் தாங்கள் நகர சோதனைக்கேகிப் பல்வேறு மக்களுடன் பழக இடமுண்டு. பெண்மக்களின் கதி—அதிலும் என் போன்ற அந்தப்புரப் பெண்களின் கதி இரங்கத்தக்கதன்ருே? எப்பொழுதும் அந்தப்புரத்திலேயே அடைபட்டிருக்க வேண்டுமல்லவா? ஆகவே தாங்கள் இல்லாத வேளையில் வசந்தாவைப் பாடச்செய்து கேட்டு ஆனந்தம் கொள்வதேயல்லாது வேறென்ன தவறு அடியாள் செய்தேன்? பிரிய பதியே! ஏன் இவ்விதம் கடுஞ்சொல் புகன்றீர்கள்?”

இவ்வாறு கூறி முடித்து இரக்கத்துடன் அக்பரின் வதனத்தை நோக்கிக்கொண்டேயிருந்தாளெனினும், மறுமொழியொன்றும் புகலாது அரசன அறையை விட்டு அகன்றனன்.

வசந்தாவை அரண்மனையை விட்டு அகற்ற வேண்டுமென்று அரசன் கூறியதைப் பங்கமில் குணத்து நங்கை லீலாவதி மறுத்துரைத்தது, மன்னவன் கொண்ட சந்தேகத்தை உரம் செய்ததென்று உரைக்கவும் வேண்டுமோ? சந்தேக எண்ணமுடன் நோக்கிய சக்கிரவர்த்திக்கு எல்லாம் சந்தேகமாகவே தோற்றிற்று. நந்தவனமெங்கும் நல்லொளியும், நன்மணமும் பரப்பும் கற்பக மலரின் அந்திய காலம் அண்மியது நாள் ஆக ஆக அரசனின் உள்ளம் பெரும் சந்தேகங்களால் பீடிக்கப்பட்டது. பளிங்குபோல் களங்கமற்ற உள்ளம் படைத்த இப் பாவை யாதொன்றும் அறியாள். லீலாவதியின் அந்தமில் அழகை எண்ணி எண்ணி ஏக்கமுற்ருன். அவளது நடவடிக்கையை வெறுத்தான். யாது செய்வதென ஏங்கிஞன். லீலாவதி, குற்றமற்றவளென்று ஓர் தோற்றம். பின்னும் சந்தேகம். பலமுறை யோசித்தான். லீலாவதியைக் குறித்த எண்ணமே அரசனை உள்ளும் புறமுமாக உருக்கியது. தன் காதலுக்கெதிரியான கபட எண்ணம் கொண்டு வாழ்ந்து வந்த வசந்தாவை நமனுலகுக்கு அனுப்புவது என்ற எண்ணம் குடிகொண்டது. அளவற்ற அன்புகொண்டு இதுகாறும் நேசித்துவந்த லீலாவதி, தன்னை ஏமாற்றிவிட்டாளே யென்று எண்ணி எண்ணி அரசனின் நெஞ்சம் குமுறியது. மனம் பதைபதைத்தது. ‘நாரியரை நம்பாதே’ என்பது முற்றிலும் சரியாகிவிட்டதே என்றும் நினைத்தான். “உண்மைக் காதலுக்கு உலகத்தில் இடமில்லையோ? அந்தோ!” என்று வாய் விட்டுக் கதறிஞன். வெகுநேரம் மௌனமாயிருந்தான்.

திடீரென்று பைத்தியம் பிடித்தவன் போல எழுந்திருந்து அதி விரைவாக நடந்து லீலாவதியின் அறைக்குச் சென்றான். விஷயத்தை காரிகையிடம் அறிவித்து விடுவதே ஏற்றதென்ற ஏக எண்ணமே அக்பர் அரசனைத் தூண்டியது. லீலாவதியும், வசந்தாவும் வீணை வாசிப்பதிலும் பாடுவதிலும் பொழுது போக்குவதை மறுமுறையும் கண்ணுற்ற மன்னவனின் மனம் என்னபாடு பட்டிருக்குமென்பதை வாசகர்களே யூகித்துப் பாருங்கள். கண்களிலிருந்து தீப் பொறிகள் பறந்தன. இராஜ புத்திர இள நங்கையைப் பொடிப்ப நோக்கிப் படபட வென்று இவ்வாறு கூறினான்: "ஹே! லீலா, வெகு நாளாகப் பிறரை ஏமாற்றலா மென்று எண்ணாதே. கள்ளக் காதலனை மாறு வேடத்துடன் அண்மையில் வைத்து எக் காலமும் இன்புறலா மென்று நினைத்த நின் புன்மதியின் தன்மைதான் என்னே! கற்பு என்னும் பொற்பின் புகழுக்குப் பூஷணமா யிலங்கும் இராஜபுத்திர மரபுக்கே, தீராப் பழியையும் அழியா அபகீர்த்தியையும் தோன்றச் செய்தாய்!"

பின்னர் அனலெழும்பும் தன் கண்களை வசந்தாவின் எதிரே செலுத்தியதும், வசந்தாவின் மேனி 'கிடு கிடு' என்று ஆடியது. தீயுமிழ்கின்ற அரசனின் கண்களை கண்ணுற்ற வசந்தா கதிகலங்கி மன்னவனைப் பணிந்து தனது பெண்ணுடையை நீக்கி இடையிடையே பதறிச் சிதறிய குரலில் இவ்வாறு மொழிந்தான்.

"அரசே! அடிமையை மன்னித்தருள வேண்டும். நானே குற்றவாளி. இந்திரபுரி சிற்றரசனான உருத்திரசிங்கனின் ஏக புதல்வியான லீலாவதியைத், தங்கள் சமூகத்திற்குக் கப்பம் செலுத்தும் பிரதாபசிங்கனின் புதல்வனாகிய அடியேன் காதலித்து வந்தேன். எனது பெயர் வசந்தன் தாங்கள் லீலாவதியை மணம் செய்து தரவேண்டு மென்றும், இன்றேல் படை யெடுக்கப்படும் என்றும் ஓலை யனுப்பியதும் உருத்திரசிங்கன், புதல்வியிடம் அறிவித்தான். தேச நன்மைக்காக இல்வாழ்வைத் தியாகம் செய்வதென உறுதி பூண்டு இசைந்தனள். ஆகவே இந்த ஜன்மத்தில் உண்மைக் காதல் கொண்ட உத்தமியை அடைய முடியவில்லை யெனினும், அன்னவளுக்கு அடிமை வேலை புரிந்தாவது அவளுடன் பழகி வாழ்நாளைப் போக்கலாமென்று கருதியே இவ் வேலைக்குத் துணிந்தேன். இவ் வுத்தமியின் சங்கீத ஞானம் எனக்கு உதவி யளித்தது. இதுகாறும் நான் பெண் என்றே இவ் வுத்தமி நம்பி யிருந்தாள். ஆகவே அம் மாது சிரோன்மணியின் மேல் அணுவளவேனும் குற்றமில்லை யென்பது முக்காலும் சத்தியம். நானே கொடும் பாவி—கொலையாளி—மகா பாதகன். எனது ஆவியை இதோ தங்கள் வாளுக்கு இரையாக்கு

கிறேன்" என்று கூறி முடித்து, அரசன் கரத்தில் ஏந்தி யிருக்கும் ஒளி வீசும் வாளின் அடியில் சிரத்தை நீட்டினுன்.

அக்பரின் தலை சுற்ற ஆரம்பித்தது. கல் சிலை போல அசை வற்றுக் காணப்பட்டான். இக்கணம் லீலாவதியின் மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்று கூற எவராலும் இயலாது. பைத்தியம் பிடித்தவள் போல அரசன் காணப்பட்டான். அரசனை அங்கு காண வில்லை. வசந்தனும் மறைந்தான்.

மூர்ச்சையுற்று நிலத்தில் கிடந்த இராஜபுத்திர அணங்கு, சற்று நேரம் கழிந்த பின்னர் எழுந்து நோக்கினள். குபீர் குபீர் என்று தீப்பற்றி எரிவது போல உள்ளத்தில் ஒருவித உணர்ச்சி தோன்றியது. உண்மையில் தான் குற்றமற்றவள். எனினும் நிரூபிப்ப தெப்படி என்று நினைந்து நினைந்து ஒரு வழியும் காணுது திகைத்தாள். உள்ளும் புறமுமாக உருகினள், கதறினள், பதறினள்...... ....இரு நயனங்களிலிருந்தும் நீர்த் துளிகள் பெருகின. உயிர் துறக்க நேரிடினும் உண்மையை மறைக்க ஒரு பொழுதும் இசையாத உள்ளம் படைத்த சுத்த வீரர் செறிந்த இராஜபுத்திர மரபின் தூய்மை, லீலாவதியின் உடலை அப்படியே நடுங்கச் செய்தது. என்ன செய்வதென்று தோன்றவில்லை. மானமிழந்தபின் மரிப்பதே சாலவும் நன்றென்று தீர்மானித்தாள். இயற்கை தேவியை வணங்கினுள். தாய்நாட்டின் நன்மையைக் கருதி இதந்தரும் இல்வாழ்க்கையைத் தியாகம் செய்த வீரப் பெண்மணிக்கா, இக் கதி நேர வேண்டும்! அந்தோ, பரிதாபம்! பரிதாபம்!!

லீலாவதியின் வதனத் தோற்றம் மாறியது. ஓர் ஜோதி தோன்றி மறைந்து தனது கச்சத்தில் மறைத்து வைத்திருந்த கத்தியை கையிலெடுத்து நோக்கினள். "ஹே, கட்கமே! நீயே எனது உண்மை நண்பன். நின் மீது கொண்ட நட்பே உத்தம நட்பு" என்று கூறினுள். "உடுக்கை யிழந்தவன் கை போல—ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்ற குறளுக்கேற்ப லீலாவதியின் இடுக்கணை நீக்க உதவியா யிருப்பது கையிலிருக்கும் கத்தியேயா மன்றோ?

இவ்வாறு சிந்தனை செய்த பின்னர் வெகு நிதானத்துடன் இடது புயத்தில் நன்கு குத்தி, இறக்கினுள். உதிரம் பெருகிற்று. உடல் தளர்ந்தது. மேனி வாடியது. கிடு கிடு என்று விறைத்து ஆடுகின்ற வலது கரத்தினுல் பேனுவை, பீறிட்டுப் பாயும் உதிரத்தில் தோய்த்து இவ்வாறு லிகிதமொன்று வரைந்தாள்:—

ஆராய்ச்சி மேடை.

"அபரஞ்சி அல்லது
அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்!"

எழுதியவர்:—செய்யூர் எஸ் சாரநாயகி அம்மாள்.

வெளியிட்டவர்:—எம். எஸ் ராமுலு கம்பேனி,
286, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை.

இஃது ராமுலு கம்பெனியார் வெளியிட்ட ராமுலு தசாவதாரத் தொகுதியில் முதலாவதாக வெளிவந்த நாவலாகும். இனிமையான

பிராண நாதா!

ஒரு வேளை 'பிராண நாதா' என்று தங்களை அழைக்க உரிமையுடையவளன்று என்று கூடத் தாங்கள் கருதக்கூடும் இராஜபுத்திர குலம் தூய்மையானது என்று நிரூபிக்க இவ் வரிய க்ஷத்திரிய உதிரம் தகுதியுடையது எனத் திட்டமாக நினைக்கின்றேன். இல் வாழ்வு இன்புற்றிருக்க இன்றியமையாததாகிய நம்பிக்கை என்னும் உயர் குணத்துக்கு அடியாள் ஒரு விதமான பங்கமும் விளைவிக்க வில்லையென்பதை எனது அந்திய காலத்தில் மிகப் பணிவுடன் அறிவிக்கின்றேன். இதுகாறும் என்மீது அளவிலா அன்பு பூண்டு போற்றி ஏற்றிய புனித மூர்த்தியாம் தங்களுக்கு இவ்வேழை என்ன கைமாறு செய்யப் போகின்றேன்? நிரபராதியாகிய அடியாளை மன்னிக்கவும். விடை தரவேண்டும்; வணக்கம்.

இங்ஙனம்
தங்கள்பால் அழியாத அன்பு கொண்ட அடிமை
லீலாவதி.

கடிதம் இராஜாதி ராஜன் அக்பரிடம் கொடுக்கப்பட்டது. அளவு கடந்த அன்பு வைத்த அணங்கின் அந்திய வேளையைக் குறிக்கும் லிகிதம் கண்டு பலவிதமாக எண்ணினன். அரசனது மனம் தீராத் துயரத்தால் பிணைக்கப்பட்டது. தன்னையே நொந்தான். தான் ஏதோ பெருத்த தவறு செய்ததாக மனச்சாட்சி கூறுவது போலத் தோன்றியது. லீலாவின் அறையை நோக்கி ஓடோடியும் வந்தான். அங்கு அக்பர் அரசன் கண்ணுற்றது, குற்றமொன்றும் கனவிலும் நினைவிலும் கருதாத உத்தம குணக்குன்றும் கட்டழகியின் பிணமேயாகும்.

எளிய தமிழ் நடையில் வரையப்பட்டிருக்கிறது. பணக்காரக் குடும்பத்திற் பிறந்த அபரஞ்சி என்ற பெண், அனாதையும் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவனும் தம் வீட்டுக் காரியஸ்தனுமாகிய வாலிபனைக் காதலிப்பதும், அதை யறிந்த அவளது அன்னை அவ் விளைஞனைச் சூழ்ச்சியால் அப்புறப்படுத்த முயலுவதும், அதனிடையில் பொருளாசை படைத்த துன்மார்க்கரின் கையில் அவன் சிக்கிப் பலவித தொந்தரவுகளுக் குள்ளாவதும், கடைசியில் அவன் தன் உண்மைத் தந்தையைக் கண்டறிந்து பெரும் பொருளுக்குரியவனாகிக் கதா நாயகியைத் திருமணம் புரிவதுமாகக் கதை சிருஷ்டிக்கப்பட் டிருக்கிறது. சிற்றின்ப ஊழல்களை விவரித்து எழுதப்படும் ஆபாசமான பிற நவீனங்களைப் போலன்றிச், சிறுவர் முதல் யாவரும் படிக்கத் தகுந்ததாய் இஃது காணப்படுவதை நாம் பாராட்டுகின்றோம். இதில் 104-ம் பக்கத்தில் சுந்தரமூர்த்தி என்பவன் தன் மனைவியை நோக்கி, "கிருஷ்ணவேணி! உன்னைக் கலியாணம் செய்துகொள்ளுவதற்கு முன்னால் உன் தாய் எனக்குக் கோபாலசாமியின் வரலாற்றினைச் சொன்னார்கள்" என்பதால் கிருஷ்ணவேணியின் விவாகத்தின் வரையில் அவளது அன்னை ஜீவித்திருந்தாளெனத் தெரிகிறது. 105-ம் பக்கத்தில் கிருஷ்ணவேணி தன் கணவனை நோக்கி, "என்னுடைய அன்னை என்னைப் பெற்ற நான்காம் மாதத்திலேயே மறு உலகம் புகுந்தாள்" என்று கூறுவது மேற்கண்ட கருத்துக்கு நேர்மாறாகக் காண்கிறது. எனவே இப் பிழை திருத்தப்பட வேண்டும். பொதுவாக இதைப் போன்ற நவீனக் கதைகளை எழுதும் முகத்தால் தாய் மொழிக்குத் தொண்டு புரிய முற்பட்ட நூலாசிரியை திருமதி. சாரநாயகி அம்மாளின் முயற்சி புகழ்தற்பால தாகும். பெரிய அளவில் சுமார் 160 பக்கங்கள் கொண்ட இப் புத்தகத்தின் விலை 12 அணாவாகும்.

N. V.

தனவணிகன் காங்கிரஸ் மலர்.

பர்மாவிலேயுள்ள தமிழ்ப் பத்திரிகைகளிலே, பர்மா நாட்டுக் கோட்டை செட்டியார் சங்கத்தினின்றும் இரங்கோனிலிருந்து வெளியிடப்பெறும் 'தனவணிகன்' எனும் சீரிய வாரப் பத்திரிகையும் ஒன்றாகும். இப் பத்திரிகை வெளிவந்த இந்த இரண்டாண்டுக்குள் பர்மாவிலேயுள்ள தமிழர்க்குப் பெரிதும் உதவியாகத் தொண்டு செய்துளதாக அறிகிறோம். இப் பத்திரிகை செட்டியார்களின் கஷ்டநஷ்டங்களை யெடுத்துக் கூறி, நியாயத்தையும் முறைமையையும் நிலைநாட்டத் தோற்றுவிக்கப் பெற்றதாயினும், தக்க காலத்தில் பொதுத் தொண்டாற்றுவதும் புகழத் தக்கதாம். இதற்குப் பெரிதும் காரண

மாயிருப்போர் அதன் ஆசிரியரும் நமது நண்பருமான திரு. RM. கருப்பன் செட்டியாரே யாகுமென்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிற்க, இப் பத்திரிகாலயத்திலிருந்து விசேஷ சம்பவங்கள் திரு நாட்கள் போன்றவைக்கு அநுபந்தம் வெளியிடுவதை சில காலமாக அனுசரித்து வருகிறார்கள். இதுபோது இவர்கள் இக் காங்கிரஸ் மலரையும் வெளியிட்டிருக்கிறார்கள். இஃது காங்கிரஸ் ஸ்தாபித்து 50 வருடங்களாகும் ஞாபகத்தை மூட்டப் பெரிதும் உதவியாயிருக்கின்றது. இக் கருத்துக் கொண்டே பிரசுரிக்கப் பெற்றதெனவும் அறிகின்றோம். இதிலே மற்ற மலர்கள்போல் கட்டுரைகளும் கதைகளும் காண்பதற்கில்லை; ஆனால் அவைகளினும் அதி அவஸ்யமானவைகளே பிரசுரமாயிருக்கின்றன. ஆசிரியர் இதன் ஆரம்பத்தில் காங்கிரஸ் தோன்றியது முதல், அதன் சரித்திரச் சுருக்கத்தையும் விருப்பத்தையும் தெளிவாக ஆனால் ரத்னச் சுருக்கமாக விளக்கியுள்ளார். பின்னர் தமிழ் நாட்டின் தலைவர் ஆச்சாரியாரின் வாழ்த்துரையுப், திருவாளர்கள் எஸ். சத்தியமூர்த்தி, பி. ஆர். தேசாய், 'பண்டுலா' ஆசிரியர் ஊசெய்ன் முதலியோரின் கட்டுரையும் அலங்காரமாக அமைந்திருப்பதோடு, அவ்வப்போது காஸ்கிரஸ் தலைமைப் பேற்றை யேற்ற தேசாபிமானிக எத்தனைபேரின் உருவப் படங்களும், காந்தி மகானின் பலவேறு படங்களும், பண்டித நேரு குடும்பத்தாரின் படங்களும் எழில் பெற்றுக் கண்ணைக் கவருவதா யிருக்கின்றன. இதில் வந்துள 135 ஆப்டோன் படங்களையும் ஒவ்வொரு தமிழனும் காணத்தக்க பெருமை யுடையதெனில் மிகையாகா. செலவையும் சிரமத்தையும் பொருட்படுத்தாது வெளியிட்டுதவிய இப் பத்திரிகாசிரியருக்குத் தமிழன்பர்கள் மிகவும் கடமைப்பட்டவராகும்.

கிடைக்குமிடம்:—'தனவணிகன்' ஆபீஸ்,
182, பார் வீதி, இரங்கோன்.

R. S.

"மங்கைக்கோர் மதியுரை."

எழுதியவர்:—திரு. தா. போ. மாசிலாமணிப் பிள்ளை அவர்கள்,
"தேசாபிமானி" பத்திராதிபர்.

வெளியிட்டவர்:—திரு. நா. பொன்னையா,
தலைவர், "ஈழகேசரி" நிலையம், சுன்னாகம், இலங்கை.

இஃது, சுன்னாகத்தினின்றும் வெளிவரும் "ஈழகேசரி" என்னும் செந்தமிழ் வெளியீட்டின் ஐந்தாவதாண்டின் விசேடப் பிரசுரத்

திற்காக எழுதப்பெற்று, ஷை பத்திரிகையில் பகுதி பகுதியாக வெளி வந்த கட்டுரையைச் சேர்த்து இச் சிறு நூலாக வெளியிடப்பட்டிருக் கிறது. இதன்கண் பெண்களே யன்றி ஆண்களும் அறிய வேண்டிய வகையில் சரீர சுகம், அழகு, உணவு, பானம், வாயு, தேகாப்பியாசம், உற்பத்தியின் ரகசியம் என்பது போன்ற 13 தலைப்புகளின் கீழ் எளிய தமிழ் நடையில் பல கருத்துக்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டுப் பெண்கள் இது போன்ற நூல் களைப் படித்து நல்லறிவு பெற வேண்டுவதவசியம். எனவே, பெண் பாடசாலைகளில் உபபாட புத்தகமாகவும் இஃது படிப்பிக்கத் தகுந்த தாம். பெற்றோர்களாயினோர் இந் நூலின் பிரதிகளை வாங்கிப் பெண் களுக்குப் பரிசிலாக வழங்குவது மிகவும் நன்மை யென்போம். தமிழ் நாட்டுக்கும், தமிழ்மொழிக்கும் "ஈழகேசரி" ஆற்றிவரும் தொண்டு இந் நூலிலும் பிரதிபலிக்கின்றது. கிரவுன் $\frac{1}{8}$ அளவில் 32 பக்கங்கள் கொண்ட இப் பிரசுரத்திற்கு விலை குறிக்கப்படவில்லை.

N. V.

திருக்குறள் நாட்குறிப்பு (1935).

திருக்குறளைப்பற்றியும் அதன் மேன்மையைப்பற்றியும் அறி யாத தமிழனே இல்லை. ஆனால். அதன்படி யொழுகாதோரே எண் ணிலர். இக் குறை ஏனோவெனில் போதியவாறு குறளைக் கற்காத பெருங் குறையினாலேயே யென்பது குறையாகா. நாற்றிசைப் புல வரும் ஏற்றிப் போற்றிப் பொன்னேபோல் பூசித்துவரும் குறளை—தமிழ் நாட்டினின்றும் தோன்றிய குறளை—எக் காலத்திற்கும் எவ் வருணத்தாருக்கும் ஒக்க அமைந்த ஒரு நூலாயிலங்கும் குறளைத் தமிழர்கள் அனைவரும் அறிந் தொழுகவேண்டுவது அவஸ்யம், அவஸ்யம். அதனை வலியுறுத்தவே இந் நாட்குறிப்பு சென்ற 1934-ம் ஆண்டு தொடக்கம் வெளியிடப்பட்டு வருகிறதெனத் தெரிகிறது. நானாவழிகளில் குறள் தொண்டாற்ற வேண்டும். இன்று இம் முறையில் வெளிவந்துளது கண்டுவகையுறுகின்றோம்.

இத் தினசரிக் குறிப்பு தினமும் ஓர் பக்கம் வீதமுடையதாய், அப் பக்கம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறளும் அதன் அரும் பொருளும் பெற்றிலங்குகின்றது. மிகமிகச் சாதாரணமானவர்களும் அதிசிரத்தை யெடுக்காதோரும் தினமும் ஓர் குறளை மனனஞ் செய் யவும் பொருளை யுணரவும் இம் முறை மிகவும் சௌகர்யமாக விருக் கிறது. இவ் விதமாக நாலாண்டிற்குள் 1330 குறளையும் கற்றுக் கருப்பொரு ளறிந்துவிடலாம். ஒரே முறையில் இருவிதப் பெரும்

பயனை இத் தினசரிக் குறிப்பு (Diary)க் தருவதால், தமிழன்பர்கள் அவஸ்யம் இதனையே வாங்கி உபயோகிக்க வேண்டுகின்றோம். இதில் மற்ற நாட்குறிப்புகள்போல் அவஸ்யமான கோர்ட்டுச் செய்திகள், ஸ்டாம்பு கட்டணம், தபால்—தந்தி விகிதங்கள், வட்டி, சம்பளமாகிய அட்டவணையும், ஹிந்து—முஸ்லீம்—கிறிஸ்தவ விசேட-விரத நாட்கள், பெரியோர்கள் குருபூஜை, திருநக்ஷத்திரங்கள், இராகு—குளிகை, வாரசூலை, கிரகணம் முதலிய காலக் குறிப்புகளும், பஞ்சாங்கமும் உடையதா யிருக்கிறது.

சாதாரணப் பதிப்பு விலை 0—5—0.
உயர்ந்த ,, ,, 0—6—0.

பிரசுரித்தவர்கள்:—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

R. S.

"கதா ரதம்"

எழுதியவர்:—ஆசிரியர், "தேவேந்திரன்."

வெளியிட்டவர்:—ஜம்புநாதன் புஸ்தக சாலையார்,
14, பள்ளியப்பன் தெரு, சாவுகார் பேட்டை, மதராஸ்.

இந்திய வேதத்தை ஆதாரமாகக் கொண்டு சீர்திருத்திய இந்து மதத்தை இந் நாட்டில் விளங்கச் செய்தவர் தயானந்த சரஸ்வதி சுவாமிகளாவர். ஹிந்து சமூகம் விக்கிரக ஆராதனையிலும், வீண் சடங்காசாரங்களிலும், மூடப் பழக்க வழக்கங்களிலும் ஆழ்ந்து, இஸ்லாம், கிறிஸ்து மார்க்கங்க ளென்னும் வெள்ளத்தால் தாக்குண்டு, நவீன விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிக ளென்னும் கற்களால் மோதப் பெற்று சிதைவுற்று வருந் தருவாயில் பழமையான ஆரிய (வடமொழி) வேதத்தின் உண்மைப் பொருள்களை விளங்கவைத்து, அவ் வாதரவின் மீது சீர்திருத்தப் பெற்ற ஹிந்து மதத்தை—ஆரிய சமாஜத்தை—நிலைநாட்டி, ஹிந்து சமூகத்தைக் காக்க முற்பட்ட தயானந்தரின் முயற்சி என்றும் போற்றத் தக்கதாகும். அவரது ஆராய்ச்சியால் தோன்றிய 'சத்யார்த்தப் பிரகாசம்' போன்ற நூல்களின் கருத்துக்களைத் தமிழகத்திற்கு அள்ளிக் கொடுக்கும் பொறுப்பை யேற்றுத் திறம்பட நிறைவேற்றி வரும் நண்பர் திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்களைப் புதிதாகத் தமிழருக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. ஆரிய சமாஜக் கருத்துக்களைத் தமிழில் கொடுக்க முனைந்தவர்கள் பலர். அதில் நாமும் அடங்குவோம். ஆயினும் அம் முயற்சியில் வெற்றியுற்றவர் நண்பர் ஜம்புநாதன் ஒருவரே யென்று கூறுவதற்குத்

ஆசிரியக் குறிப்புகள்.

மற்றொரு புதிய போஷகர்

இம் மதியிலே நமது 'பாரதி'க்குப் புதிதாகச் சேர்ந்துள்ள போஷகரைப்பற்றிச் சிறிது எழுதுவது அவஸ்யமாகும்.

நமது பர்மாப் பிரயாணத்தின்போது பெரிதும் உதவியாக இருந்தவர்கள் நகரத்தார்களாகும். இச் சமூகத்தைப்பற்றியும் இவர்க

தடை இல்லை. இவர் இதுகாறும சத்தியார்ததப் பிரகாசம், திருமூர்த்திகளின் உண்மை, யஜுர்வேதக் கதைகள், வேத சந்திரிகை முதலிய அரிய நூல்கள் பலவற்றைத் தமிழில் எழுதி உதவியதே போல், இக் "கதா ரதம் அல்லது பெரியசாமி படையாச்சி முதலிய புதிய கதைகள்" என்ற இந் நூலையும் "தேவேந்திரன்" என்ற புனைப் பெயரால் அச்சிட்டுத் தமிழ் நாட்டுக்கு வழங்கியுள்ளார். இஃது சுதந்திர நூலாகக் காணப்படுகிறது. இதில் சுமார் 19 வித கதைக் கட்டுரைகள் தென்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதிய கற்பனையை—உண்மையை—விளக்கும் வகையில் எழுதப்பட்டிருப்பதைக் கண்டு களித்தோம். கதை விளக்குஞ் சித்திரப் படங்கள் சிலவும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. மூட நம்பிக்கைகளையும், பொருளாதாரப் புரட்டுகளையும் கண்டித்து, போலிச் சாமியார் வேடங்களையும், புரோகிதர் பித்தலாட்டங்களையும், ஞானி—வைத்தியன்—வக்கீல்—சாஸ்திரி முதலியோரின் ஆடம்பரங்களையும் வெளிப்படுத்தி, கன்னியர் கஷ்டம், எளியோர் துயரம், பணக்காரர் யோக்கியதை, சுயநலமிகளின் ஏமாற்றம், ஹிந்து சமூகம் அழிவதற்குரிய காரணம் முதலியவற்றை விளக்கி தெளிவான தமிழ் நடையில் சிறு கதைகளாக இதில் எழுதியிருப்பது வாசகர்களுக்குப் பகுத்தறிவை யூட்டு மென்றே கருதுகிறோம். போலிச் சமய ஒழுக்கங்களையே உண்மையெனக் கொண்டு கடவுளின் பெயரால் பல கொடுமைகளைப் புரிந்து வரும் ஹிந்து சமூகத்திற்கு இத்தகைய நூல்கள் நல்லறிவு கொளுத்துவனவாகும். எனவே தமிழராயினோர் அனைவரும் இதனைப் படித்து இதன் உண்மைகளைக் காண வேண்டுமென விழைகின்றோம். நல்ல தாளில், கிரவுன் $\frac{1}{8}$ அளவில், அழகிய முறையில், சுமார் 180 பக்கங்களில் முகப்புப் படத்தோடு கூடிய அட்டையுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை குறிக்கப்படவில்லை.

N. V.

ளது தொழில் முதலியவைகளைப்பற்றியும் அனைவரும் அறிந்த விஷயமே. ஆனால் இன்று பர்மா நாட்டிலே இச் சமூகத்தினர் பெரும்பாலும் தமது தொழிலைச் செய்ய முடியாத விதத்தில் நிலச் சுவான்தார்களாகி யிருப்பது ஆச்சர்யப்படத்தக்கது. நெல் விலை வீழ்ச்சியாலும், உலகத்தின் பொருளாதார நிலை சீர்கெட்டிருப்பதினாலுமே இவ்விதம் நிலத்தை ஒப்புக்கொண்டு, துவேசங்கொள்ளும் பர்மியர்களின் மத்தியில் பல்வேறு கஷ்டங்களுக் கிடையில் இவர்கள் வாழ வேண்டியிருக்கிறது. இந் நிலையிலும் இவர்கள் ஆவன செய்வதில் பெரிதும் கவனம் செலுத்தா திருப்பதில்லை யெனக் கூறலாம்.

பர்மாப் பிரயாண காலத்திலே இச் சமூகத்தினரில் பலரை நன்கு அறிய முடிந்தது. அவர்களின் தேசிய ஆர்வமும் மொழிப் பற்றும் பிரகாசமடையா திருப்பதற்குக் காரணம் பொருளாதார நிலையே யென்பது தவறாகாது. 'பாரதி'யின் கொள்கையையும் போக்கையும் அதன் அவஸ்யத்தையும் உணர்ந்த இவர்களில் வாலிபர் முதல் முதியோர் ஈறாகப் பலர் போஷகராக விருந்து ஆதரிக்க ஆர்வமுடையவர்களாக விருந்தும் பணக் கஷ்டம் என்ற அந்த ஒரே காரணத்தால் சாத்தியமற்றிருப்பதை யெண்ணி யெண்ணி வருந்தியதை நாமறிவோம். அவர்களது அன்பும் ஆர்வமும் ஆதரவும் சமீப காலத்திற்குள் பரிணமிக்குமெனும் நன்னம்பிக்கை நமக்குண்டு. அதனை மெய்ப்பிக்க இதுபோது புதிதாகச் சேர்ந்துள்ள இப் போஷகரே முன் நிற்கின்றார் என்பதைக் குதூகலத்துடன் அறிவிக்கின்றோம்.

ஆண்டிலே இளமையும் அறிவிலே முதுமையும் வாய்க்கப்பெற்ற அன்பரான **திரு. கா. இராமநாதன் அவர்கள்** நம்மை இதுமுதற் கொண்டு 'பாரதி'யின் போஷகர்களிலே ஒருவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் அறிவித்துள்ளார். இவ் வாலிபமணியை பர்மா பிரயாணத்தின்போது அறிவோம். நல்லன நாடி, அவஸ்யமானவைகளை ஆர்வத்தோடு செய்யும் இயல்பினராக விருக்கும் இவ் வரிய அன்பர் தற்போது மைனு (Myanaung] என்னும் நகரிலே பணியாற்றி வருகிறார். இவர் செல்வம் நிறைந்த குடும்பத்திலே பிறந்து, காலத்தின் கோலத்தால் அறிவும் உழைப்புமே தனமாகக் கொண்டிருக்கும் தந்தையைப் பெற்றுள்ள யுவராகும். இவரது தவத் தந்தையாரான திரு. காசி செட்டியார் அவர்கள் தற்போது பர்மாவிலே ஓர் பிரபல பாங்கியில் மானேஜராக இருந்துவருகிறார். இவர்களது சொந்தவூர் புதுக்கோட்டை சமஸ்தானத்திலே அரிமளம் என்பதாகும்.

பண நெருக்கடியும் பல்வேறு சிரமங்களும் சூழ்ந்துள்ள இது காலை தனது விருப்பத்தைத் தந்தையா ரறிவித்து, அவரது பூரண

அனுமதி பெற்று, 'பாரதி'யின் போஷகர்களிலே ஒருவராகவிருக்க முன்வந்ததுபற்றி மிகுதியும் மகிழ்ச்சியுறுகின்றோம். தந்தையும் தனயனும் இது விஷயத்தில் ஒருமுகமாக விருப்பதை யறிய நமது சந்தோஷம் எல்லையற்றதாகும் நல்லன செய்வதில் ஆர்வமுள்ள புத்திரர்களைப் பெற்று பேறுற்றுள்ள திரு. காசி செட்டியார் அவர்களுக்கு நமது நன்றியையும் வந்தனத்தையும் உரிமையாக்குவதோடு அன்பும் அறிவும் அருளும் நிறம்பிய இக் குடும்பத்தார்களுக்கு இறைவன் தண்ணருள் சுரக்குமாறு இறைஞ்சுகின்றோம். திரு. கா. இராமநாதன் அவர்களுக்கும் எம்மிறை நலம்பல நல்க விழைகின்றோம்.

அகில இந்திய சங்கீத மகாநாடு

இம் மகாநாடு காசியில் நவம்பர் 27-ந் தேதி முதல் டிசம்பர் 3-ந் தேதிவரை நடந்தது. இதற்கு சங்கீத வித்வான்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். மகாநாட்டில் கச்சேரிகளும் நடந்தன. தமிழ் நாட்டிலிருந்தும் சிலர் போயிருந்தனர். அவர்களில் வீணை தனத்தின் குமாரிகளின் வாய்ப் பாட்டும். கும்பகோணம் மடத்து நடேசம் பிள்ளையின் நாதஸ்வரமும் புகழப்பட்டன.

அங்கு நடந்த கச்சேரிகள் எல்லாவற்றிலும் தலைசிறந்து விளங்கியது பாலசரஸ்வதியின் நாட்டியமே. இவருடைய கச்சேரி 2 மணி நேரம் நடந்தது. மற்ற யாருக்கும் இவ்வளவு நேரம் கச்சேரி செய்ய அனுமதி இல்லை. அதிலிருந்தே இவருடைய நாட்டியத்தின் சிறப்பு விளங்குகிறது.

அரசியலும படிப்பும்

நம் தேசத்தில் அதிகார வர்க்கத்தினர் நினைத்த நேரத்திலெல்லாம் அரசியலுக்கும் மாணவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் கூடாதென்று சொல்லிக்கொண் டிருக்கிறார்கள் இதைப்பற்றி டில்லியில் நடந்த பத்தாவது அகில இந்திய கல்வி மகாநாட்டில் டாக்டர் சாகிர் ஹுஸேன் சொல்லுகிறார்:

"நம் கல்வி முறையில் இரண்டு மாறுதல்கள் மிக அவசியம். முதலாவது கல்வித் திட்டத்தை முழுதும் இந்திய மயமாக்கவேண்டும். கல்வியாளர்கள் என்று நினைக்கும் இளைஞர்கள் தங்கள் சொந்தக் கலைகளின் அழகைக் கண்டு களிக்காத குருடர்கள்; தங்கள் சங்கீதத்தின் இனிமையை உணராத செவிடர்கள்; தங்கள் பாஷையை இழிவாக நினைப்பவர்கள்; இவர்களுக்குத், தங்களுக்குச் சொந்தமா

னவை எல்லாம் இழிவானதாகக் காணப்படுகின்றன; அந்நிய நாட்டாருடையதெல்லாம் பெருமையுள்ளதாகத் தோன்றுகின்றன. இவர்கள் வாயிலிருந்து வருவது அந்நியனின் பேச்சு; நெஞ்சத்தில் உதிப்பது அந்நியரின் ஆசை இவர்கள் தங்கள் சொந்த ஜனங்களிடையே அந்நியர்போ லிருக்கின்றனர். இம்மாதிரி இளைஞர்களை உற்பத்தி செய்துகொண் டிருக்கும் கல்வித் திட்டத்தைக் கண்டிப்பாய் மாற்ற வேண்டும். இரண்டாவது, நமது பள்ளிக்கூடங்கள் வாயால் போதிப்பதைச் செய்கையிலும் காட்டவேண்டும்.''

பையன்களுக்கு அரசியல் பொறுப்பு என்ன என்பதைப் போதிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்:

''அரசியலுக்கும் கல்விக்கும் யாதொரு சம்பந்தமும் கூடாது என்று இரவு பகலாய் உரைக்கிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால், இப்போதிருக்கும் கல்வித் திட்டம் அரசியல் நிரம்பியது என்பதே. தேசிய வாழ்க்கையையும் அறிவு வளர்ச்சியையும் பல துறைகளிலும் விருத்திபண்ணாமல் குமாஸ்தாக்களை மட்டும் உண்டாக்கும் இக் கல்வி அரசியல் நிரம்பியதல்லாமல் வேறென்ன? இத் திட்டம், தலைமுறை தலைமுறையாக நம் வாலிபர்களின் உள்ளத்திலிருந்த தைர்யம், புது முயற்சி, குறுகிய சுயநலமின்றிப் பரநலத்திற்காகப் பாடுபடுங் குணம், வாழ்க்கையில் சந்தோஷம், கற்பனைத் திறனில் பெருமை முதலியவைகளை அழித்து, இவர்களை நம்பிக்கையிழந்த, பரந்த நோக்கமற்றவர்களாய், பணத்திற்காக அடிமைத்தனத்தை ஏற்கும் விற்பனைப் பொருள்களாய் ஆக்கிவிட்டது. இந் நிலைமையை மாற்றவேண்டிய சமயம் வந்துவிட்டது. சுயநலத் தேட்டத்திற்குப் பதிலாக சமூக ஊழியம், அறிவை ஒரு வழியில்மட்டும் விருத்தி செய்யும் புத்தகப் பூச்சிகளுக்குப் பதிலாக மானிட உய்வுக்கு வேண்டிய பல துறைகளிலும் பாடுபடுவது, வெறும் அறிவைச் சேகரித்து வைப்பதற்குப் பதிலாக அதைச் சரியான வழியில் உபயோகப்படுத்துவது—இவை நம் கல்விக் கழகங்களின் லக்ஷியமாக இருக்கவேண்டும். இது அரசியல் என்றால் பிறகு அரசியலே கல்வியின் உயிர் என்பேன்.''

டாக்டர் சாகிர் ஹுசேன், ஜமியா மிலியா இஸ்லாமியாவின் பிரின்சிபால். இவருடைய வார்த்தைகள் மிக கவனிக்கத் தகுந்தவை.

கூட்டுக் கமிட்டி அறிக்கை

சென்ற மாதம் பூனாவில் கூடிய அகில இந்திய மிதவாதிகள் மகாநாட்டில் ''கூட்டுக் கமிட்டி அறிக்கையை ஒட்டி ஏற்படுத்தப்

போகும் எந்த அரசியலமைப்பும் தேவையில்லை" என்ற தீர்மானத்தை ஆதரித்துத் தலைவர்கள் பேசியதில் ருசிகரமான சில பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கனம் சீனிவாச சாஸ்திரியார்:

"வெள்ளைக் காகிதத் திட்டத்தை ஒட்டிய புதிய அரசியலமைப்பு வராமலிருக்கும்படி என்னால் தடுக்க முடியுமானால் தடுத்துவிடுவேன் என்று அத் திட்டம் வெளியானதும் நான் சொன்னேன். கூட்டுக் கமிட்டி அறிக்கை அத் திட்டத்தைவிட மோசமாயிருக்கிறது. ஆகையால் நான் அப்பொழுது கொண்ட அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவேண்டிய அவசியமில்லை."

கூட்டுக் கமிட்டி அறிக்கையிலுள்ள குறைகளை எடுத்துக் காட்டிவிட்டு சாஸ்திரியார் சொன்னதாவது:

"இந்த நிலைமையில் மிதவாதக் கட்சி, சர்க்காருடன் ஒத்துழைப்பதென்பது முடியாத காரியம். நமது நலனை நாடும் ஒரு நண்பனுடன் ஒத்துழைப்பதில் அர்த்தமுண்டு. ஆனால் நம்மீது எள்ளளவும் நம்பிக்கை காட்டாதவர்கள், நமது அபிப்பிராயங்களையும், வேண்டுகோட்களையும் சிறிதும் மதியாதவர்கள், நமது விருப்பங்களுக்கு முற்றிலும் எதிரிடையாக ஓர் அரசியலமைப்பை ஏற்படுத்துபவர்கள், இப்பேர்ப்பட்டவர்களுடன் என்ன ஒத்துழைப்பு வேண்டியிருக்கிறது? இவ்வித ஒத்துழைப்பு, ஒத்துழைப்பு அல்ல—தற்கொலை என்றுதான் நான் சொல்வேன். எத்தனையோ பேர் அப்படித் தற்கொலை செய்துகொள்ள ஒருசமயம் தயாராக இருக்கலாம். ஆனால் நமது கட்சி அதற்குத் தயாராயில்லை."

சர். சமன்லால் சேதல்வாட்:

வியாபார விஷயங்களை ஒட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்புகளை பலமாகக் கண்டித்து, கப்பல் தொழிலைப்பற்றிக் கூட்டுக் கமிட்டி அறிக்கையில் கண்டிருக்கும் பாகத்தைப்பற்றி அவர் சொன்னதாவது: "பிரிட்டிஷார் இந்தியக் கப்பல் கம்பெனிகளுக்குக் காட்டும் சலுகைகளை பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளுக்கு இந்தியரும் காட்டவேண்டுமென்றும், பிரிட்டிஷ் கம்பெனிகளுடன் இந்தியக் கம்பெனிகள் போட்டிபோட முடியுமென்றும் சொல்வதைவிடப் பெரிய விதண்டாவாதம் வேறொன்றும் கிடையாது."

சர். சேத்ன:

கூட்டுக் கமிட்டி அறிக்கையில் கண்டிருக்கும் அரசியலமைப்பை மாற்றி வேறொரு நல்ல அமைப்பை ஏற்படுத்துமாறு பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறோம். அப்படி மாறுதல் செய்தாலொழிய

34-6-2-1

இந்தியாவில் திருப்தியும் அமைதியும் ஏற்படாது. நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்டுவிடவில்லை. ஆஸ்திரேலியா, கானடா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் அனுபவித்துவரும் உரிமைகளையே நாங்களும் வேண்டுகிறோம். இதைப்போல ஒரு அரசியலமைப்பை வேறெந்த நாட்டிற்கும் வழங்க பிரிட்டிஷார் தைரியத்துடன் முன்வந்திருக்க மாட்டார்கள்"

இன்னும் பலர் இதைப்போன்ற வீரமொழிகள் பேசினர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

என்ன பயன்—இத் தீர்மானங்கள் பிரிட்டிஷாரின் மனத்தை மாற்றப்போவதில்லை. தன் கையே தனக்குப் பலம்--போதிய தியாகம் செய்ய நாம் தயாராயிருந்தாலொழிய சுயராஜ்யம் நமக்கு வரப் போவதில்லை.

நமது வேண்டுகை

சில மாதங்களாக நமது "பாரதி" காலந் தவறியும், இரண்டு மாதங்களாகச் சேர்ந்தும், விசேஷ கட்டுரை—கதை—குறிப்பாசியவைகள் போதியவாறிடம்பெறாமலும் வெளிவந்துளதை அறியலாம். அக் குறைபாடுகள் இச் சஞ்சிகையினு மில்லாமலில்லை யென்பதை யறிவிக்க வருந்தாதிருப்பதற்கில்லை. ஓர் பக்கம் பண நெருக்கடியினு லும் மற்றோர் பக்கம் காரியாலயத்தை சென்னைக்கு மாற்றுவதற்கு வேண்டிய சாதகங்களை யடைவதற்காக அலைச்சல் அதிகப்பட்டிருப்பதினாலுமே இத் தவறுகளுக்கெல்லாம் காரணமாகும். இவ் விரண்டில் ஒன்றை நீக்கி ஒன்றைக் கொள்வோமெனினும் சாத்தியமில்லை. பங்குனித் திங்கள்வரை சிரமந்தான். சென்னைக்குப் பத்திரிகையை மாற்றுதவரை தவறிழைக்காதிருக்க முடியாது. இவைகளை யெல்லாம் உத்தேசித்தே எப்படியும் சித்திரையில் 'பாரதி'யை சென்னையினின்றும் வெளியிடுவதாகத் தீர்மானித்து உறுதியுடன் பணியாற்றி வருகின்றோம். இறைவனதருளாலும் அன்பர்களின் ஆதரவாலும் இப் பெரு முயற்சி சிறந்த முறையில் நிறைவேறும் அந் நன்னாளை எதிர்பார்ப்போமாக. அது பரியந்தம் அன்பர்கள், மேலும் சிறிது காலம் குறிப்பிட்டுள்ள தவறுபோன்றவைகளைப் பொருட்படுத்தாது மன்னிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

197904

பொறுப்பாசிரியர் பா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரஸில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Cardamom Sale Company, Limited.

ஏலக்காய் விற்பனைக்-
-கம்பெனி, லிமிடெட்,

தேவாரம்.

1913-ம் வருஷத்திய 7-வது இந்தியன் கம்பேனி ஆக்டுப்படி ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

மூலதனம் ரூ. 2,10,000.

ஏல விவசாயிகளையே அங்கத்தினராகக் கொண்டது. அங்கத்தினர்கள் ஏலத் தோட்டத்தில் விளையும் சரக்குகளை வட இந்தியாவிலிருக்கும் பல முக்கிய பட்டணங்களுக்கு அனுப்பியும், ஐரோப்பா அமெரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு அனுப்பியும் விற்றுக் கொடுக்கிறோம்.

தங்கள் ஏல மகசூலை நல்ல விலைக்கு விற்க வேண்டுமானால், ஏல விவசாயிகள் தங்கள் சரக்குகளை எங்கள் மூலமாய் விற்க வேண்டுகிறோம்.

O. R. கோண்டேலு செட்டியார்,

மானேஜிங் டைரக்டர்,

ஏலக்காய் விற்பனைக் கம்பெனி, லிமிடெட்,

தேவாரம்.

மதுரை ஜில்லா.